ரமணிசந்திரன்



கொடிக்கு காய் பாரமாகுமா?

கொடிக்கு காய் பாரமாகுமா?

ரமணிசந்திரன்

ஒரு வாரமாக ரஞ்சனுக்கு ஒரே அலைச்சல், கிடைத்த இடத்தில் கிடைத்ததை வாயில் அள்ளிப் போட்டுக் கொண்டு, வேலையை விரைந்து முடித்ததில் வேலை இரண்டு நாட்கள் முன்னதாக முடிந்து போயிற்று!

பழைய சரக்குகளுக்கான பண வசூல், புதியவைகளுக்கான ஆர்டர்கள், குறைகள் முறையீடுகளுக்கான சமாதானங்கள் எல்லாமே பெருமளவு வெற்றிகரமாகத்தான் நிறைவேறி இருந்தன.

ஆனால் என்ன, நாக்குதான் செத்துவிட்டது.

ஒரு வாரம் கழித்து, இன்று வீட்டுச் சாப்பாடு சாப்பிடப் போகிறோம் என்ற எண்ணமே சுகமாகத்தான் இருந்தது.

கூடவே அந்த வாண்டு வீட்டில் இருந்தால், இன்னமும் நன்றாக இருக்கும். அந்தக் கிலுகிலுப்பையே, எந்த மாதிரி சூழ்நிலையையும் சந்தோஷமாக்கிவிடும்.

'இன்றைக்கு நாலைந்து கிலோமீட்டராவது சாப்பிட்டிருப்பேன், மாமா! இதற்கு மேல் முழுங்கினால் வயிறு வெடித்துவிடும் என்று அம்மா மிரட்டி மேலே சாப்பிடாமல் நிறுத்தி விட்டார்கள்!' என்று கண்களை மலர்த்தி, இமைகளைப் படபடவென்று தட்டியபடி கூறுவான்.

கிலோமீட்டரை எப்படிம்மா சாப்பிட முடியும் என்று கேட்டால், மாட்டினோம் 'உலக மகா அசட்டு பட்டம் இலவசமாகக் கிடைக்கும்!

முதலில் விளக்கம் வரும் "நூடுல்ஸ் மாமா. நீட்டி வைத்தால் அவ்வ்...வளவு நீளம் வரும். அவ்வளவு முழுங்கி இருக்கிறேன். அதைத்தான் சொன்னேன். இது கூடக் கண்டுபிடிக்கத் தெரியாமல், கல்லூரிக்குப் போய், நீங்கள் என்ன மாமா படித்தீர்கள்? மெடல் வேறு வாங்கி இருக்கிறீர்கள்? உங்கள் வகுப்பில் மற்ற அத்தனை பேருமே வடிகட்டின மக்குப் பிளாஸ்திரிகளா?" என்று இடையிட்டுப் பேச இடமே கொடுக்காமல், மடமடவென்று வேகவேகமாகக் கொட்டித் தீர்த்து விடுவாள்.

கேட்டுவிட்டுச் சிரிக்கத்தான் முடியும்!

கூடச் சேர்ந்து சிரித்தபடி. அவள் மட்டும் இல்லையானால், அவர்கள் வீடு என்னாயிருக்கும்? நினைப்பதற்கே அவனுக்கு அச்சமாக இருந்தது.

அச்சமாகவும், ஆத்திரமாகவும்!

அக்காவின் திருமணம் அவனுக்கு ஒரு கனவு போலத்தான் இருந்தது. ஆனால், அந்தத் திருமணம் பற்றி அவனுக்கு மிகவும் தெளிவாக நினைவு இருந்தது எல்லாம், ஒன்றே ஒன்றுதான். அது சந்தோஷமானது அல்ல.

தவில் நாதசுரம் முழங்க கல்யாண மாப்பிள்ளை வந்ததும், அப்பா மாலை, தங்கச் சங்கிலி எல்லாம் போட்டு அவரை வரவேற்றதும், அப்புறம் அவரது கையைப் பிடித்துக் கூட்டி வருமாறு பெரியவர்கள் அவனைப் பணித்ததும், சந்தோஷமாக, அவன் மணமகனின் கையைப் பிடித்ததும்... தெளிவற்ற கனவு போலத் தோன்றும் இவை அனைத்துமே, அப்போது குதூகலமாகத்தான் இருந்திருக்கும்!

பெரிதாக நினைவு இல்லை என்றாலும், குட்டி மைத்துனன் என்று ஏதோ யாரோ சொல்ல, வெட்கப்பட்டுச் சிரித்தது லேசாக நினைவில் இருந்தது. அவனுக்கும் அக்காவுக்கும் பதினோரு வயது வித்தியாசம். அப்போது ஒன்பது வயதுதான் அவனுக்கு.

எனவே எல்லாமே பிரமிப்பாகவும் சந்தோஷமாகவும், பெருமையாகவுமே இருந்தது கூட. லேசாகத்தான் நினைவு வரும். அதுவும் கஷ்டப்பட்டு யோசித்தால்!

ஆனால்... அந்த ஒன்று மட்டும் எப்போது நினைத்தாலும் மனதுக்குள் திரைப்படம் ஓடுவது போல, அப்படியே நினைவு இருந்தது. அக்கா திருமணம் என்ற வார்த்தை கேட்டாலே போதும், வினாடிக்குள் அப்படியே நினைவு வந்துவிடும்!

வெட்கச் சிரிப்புடன் மாப்பிள்ளையை அண்ணாந்து பார்க்க முயற்சி செய்தது... மாப்பிள்ளை ரொம்ப உயரம் இல்லை என்றாலும் அன்றைய ரஞ்சன் அண்ணாந்துதான் பார்க்க வேண்டியிருந்தது.

ஆனால், அவன் அப்படி முயலும்போதே, மாலை மறைவில் அவன் பிடியில் இருந்து அத்தான் அவரது கையை விலக்கிக் கொள்ள முயற்சிப்பதை அவன் உணர்ந்தான்! பிடிக்காததைத் தொட்டுவிட்ட மாதிரி ஒரு வேகத்தோடு கூடிய உதறல்!

பெரிய அதிர்ச்சியாக இருந்தது, அவனுக்கு. கொஞ்ச நஞ்சம் அல்ல, மாபெரும் அதிர்ச்சி!

ஆசையும் ஆனந்தமுமாக மணமகனின் பெரிய கையை அவன் பற்றியிருந்தான்.

ஆனால், ஏனோ அத்தானுக்கு அது பிடிக்கவில்லை! அதை மட்டும்தானா, அவனையுமே பிடிக்கவில்லையா?

என்ன அநியாயம்?

ரோஷத்தோடு, மணமகனின் கையை அவனும் விட்டுவிட்டான். இந்த சம்பவம் மட்டும்தான், அந்தக் கல்யாணம் பற்றி அவனுக்குத் தெளிவாக நினைவிருந்த ஒரே விஷயம்!

அதன்பிறகு அவ்வப்போது அக்கா வந்து அழுதது நினைவு உண்டு. ஆனால், அக்கா அழும்போது, பெரியவர்கள் பேச்சை வாய் பார்க்காதே என்று அவனை அங்கிருந்து விரட்டி விடுவார்கள்.

ஆனால், அப்புறம் கொஞ்சம் சந்தோஷம்! வீட்டில் எல்லோர் முகங்களிலும் மகிழ்ச்சி தெரிந்தது. வீட்டில் விசேஷங்கள் நடந்தன. அக்காவுக்கு நிறைய வளையல் அடுக்கினார்கள்.

அக்காவுக்கு அழகான ஒரு குட்டிப் பாப்பா பிறந்தது. அவன் கைவிரலை அந்தப் பாப்பா கெட்டியாகப் பிடித்திருந்தது. அத்தானுக்குப் பிடிக்காவிட்டாலும், அக்கா பாப்பாவுக்கு அவனைப் பிடித்திருக்கிறதே என்று அவனுக்கு ரொம்ப சந்தோஷம்!

பாப்பாவோடு அக்கா சென்னைக்குப் போனபிறகு, என்னமாக அழுதான்!

ரொம்ப நாள்... பல மாதங்கள் கழித்து அக்கா மறுபடி வந்தாள். உடல் மெலிந்து, கறுத்து... கண்களுக்கடியில் ரொம்பக் கறுப்பாக இருக்கிறதே என்று அம்மா வருத்தப்பட்டார்கள்.

அப்புறமாக இன்னொரு விசேஷம். அதிலும் ரஞ்சன்தான் முக்கியஸ்தன்! பட்டு வேஷ்டி கட்டி உட்கார வைத்து, அவன் மடியில் பாப்பாவை வைத்துக் காது குத்தினார்கள்.

வீரென்று அலறிய பாப்பா. வாயில் சாக்கலேட்டை வைத்ததும் அழுகையை நிறுத்திவிட்டது.

அவனுக்கு பெருமைதான். அதிலும் பாப்பா அழுகையை நிறுத்தியதும், இன்னும் பெருமையாக இருந்தது. தோடு பளிச் பளிச்சென்று வெட்டியது. வைரம்!

ஆனால், தோடு, சின்னதாக இருப்பதாக அக்கா மாமியார் கத்தினாள். கத்திவிட்டுச் சாப்பிடாமலே போய்விட்டார்கள்.

ஆனால், ஒன்றரை வயதுக் குழந்தைக்கு என்ன அளவில் தோடு போடுவார்கள்?

கடைசியாக, ஒருநாள் எல்லோருமாக... அத்தான், அவருடைய பெற்றோர், இன்னும் யாரோ உறவினர் எல்லோருமாக அவர்களது வீட்டுக்கு வந்தார்கள்.

"எங்கள் ரத்தம், எங்கள் வாரிசு" என்று ஏதோ கூறினார்கள்.

சத்தம் வலுக்கவும், படித்துக் கொண்டிருந்த ரஞ்சன் எழுந்து போய்ப் பார்த்தால், அக்கா கதறக் கதற, பாப்பா கத்தி அழ, அந்த அத்தை மாமா எல்லோருமாக சேர்ந்து, பாப்பாவை அக்காவிடமிருந்து பிடுங்கிக் கொண்டு போனார்கள்.

அக்காவும் கதறிக் கொண்டே அவர்கள் பின்னாலே ஓடினாள்.

பாப்பாவைத் திருப்பிப் பிடுங்கி வரும் வேகத்தில், அவளை முந்திக் கொண்டு அக்காவின் உறவினர்கள் பின்னே ரஞ்சனும் ஓடினான்.

ஆனால், அதற்குள் "ஐயோ என் பெண்ணைப் பாருங்களேன்!" என்று அம்மாவின் அலறல் கேட்டுத் திரும்பிப் பார்த்தால், கண் மூடி விழுந்து கொண்டிருந்த அக்காவைத் தாங்கிப் பிடித்தபடி, அம்மாவும் சரிந்து கொண்டிருந்தார்கள்!

"ஐயோ!" என்று அவர்களுக்கு உதவி செய்ய, திரும்பி ஓடிச் சென்றான் ரஞ்சன்.

அக்கம் பக்கத்தோர் கூட்டம் கூட, அக்கா வீட்டாரோடு வாதாடியபடி கூடச் சென்ற அப்பா, கூசிப்போய் திரும்பி வந்தார். எதையும் பேச நேரமில்லாமல், அக்காவைத் தூக்கிக்கொண்டு மருத்துவமனைக்குப் போனார்கள்.

அப்புறம் நிறைய நாள் அக்கா ரொம்ப உடம்பு சரியில்லாமல் இருந்தாள். அப்பாதான் அக்கா பக்கத்திலேயே இருப்பார். ஏதோ சொல்லிக் கொண்டே இருப்பார். ஆனால், அம்மா ஒரே அழுகை.

அக்காவுக்கு இன்னொரு பாப்பா பிறக்கப் போவதாகத் தெரிந்தது.

இதை அங்கே போய்ச் சொல்லி, மறுபடியும் அந்த வீட்டில் அக்காவை கணவனோடு வாழச் செய்ய வேண்டும் என்று அம்மாவுக்கு மிகவும் ஆசை.

"நான் யோசிக்க வேண்டும்" என்று முதலில் தள்ளிப் போட்ட சுமாலினி, மறுபடியும் பெற்றோர் அந்தப் பேச்சை எடுத்தபோது, ஒரேயடியாக மறுத்துவிட்டாள்.

"மறுபடியும் அங்கே போய், இந்த மூன்று ஆண்டுகளாக நான் வாழ்ந்த வாழ்க்கையை மீண்டும் வாழ்வதா, அப்பா? அது நரகம் அம்மா! அத்தோடு... அங்கே அவருக்கு இன்னொருத்தியும் இருக்கிறாள். அவளது உயர்வுகளைப் பற்றி, என் முன்னிலையிலேயே பாராட்டுக்கள் நடக்கும். இன்னும்... கை நீட்டுகிற வரை போயிருக்கிறது"

"சுமிம்மா..."

"ஒருவரின் பெயரைக் கூட, அனபும் கனிவுமாக அழைக்கிற வீடு

இது! அங்கே என் பெயரே எனக்கு மறந்துவிட்டிருந்தது, தெரியுமாம்மா? சனியன், பீடை, மூதேவி... என்னை அழைப்பதற்கு இப்படி எத்தனையோ வார்த்தைகள் உண்டு என்று அங்கே போய்த்தான் அம்மா, நான் தெரிந்து கொண்டேன்..."

"ஐயோ, அவளையே மணமுடித்திருக்கலாமே! நாம் பிழைத்துப் போயிருப்போமே!" என்று குமுறினாள் தாயார்.

"மெய்தான். ஆனால், வேற்று ஜாதி என்று மகனிடம் மறுத்தது தப்பு என்று இப்போதுதான் பெரியவர்களுக்கு தெரிந்ததாம். ஹூம்! இந்தப் பிள்ளைகள் வந்தது பற்றி ஆறுதலாக யோசியாதீர்கள், அம்மா. அது இன்னொரு கேவலம்!"

"அம்மா, நம் குழந்தை ஒன்று அங்கே இருக்கிறதே!" என்று மெல்ல அவளுக்கு நினைவுபடுத்தினார் தந்தை.

ஆனால், "மறப்பேனா, அப்பா? அதனால்தான் இவ்வளவு யோசித்தேன்" என்று மெதுவாகச் சொன்ன சுமாலினி மேலே விளக்கமும் கூறினாள்.

"அவர்கள் வீட்டு வாரிசு என்று மாமியார் மாமனாருக்குப் பாப்பா என்றால் உயிர், அப்பா. அவளுக்கு ஒரு கஷ்டம் வர விட மாட்டார்கள். ஒருதரம் அவளைக் கீழே விழ விட்டுவிட்டேன் என்று, அவர் மூலம் எனக்கு அடிகூட விழுந்தது. அவரும், மகளை மட்டும் தூக்கி வைத்துக் கொள்ளுவார். என்னைத்தான் பிள்ளையைத் தொடக்கூட விட மாட்டார்கள்! அவர்களுக்குத் தெரிந்தால், இந்தக் குழந்தையையும் அப்படித்தான் பண்ணுவார்கள், இல்லையா? என்னை விட்டுப் பிரித்து, தொடக்கூட விடாமல்... வேண்டாம்ப்பா. இதாவது எனக்கு உரியதாக இருக்கட்டும். அந்த வீட்டு வாடையே இதன்மேல் பட வேண்டாம்! ஆணோ, பெண்ணோ, இது என் குழந்தையாகவே வளரட்டும்ப்பா"

அப்போதும் விடாமல் "அதற்கில்லை செல்லம்... என்று இழுத்த தாயை நேராகப் பார்த்து, "அம்மா வேண்டாம்! என்னை அங்கே அனுப்ப முயற்சி செய்யாதீர்கள். அப்புறம் நான் பிணமாகத்தான் திரும்பி வருவேன்" என்று அவள் ஒரு மாதிரி அழுத்தத்துடன் கூறவும்,

அன்றைய பேச்சு அத்தோடு முடிந்தது.

சுமாலினி ஒரு முடிவு எடுத்தாள் என்றால் லேசில் மாற மாட்டாள்.

கணவன் வீட்டுக்குச் செல்லப் போவதில்லை என்று அவள் முடிவெடுத்தாள் என்றால், அது சரியே என்பது போல, அவளுடைய புகுந்த வீட்டினரும் அவள் மீது எந்த விதமான அக்கறையும் காட்டவில்லை.

பழஞ்செருப்பாக அவளைத் தூக்கி எறிந்துவிட்ட மாதிரிதான் அவர்களும் நடந்து கொண்டார்கள். இருக்கிறாளா, இல்லையா என்று தெரிந்து கொள்ளவே விரும்பாத மாதிரி, விருப்பம் என்ன? மருமகள் என்று ஒருத்தி இங்கே வளைய வந்தாளே என்ற நினைப்பே அங்கே யாருக்கும் இருந்த மாதிரித் தெரியவில்லை.

நெஞ்சு பொறுக்காமல், அப்பா சற்று விசாரித்ததில், அந்த இன்னொரு பெண் வீட்டுக்கே வந்து சேர்ந்து வசிப்பதாகத் தெரியவந்தது. திருமணம் கூடத் தடபுடலாக நடந்ததாம்.

கொதித்துப் போய், "கேஸ் போட்டு எல்லோரையும் உள்ளே தள்ளுவோம்" என்று நெஞ்சை அழுத்திவிட்டபடி குமுறினார் அவர்.

அப்பாவைப் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்த சுமாலினி மெதுவாகச் சொன்னாள் "உங்களுக்கு இன்னோர் அதிர்ச்சி தர வேண்டியிருக்கிறது, அப்பா. அவளை முன்பே பதிவுத் திருமணம் செய்திருக்கிறார், அப்பா. என்னை மணப்பதற்கு முன்பாகவே. எனவே சட்டப்படி அவள்தான் மனைவி. பெற்றோருக்கே தெரியாமல் ரகசியமாக ரிஜிஸ்டர் மணம் செய்திருக்கிறார். இதைக் கிளறினால், நம் பாப்பா 'இல்லீகல் சைல்ட்' ஆகிவிடுவாள். என் வயிற்றில் இருக்கும் இந்தக் குழந்தையும் கூட! வேண்டாம்ப்பா. அதையெல்லாம் வழக்கு நடத்தி டாம்டாம் அடிக்க வேண்டாம். அத்தோடு எனக்கு அந்த முகங்களைப் பார்க்கவே பிடிக்கவில்லை, அப்பா. சொல்லப் போனால், அவர்களில் யாரையும் பார்க்க நேராதிருப்பதே வரமாகத் தெரிகிறது"

அப்பாவும், அம்மாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அங்கே இருக்கும் உன் மகள்? என்ற கேள்வி. பெற்றோர் மனதில் ஓடுவதை, அப்போது சின்னவனே என்றாலும், ரஞ்சனாலும் அறிந்து கொள்ள முடிந்தது.



கொடிக்கு காய் பாரமாகுமா? 2

அந்த வீட்டினர் யாரையும் பார்க்கவே பிடிக்கவில்லை என்றால், அது அவனுக்கும் சம்மதமே.

ஆனால், பிறந்து மருத்துவமனையில் இருக்கும்போதே, அவனது விரலைப் பிடித்த குட்டிப் பாப்பா?

ஒன்றரை வயதிலேயே 'மாமா மாமா' என்று மழலையாய்க் கூப்பிடுமே!

படுப்பாவாடை, சட்டை போட்டு அவன் மடியில் வைத்துக் காது குத்திய செல்லக்குட்டி! அவளையும் பார்க்க முடியாதே!

ஆனால் அது பற்றிப் பெரியவர்களான அப்பா, அம்மாவே பேசாதபோது, வீட்டு அங்கத்தினர்களில் ரொம்பச் சின்னவனான அவன் எப்படிக் கேடபது?

அதுவும் கல்யாணத்தின்போதே, அவனது கையை உதறிய மனிதரைப் பற்றி நினைக்கும்போது, அந்த மனிதரின் வீட்டுக்கு அக்கா செல்லாததே நல்லது என்று அவன் நினைத்தான்.

என்ன தைரியம் இருந்திருந்தால், அக்காவை அடித்திருப்பார்? அவரை வாழ்க்கை முழுதும் பார்க்க முடியாது போனாலும் அவனுக்கு சந்தோஷமே!

ஆனால், அந்தக் குட்டிப் பாப்பாவை மட்டும் இங்கே கூடடி வர முடிந்தால்? அது முடியாது என்று பெரியவர்களே சும்மா இருக்கையில் அவனும் அந்தப் பாப்பாவை மறந்து விடத்தானே வேண்டும்? அக்காவோடு குட்டிப் பாப்பாவையும் சேர்த்தே பார்த்துப் பழகியிருந்ததால் பாப்பாவை மறப்பது ரொம்பச் சிரமமாகத்தான் இருந்தது. பெரிதும் ஏக்கமாகவே இருந்தது.

ஆனால், அக்கா முன்னைப் போல அவனுடைய படிப்பைக்

கவனிக்கத் தொடங்கியதும் ஓரளவு பரவாயில்லாமல் ஆயிற்று.

அடுத்து, இந்தச் சின்னக்குட்டி பிறந்த பிறகு, உலகம் அடியோடு மாறிவிட்டது.

பழையபடி எல்லோர் முகங்களிலும் சிரிப்பு, மலர்ச்சி காணப்பட்டது.

பிள்ளை பெற்ற உடல் தேறியதும், அப்பா சுமாலினியை அலுவலகத்துக்குக் கூட்டிச் சென்றார்.

"இனி எனக்கு இரண்டு வாரிசுகள். நம் தொழிலை உங்கள் இருவருக்கும் உரிமையாக்கப் போகிறேன். அலுவலகப் பொறுப்பெல்லாம் உன்னது. வரவு செலவுக் கண்க்கு, அன்றாட நிர்வாகம் இரண்டையும் முதலில் உனக்குக் கற்றுத் தரப் போகிறேன். லேத்துப்பட்டறை வேலை, வெளியூர்களில் சுற்றி ஆர்டர் எடுப்பது, தேவைப்படி செய்து சப்ளை செய்வது போன்ற வேலைகளைத் தம்பிக்குத் தரப் போகிறேன், ரஞ்சி படித்து முடிக்கும் வரை, நான் நேரடியாகப் பார்ப்பதாக இருக்கிறேன். அவன் படித்து முடித்துத் தொழிலைப் பழகியதும், சுற்றி அலைகிற வேலையை அவனுக்குக் கொடுத்துவிட்டு, அக்கடா என்று ஏசி அறையில் உட்கார்ந்து உங்கள் இருவரையும் ஓட ஓட விரட்டப் போகிறேன்..."

வேடிக்கை போலச் சொன்னாலும், அவர் மகளது வாழ்வுக்காக அவர் திட்டமிட்டிருந்த எதிர்காலம் உண்மையாகவே அதுதான்.

கடைசிப் பகுதியைத் தவிர்த்து, மற்றதை முழுமையாக நிறைவேற்றவும் செய்தார். 'ஏசி அறையில் அமர்ந்து ஓட ஓட விரட்டப் போவதாகச் சொன்னாரே, அதைத்தான் அவரால் அதிக காலம் செய்ய முடியவில்லை.

மேல் படிப்பும் முடிந்து, ரஞ்சன் தொழிலில் பங்கேற்று ஓர் ஆண்டிலேயே அவரது உடல்நலம் குறையலாயிற்று.

அடுத்த சில மாதங்களுக்குள்ளாக அவரது காலம் முடிந்து போயிற்று.

"என் கவலைதான், அதுதான் அப்பாவை உள்ளுர அரித்துவிட்டது. மற்றபடி அறுபதே இப்போதெல்லாம் மத்திம வயதுதானே?

அதற்குள்ளாகவே அப்பா போய்விட்டாரே!" என்று சுமாலினி வேதனைப்பட்டாள்.

அது பொறுக்காமல், "அதெல்லாமில்லை... விதி முடிந்தது. அப்பா போய்விட்டார். உன் கவலை மட்டும் என்றால், என்னையும் அம்மாவையும் சின்னக் குட்டியையும் நினைத்து அப்பா நிம்மதியாக இருந்திருக்க வேண்டுமே! அத்தோடு, உன் கவலை மட்டும் என்றால், இத்தனை ஆண்டுகள் நன்றாகத்தானே இருந்தார்? அதை நினைத்துப் பார்" என்று தம்பி மறுத்துப் பேசினான்.

ஆனால், மகளுக்குத் தவறான துணையைத் தேர்ந்தெடுத்து, அவளது குடும்ப வாழ்வை அழித்துவிட்டோம் என்கிற வருத்தம் அவருக்கு எப்போதும் இருந்தது அவனுக்குத் தெரியும்.

அதனாலேயே, இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பாக அவனைத் தனியே அழைத்து, அக்காவுக்கு எப்போதும் துணை நிற்க வேண்டும் என்று மகனிடம் உறுதி கேட்டுப் பெற்றிருந்தார்.

அவர் கேளாமலே ரஞ்சன் அதே கருத்தோடேயே இருந்ததை அறிந்து, ஆறுதலும் நிம்மதியுமாகவே அவர் தன் கடைசிப் பயணத்தை ஏற்றார் என்பது, அவன் மட்டுமே அறிந்த ரகசியம்.

அதனாலேயே, ரஞ்சன் திருமணத்தை வெறுத்திருந்தான் என்பதும், அவன் மட்டுமே அறிந்த ரகசியமே!

ரஞ்சனைப் பொறுத்த வரையில், இன்றைக்கு அவனுடைய குடும்பம் என்பது அவனுடைய தாயார் கனகம், தமக்கை சுமாலினி, அவளுடைய சின்ன மகள் சுப்ரியா ஆகியோர் மட்டுமே.

அதிலும் அந்தச் சின்னக் குட்டி! வீட்டில் எல்லோருக்கும் செல்லம்!

அம்மா பிரியாக்குட்டீ என்று அழைத்துக் கொஞ்சுவாள். ரியாச் செல்லம், ப்ரீக்கண்ணு என்பாள் பெற்றவள்.

இதில் எப்படி வேண்டுமானாலும் மூடுக்குத் தக்கபடி அழைக்கும் ரஞ்சன் அவளைச் சீண்ட வேண்டுமானால், 'சுப்பி, சுப்பிப்பாட்டீ' என்பான், அவள் முகம் போகும் போக்கைப் பார்த்து விழுந்து விழுந்து சிரிப்பான்.

"பா...ருங்க பாட்டீ, என்னைப் போய் மாமா பாட்டீ என்கிறாங்க!"

என்று புகார் சொல்லும் சிறுமி, அத்தோடு விடவும் மாட்டாள்.

"நானே பாட்டி என்றால், என்னைவிடப் பதினாலு வயது பெரிய நீங்கள் குடுகுடு கிழம்தானே. மாமா? கொள்ளுத்தாத்தா! எள்ளுத்தாத்தா!..." என்று பொரிந்து கொட்டுவாள்.

"இல்லை கண்ணு! விளையாட்டுக்குச் சொன்னேன்டா. செல்லம்!" என்று அவன் இறங்கி வந்து, மன்னிப்புக் கேட்கிறவரை விட மாட்டாள்.

எல்லாம் உள்ளூர சிரிப்பாக இருக்கும்.

ஆவலாக வீட்டுக்குப் போனால், சுப்ரியா பள்ளிக்குக் கிளம்பியிருந்தாள்.

மாமனைப் பார்த்ததும் முகம் மலர "ஹாய் மாமா!" என்றாள் சிறுமி: "நான் கிளம்புகிறதுக்கு முன்னாலே நீங்க வர வேண்டுமே என்று நினைத்துக் கொண்டே இருந்தேன்!" என்றாள் தொடர்ந்து.

"அப்படியா செல்லம்?" என்று கேட்டபடியே, அவளுக்காக வாங்கி வந்திருந்த சாக்கலேட் பாரைக் கொடுத்தான், ரஞ்சன்.

அதை வாங்கிப் பிரித்தவாறே, "இதுக்காகத்தான் மாமா" என்று நகைத்தாள் சுப்ரியா.

"வாலு! பாருங்கம்மா, இந்த சாக்கலேட்டுக்காகத்தான் என் வருகையை எதிர்பார்த்தாளாம்!" என்று புகார் கூறியபடியே சாப்பாட்டு மேஜையில் இருந்த பாத்திரங்களை திறந்து ஆராய்ந்தான் ரஞ்சன்.

"எல்லாம் உங்களுக்குப் பிடித்ததுதான் மாமா. ஒருவாரம் கழித்து வருகிறீங்க, வேற்றே எதையும் பாட்டி வைத்து விடுவாங்களா? ஒரு வாரத்துக்கு சாப்பாடு ஒரே அறுவையாகத்தான் இருக்கப் போகிறது!" என்று அலுத்துக் கொண்டவாறே, சுப்ரியா எழுந்தாள்.

"பள்ளி வேன் வந்துவிடும், பை மாமா, பை பாட்டி, பை அம்மா...!" என்று அவனை ஒட்டி நடந்து போய் மாடியில் இருந்த தாயிடம் உரக்க விடை பெற்றாள்.

நடக்கும்போது தெரியாமல் கால்பட்டதோ? தாயார் முன்னிலையில் சொன்னால் பெரிதாக எடுத்துப் பேத்தினைக்

கண்டிக்கக் கூடும்:

அக்கா மகளின் கூடவே நடந்தபடி "செல்லம். தெரியாமல் கால் அடுத்தவர் மேல் பட்டுவிட்டால், சாரி சொல்வது நல்ல பண்புடா. தெரிந்துகொள். இப்போது அதைச் சொல்லலாமில்லையா?" என்று கனிவாகவே கேட்டான்.

ஆனால் "ம்ம்ம்..." என்று சற்று ராகம் இழுத்து யோசித்துவிட்டு, "தெரியாமல் பட்டால் சா...ரி சொல்லலாம். தெரிந்து கொண்டே பட்டால்?" என்று தலையைக் குருவியாய்ச் சரித்து குறும்பாக நோக்கி அவள் கேட்கவும், அவனால் சிரிப்பை அடக்க முடியாது போயிற்று.

கூடச் சேர்ந்து அவளும் நகைக்கவும், "பார். ஒருநாள் இல்லை ஒருநாள் என்னிடம் சரியான உதை வாங்கப் போகிறாய்!" என்று மிரட்டினான்.

அவள் அதற்கும் பதில் வைத்திருந்தாள்.

"உதைப்பதா? அதற்கு நீ காலை அசைத்தாக வேண்டுமே, மாமா! பாட்டி சொல்வது போல உன் காலைக் கட்டிப் போட்டுவிட்டால், அப்புறம் எப்படி உதைப்பாயாம்? நடப்பதே கஷ்டம்! கோணிப்பை ரேஸ் மாதிரிதான் நடக்க வேண்டும்! ஹா ஹா ஹா!" என்று அரிசிப் பல் தெரியச் சிரித்தவாறே ஓடிப்போய், வாயிலுக்கு வந்துவிட்ட பள்ளி வேனில் ஏறிக் கையாட்டினாள், சிறுமி.

சரியான வாயாடி என்று செல்லமாக மனதுள் எண்ணும்போதே, அவனது முகம் மாறிப் போயிற்று.

இந்த அம்மாவுக்கு ஏன் இந்த ஆசை? இரண்டு ஆண்டுகளாக இந்தத் திருமணப் பாட்டைப் பாடத் தொடங்கிவிட்டார்கள்.

மருமகள் வர வேண்டுமாம். வந்த ஒரு மருமகனால் பட்டிருப்பது போதாதா?

அத்தோடு வருகிறவளுக்கு இந்தக் குடும்ப நிலை புரியுமா?

அக்கா, அக்கா மகள்தான் அவனுக்கு முக்கியம். அவர்களை விட்டு அவனால் வாழ முடியாது என்பது தெரிந்தால், எந்தப் பெண்ணுக்கு அது பிடிக்கும்?

அதுவும், இந்தக் காலத்தில் 'ந்யூக்ளியர்' குடும்பம் என்று

பெரும்பாலும் ஒற்றைக் குழந்தையாக வளரும் ஒருத்திக்கு, இது புரிவதே கடினம்!

புரியாமல், அக்காவை அலட்சியமாக ஒரு வார்த்தை சொன்னாள் என்றால், அப்புறம் அவள் முகத்தில் விழிப்பதே அவனால் முடியாதே!

என் புருஷன் எனக்கு மட்டும்தான் என்கிற கொள்கை வேறு பெரிதும் பரவியிருக்கும் இந்தக் காலச் சூழ்நிலையில், அந்த விஷப் பரீட்சையே வேண்டாம் என்று அம்மாவிடம் சொல்ல வேண்டும். அவனைப் பொறுத்தவரை, இப்படியே காலத்தை நிம்மதியாகக் கழிக்கத்தான் விருப்பம். இதுதான் அவனுக்கு சந்தோஷம் என்று அம்மாவிடம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

அக்கா பக்கத்தில் இல்லாத நேரம் சொல்ல வேண்டும். எல்லாவற்றையும் ஒழுங்காகப் புரிந்து கொள்ளும் அக்கா, இதை மட்டும் என்னவோ, அவளுக்காக அவன் செய்யும் தியாகமாக நினைத்து வருத்தப்படுவது ஏன் என்று என்ன யோசித்தும் அவனுக்கு புரிவதாக இல்லை.

என்ன? ஆசைப்படும் ஒன்றை விட்டுக் கொடுப்பதுதானே, தியாகம்? அவன்தான் அந்த வாழ்வுக்கு ஆசைப்படவே இல்லையே!

இப்போதிருக்கும் இந்த சந்தோஷம் அழிந்துவிடக்கூடாது என்பதுதானே அவனுக்கு முக்கியம்?

இது புரியாமல்... இருக்கட்டும் அம்மாவிடம் தனியே சொல்ல வேண்டும்.

யோசித்தபடியே அவன் மெல்ல திரும்பி வந்தபோது, சுமாலினியும் கீழே இறங்கி வந்திருந்தாள். தலைக்குக் குளித்திருந்ததன் அடையாளமாக தோளோடு சேர்த்து முதுகில் போர்த்திருந்த டர்க்கி டவலில் கூந்தல் விரிந்து கிடந்தது.

தம்பியைப் பார்த்ததும் முறுவலித்து "வாடா" என்றவாறு செல்லோவைத் திறக்கக் கையை நீட்டியவள் சற்றுத் தயங்கி, "நீ எப்படி, ரஞ்சி? மெல்லக் குளித்து சாப்பிட்டு இன்று ஓய்வாக இருக்கப் போகிறாயா? அல்லது..." என்று அவள் கேட்கும்போதே "ஊகூம். அலுவலுக்கு வர வேண்டும், அக்கா. புது ஆர்டர்கள் வேலை நிறைய

இருக்கிறது, அதுபற்றி உன்னோடு பேச· வேண்டும். நீயும் தலை பின்னிக் கிளம்ப சற்று நேரம் ஆகும் அல்லவா? அதற்குள் நானும் கிளம்பி வந்து விடுகிறேன்" என்று வேகமாகப் படியேறிப் போனான்.

வேகமாகக் குளித்து உடையணிந்து வந்தால், சுமாலினி தம்பிக்காகச் சாப்பிடாமலே காத்திருந்தாள்.

"என்னக்கா நீ? பசியோடு காத்திருந்தாயாக்கும்? சாப்பிட்டுவிட்டுப் பேச முடியாதா?" என்று கடிந்தவண்ணம் அவசரமாக வந்து ஒரு நாற்காலியில் அமர்ந்தான் தம்பி.

"அப்படி ஒன்றும் பசியில்லையடா. சேர்ந்து சாப்பிடலாம் என்றும் தோன்றியது. அம்மா நீங்களும் உட்காருங்கள். மூவருமாகச் சாப்பிடுவோம்" என்று கனகத்துக்கும் ஒரு தட்டை எடுத்து வைத்தாள் சுமாலினி.

தேவையறிந்து ஒருவருக்கொருவர் சட்டினியை நகர்த்துவதும், இட்டிலியை எடுத்து வைப்பதும், சாம்பாரை ஊற்றுவதுமாகச் சாப்பிட்டு முடிக்கும்போதே, மூவருக்குள்ளும் ஏதோ நெருக்கம் கூடுவது போல ரஞ்சன் உணர்ந்தான்.

கனகமும் அதை உணர்ந்தாற்போலப் புன்னகை செய்ய, சுமாலினி ஆறுதலாகப் பெருமூச்சு விட்டாள்.

"இனி இப்படிப் பெரிய பயணம் போடாதே, ரஞ்சிம்மா. எல்லோருக்குமே வீட்டில் டல்லடித்துவிட்டது. பிரியாதான் ரொம்பவும் தவித்துப் போனாள். ஒரு நாளைக்குப் பத்துத் தடவையாவது 'மாமா எப்போது வருவார்' என்று கேட்பாள். சும்மா, நாலு நாளில் வருவான் என்று சொல்லி வைத்தேனா? நாலாம் நாள் நீ வரவில்லை என்றதும், ஏன் பொய் சொன்னீங்க என்று அது ஒரு கத்தல். அவள் காட்டுக் கத்தலாகக் கத்தியதில், நான் பயந்தே போனேன்" என்றாள் தாயார்.

"அவளிடம் சமாளிக்கவோ மழுப்பவோ செய்யாதீர்கள், அம்மா. மாமா வேலை முடிந்ததும் வருவான். வரும்வரை பொறுமையாக இரு. சும்மா சும்மா ஒரே கேள்வியைக் கேட்டு அறுக்காதே என்று அழுத்தமான குரலில் சொன்னால், பேசாமல் கேட்டுக் கொள்வாள்.

நீங்கள் ரொம்பவும் செல்லம் கொடுப்பதால், அவள் உங்களிடம் கத்துகிறாள். நீங்களும் கொஞ்சம் அதட்டிப் பேசுங்கள். சும்மா இருப்பாள்" என்று விட்டு எழுந்தாள் சுமாலினி. "இன்னும் பத்து நிமிஷங்களில் கிளம்பி விடலாமா. ரஞ்சி?" என்று கேட்டபடியே, மாடிப்படியை நாடி நடந்தாள்.

"நான் இப்போதே ரெடிக்கா. நீ தயாராகி வந்ததும் கிளம்பி விடலாம்" என்றான் தம்பி.

அக்கா செல்வதைப் பார்த்தபடியே, ரஞ்சன் தாயிடம் பேச்சுக் கொடுத்தான். அவன் ஊரில் இல்லாதபோது என்ன நடந்தது. ஏதேனும் பிரச்சினை உண்டா என்பது போல வழக்கமான கேள்விகளே.

"எல்லாம் வழக்கம் போலவேதானடா. ஆனால் நீ அதிகநாள் இங்கே இல்லையானால், அக்காவும் சோர்ந்து போகிறாள். அது மாற வேண்டுமானால்..." என்று கனகம் மாடியைப் பார்த்தபடியே தொடங்க, மகன் குறுக்கிட்டுப் பேசினான்.

அவனது பார்வையும் மேலேதான் இருந்தது, "அக்காவின் சோர்வை அதிகப்படுத்துவது போலத்தானே, நீங்களும் செய்கிறீர்கள்? கால்கட்டு அது இதென்று, எதற்கம்மா? கொண்டு வந்து வைத்துக் கொண்டு, அவள் அக்காவிடம் சரியாக நடக்கவில்லை என்றால் என்ன செய்வது? சும்மா விரட்டி விட முடியுமா? ஒரு திருமணத்தால் பட்டிருக்கும் துன்பம் போதாதா? இப்போதைக்கு சந்தோஷமாக இருக்கிறோம். இதை, இப்படியே நீடிக்க விடுங்கள். என்னவேனும் பண்ணி, அதைக் கெடுக்காதீர்கள்" என்றான் குடும்பத் தலைவனாக.

"அதில்லையடா, உனக்கும் ஒரு திருமணத்தைச் செய்து, வாரிசைப் பார்த்துவிட்டால்..."

"வாரிசா? அதற்கு நம் சுப்ரியா மட்டுமே போதும். அதனால், வேறே பேச்சு எதுவும் பேச வேண்டாம்" என்றவன், "அக்கா வருகிறாள்" என்று தணிவாகச் சொல்லிவிட்டு, "அதெப்படிம்மா உங்கள் பிரியாக் குட்டி வீட்டுக்குள் ஒரு பூகம்பத்தையும் கொண்டு வராமல், இத்தனை நாள் சும்மா இருந்தாள்? என்னால் நம்பவே முடியவில்லையே!" என்றான் உரக்க.

"ஆமாம், ஆளாளுக்கு அளவு மீறிச் செல்லம் கொடுங்கள், அப்புறம் பூகம்பம், பூமி அதிர்ச்சி என்று புகார் பாடுங்கள். அதையாவது கோபமாகச் சொல்லுகிறீர்களா? அதுவும் கிடையாது. என்னமோ பெருமையடிக்கிற மாதிரி இருக்கிறது" என்று பெற்ற தாயின் குரலிலும் சிறு அலுப்பு தவிர உண்மையான கோபமில்லை.

தொடர்ந்து தாயை நோக்கி "ப்ரீ வந்ததும் உட்கார்த்திப் படிக்க வையுங்கம்மா. நேற்று ப்ராகிரஸ் கார்டு வந்தது. ஒன்றிலும் எழுபதை எட்டவில்லை. நல்ல கல்லூரியில் சேர்த்து விரும்பும் பாடம் எடுப்பதற்கு இந்த மார்க் கொஞ்சமும் போதாது. சரிசரி, நாங்கள் கிளம்புகிறோம் அம்மா" என்று சொல்லி சுமாலினி முன்னே நடந்தாள்.

கார் கிளம்பியதும், "நீ ஓய்வே எடுக்கவில்லையே, ரஞ்சி. கொஞ்சம் நேரம் ஓய்வெடுத்துவிட்டு மதியம் வந்திருக்கலாமே. அம்மா கூட உன்னிடம் பேச வேண்டும் என்றார்கள்" என்றாள் தமக்கை ஏதோ யோசனையாக.

"அதுதான் கிளம்புகிற சாக்கில் எங்களைத் தனியே விட்டுவிட்டுப் போனாயே, எல்லாம் பேசிவிட்டார்கள். எதற்கு இந்த வீண் வேலை? அப்பா இல்லாதது தவிர, நாம் இப்போது எவ்வளவோ சந்தோஷமாகவே இருக்கிறோம். எவளோ ஒருத்தியை கொண்டுவந்து, அதைக் கெடுக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்" என்று அசுவாரசியமான குரலில் கூறி முடிக்க முயன்றான் தம்பி.

"அதில்லை ரஞ்சி, உனக்கும் திருமணம் செய்து பேரக் குழந்தைகளைப் பார்க்க வேண்டும் என்று அம்மாவுக்கு ஆசை இருக்கும்தானே? அதனால்..."

"அதற்குத்தான் சுப்ரியா இருக்கிறாளே! நம் எல்லோருக்கும் அவள் ஒருத்தி போதும்!" என்று தீர்மானமாகச் சொல்லி முடித்தான் ரஞ்சன்.

அத்தோடு பேச்சை மாற்றுவதோடு, ஒரு மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளும் ஆர்வத்தோடு "அக்கா, இன்றைக்கு சுபி என்ன செய்தாள் தெரியுமா? அம்மா முன்னாலே சொன்னால் கண்டிக்கத் தொடங்கி விடுவார்களோ என்று அப்போது சொல்லவில்லை.." என்று தொடங்கி அவள் வரவேற்றதில் இருந்து எல்லாம் சொன்னான். "பார் அக்கா,

நான் என்னமோ நல்ல பழக்கம் கற்றுக் கொடுப்பதாக புத்தி சொன்னால், அந்த வாலு 'தெரிந்து கொண்டே கால் பட்டால்' என்று கேட்கிறது! அதுவும் தலையைச் சரித்துக் குறும்பாகப் பார்த்துக் கொண்டு! என்னால் சிரிக்கத்தான் முடிந்ததுக்கா!" என்று நகைத்தபடியே தமக்கையைப் பார்த்தால், கண்ணை எட்டாத முறுவல் ஒன்று மட்டுமே அவளது உதடுகளில் நெளிந்து, அதுவும் உடனே மறைந்து போயிற்று.

ஏனிப்படி? நினைத்ததை வாய் விட்டுக் கேட்கவும் செய்தான். "என்னக்கா இங்கே ஏதேனும் பிரச்சினையா?" என்று.

தம்பியின் கேள்வியில் சற்று திகைத்துவிட்டு, "அப்புறம் சொல்கிறேன்" என்றாள், சுமாலினி,

ஆனால் அதைச் சொல்லும்போதே, அவளுக்கு உள்ளூர ஒரு பெருமிதம் உண்டாயிற்று.

தமக்கையின் சிறு பாவனையில் கூட, அவள் மனதை உணர்ந்து கொள்கிறானே! இப்படி ஒரு தம்பி யாருக்குக் கிடைப்பார்கள்?

ஒருவேளை, கணவனால் வெறுத்து ஒதுக்கப்பட்ட பெண்களுக்குக் கிடைப்பார்களோ என்று நினைத்துவிட்டு, என்ன மடத்தனம் என்று தன்னைத்தானே கடிந்து கொண்டாள்.

ரஞ்சனின் அன்பு இயற்கையானது. பரிதாபத்தினால் ஏற்பட்டதில்லை. சின்ன வயதில் இருந்தே, அக்காவிடம் அவனுக்குப் பாசம் அதிகம்தான்!

அலுவலகத்தை அடைந்ததும் உடனடி வேலைகளைப் பார்த்து முடித்து நிர்வாகியையும் அக்கவுன்டன்டையும் அனுப்பிய பின் கிடைத்த தனிமையில் "என்னக்கா விஷயம்? சொல்லு..." என்று கேட்டான் ரஞ்சன். அவ்வளவு நேரமுமே, அவன் பல்லைக் கடித்துதான் பொறுமை காத்திருந்தான்.

அவனுடைய அக்காவை வாட்டும் பிரச்சினை என்னவாக இருக்கக்கூடும்? ஒரு பெருமூச்சுடன் கைப்பையில் இருந்த சாவியை எடுத்து மேஜை டிராயரைத் திறந்து, அதில் இருந்த ஒரு புகைப்படத்தை எடுத்து, ரஞ்சனின் முன்னே சுமாலினி வைத்தாள்.

ஃபோட்டோவை எடுத்துப் பார்த்த ரஞ்சன் பிரமித்தான்! இந்தப் படம் எப்படி அக்காவிடம் வந்தது?

கொடிக்கு காய் பாரமாகுமா? 3

சுமாலினி, ரஞ்சனின் முன்னே வைத்தது ஒரு பெண்ணின் புகைப்படம்.

அவளும் சின்னப் பெண்தான். பள்ளிப் பருவம் முழுதாகத் தாண்டாத வயது! அவள் யாரென்று ஊகிக்கப் பிரமாதமான மூளை தேவையில்லை.

சாயல், வயது எல்லாம் பார்க்கும்போது, இவள் அக்காவுடைய மூத்த மகளாகத்தான் இருக்க வேண்டும்!

ஆனால், மில்லியன் டாலர் கேள்வி என்பார்களே, அது, இந்தப் படம் இவளிடம் எப்படி வந்தது என்பதுதான்.

கேள்வியாய்த் தமக்கையை நோக்கி, "அக்கா... இது... இவள் வந்து..." என்று மென்று விழுங்கி, தொண்டை கமறித் தடுமாறினான்.

மீண்டும் கண்ணை எட்டாத முறுவல் ஒன்று சுமாலினியின் உதடுகளில் தோன்றி மறைந்தது. லேசாகத் தலையசைத்து "நீ நினைப்பது சரிதான், ரஞ்சி. அவள் அனிதாதான்" என்றாள் மெல்லிய குரலில்.

ஊகித்ததுதான். ஆனால் ஒப்புதல் தமக்கையின் வாயிலிருந்து வந்தபோது அதிர்ச்சியாகவே இருந்தது.

தன்னை மீறி "அக்கா!" என்று அதிர்ந்தவனுக்கு ஒன்று நினைவு வந்தது.

ஒவ்வொரு மாதமும் சொந்தச் செலவுக்கு என்று அக்கா பணம் எடுப்பாள். பெரிய தொகை அல்ல என்றாலும், அலட்சியப்படுத்துகிற அளவு சிறு தொகையும் அல்ல.

அந்தப் பணத்தில், தனக்காகவோ கூட இருக்கும் மகளுக்காகவோ அவள் பெரிதாக எதையும் வாங்கவில்லை என்பது, அவனுக்குத் தெரியும். ஏதோ கோயில், அல்லது தரும காரியத்துக்காக இருக்கும் என்று எண்ணுவான். அவளுக்கு அதிலே ஆறுதல் என்றால்

செய்யட்டும் என்று ஒரு நாளும் விவரம் கேட்டது கிடையாது.

இப்போது அந்தச் செலவின் காரணம் பெரும்பாலும் புரிந்தது.

தம்பி திகைப்பும் வியப்புமாக நோக்கவும், சுமாலினி பேசினாள்.

"அவள் என் வயிற்றில் பிறந்தவளடா, அடியோடு அவளை எப்படி விடுவேன்? ஆனால் எதிலும் நான் தலையிட்டதில்லை. பக்கத்தில் போனதும் இல்லை. அவள் காரிலிருந்து இறங்கி குனிந்த தலை நிமிராமல் நேராகப் பள்ளிக்குள் செல்வதைப் பார்த்திருக்கிறேன். ஆனால், நான் கவனிப்பது கூட அங்கே யாருக்கும் தெரியாது. அனிதா உட்பட. நல்ல பள்ளியில்தான் சேர்த்திருக்கிறார்கள். நன்றாகத்தான் படிக்கி...த்தாள். ஆனால்..." என்று நிறுத்தினாள்.

தம்பி பேசாமலே பார்த்துக் கொண்டிருக்க, ஒரு சிறு மௌனத்தின் பின் "இப்போது அங்கே ஏதோ அவ்வளவு சரியில்லை, ரஞ்சி. எனக்கு என்னவோ வயிற்றைப் பிசைகிற மாதிரி ஏதோ கலக்கமாக இருக்கிறது. இது ஒன்றுமில்லாமலும் இருக்கலாம். எங்கே என்றாலும், அனிதா சுகமாக இருந்தால், அது போதும் எனக்கு. ஆனால்..." என்று மறுபடியும் ஓர் 'ஆனா'லுடன் பேச்சை நிறுத்தினாள் மூத்தவள்.

இதற்கு மேல் எந்த நடவடிக்கை எடுப்பதானாலும், பெற்றவளுக்குத் தெரியாமல் எடுப்பது கடினம்.

"அம்மாவுக்குத் தெரியுமா?" என்று மெதுவாகக் கேட்டான் ரஞ்சன்.

மறுப்பாகத் தலையசைத்துவிட்டு, "மனதைக் கல்லாக்கிக் கொண்டுவிட்ட என்னாலேயே அவளை அடியோடு மறக்க முடியாமல் எப்போதேனும் போய் அவளைப் பார்த்துவிட்டுப் போனது தெரியாமல் திரும்பி வந்து கொண்டு இருக்கிறேன். ஏதாவது வேண்டாத உணர்ச்சிகளை வெளிப்படுத்தி விடுவேனோ என்றுதான் இந்த மாதம் அங்கே போகவே இல்லை. நானே இப்படி என்றால், அவளைப் பார்த்துவிட்டால் அம்மா தாங்குவார்களா? ஆனால்... இப்போது கட்டாயமாக நம் இருவரில் யாராவது போய்த்தான் ஆக வேண்டும், ரஞ்சி. போகாமல் தீராது. வந்து... வந்து... நீ.. உன்னால் போக முடியுமா? செய்கிறாயா? ஆனால், வேறு முக்கியமான வேலை எதுவும் இருக்கிறதோ?" என்று குரலில் ஒரு கெஞ்சலுடன் சுமாலினி,

அவனிடம் கேட்டாள்.

திகைப்பு மாறி, இயல்புக்கு திரும்பி வந்து கொண்டிருந்த ரஞ்சன் அவசரமாக பேசினான் "என்னக்கா நீ? என்ன முக்கிய வேலை இருந்தாலும், இது அதைவிட முக்கியம் இல்லையா? சொல்லுக்கா. நான் என்ன செய்ய வேண்டும்? யாராவது போய்த்தான் ஆக வேண்டும் என்றாயே, என்ன பிரச்சினை?" என்று கேட்டான் தம்பி.

சிறு அமைதியின் பின், சுமாலினி சொன்னாள் "விவரம் அறிவதில் கூட, நான் அனிதாவை ரொம்ப நெருங்கியதில்லை, ரஞ்சி. அந்த வீட்டில் இருந்துதான் பள்ளிக்குப் போகிறாள். போவதும், திரும்பி வருவதும் காரில்தான். படிப்பதும் நல்ல பள்ளிதான். நன்றாகப் படிக்கிற பெண்ணும் கூட. சென்ற ஆண்டு பத்தாம் வகுப்பில் ஒன்பது புள்ளி எட்டு வாங்கி இருக்கிறாள். அவர்கள் பள்ளியில் இரண்டாம் இடமாம். இப்படி, அவளது படிப்பு விவரம், தோற்றத்துக்கு ஒரு புகைப்படம்... ஆள் வைத்து, அவள் பற்றி நான் அறிவது, அவ்வளவேதான். ரொம்பப் பார்க்க வேண்டும் போல இருந்தால், தோழிகளைப் பார்க்கப் போவதாக உங்களிடம் சொல்லிவிட்டுச் சென்னைக்கு போய், அவள் பள்ளி முடிந்து வரும்போது மறைவாக நின்று பார்த்துவிட்டு வந்துவிடுவேன். ஒரு பார்வைதான், அதற்கு மேல் நான் அவளை நெருங்கியதில்லை. வேறெதையும் விரும்பியதும் இல்லை..." என்று இழுத்தவாறு அரைகுறையாகக் கூறி நிறுத்தினாள்.

முன்னிருந்த புகைப்படத்தை ஒரு தரம் நன்றாகப் பார்த்துவிட்டு, "பார்வைக்கு ஆரோக்கியமாகத்தானே தெரிகிறாள்? நல்ல மதிப்பெண்கள் வேறு! அனிதா பற்றி இப்போது என்ன கவலை உனக்கு?" என்று விசாரித்தான் ரஞ்சன்.

முகம் வாட, "கவலைதான். அவளுக்குப் படிப்பில் கவனம் குறைகிறது. முதல் வரிசை ராங்க் எப்போதோ போய்விட்டது. மதிப்பெண் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து, அறுபது சதவீதத்துக்கு வந்துவிட்டது. என்ன காரணமாக இருக்கக்கூடும்? இதை மற்றவர்களிடம் சொல்லி விசாரிப்பதற்கு எனக்கு விருப்பம் இல்லை, ரஞ்சி! ஏதோ ஒரு வகையில் அது பிரச்சினையாகிவிட்டால், நம்

கண்ணை நாமே குத்தியது போலாகிவிடும் அல்லவா? நீயோ, நானோ நேரிலே போய் விசாரித்து அறிவதுதான் நல்லது. அதிலும், நீ வளர்ந்துவிட்டபிறகு, அங்கே யாரும் உன்னைப் பார்த்தது இல்லை என்பது ஒரு கூடுதல் வசதி! அதனால்தான் உன்னைக் கேட்டேன்" என்றாள் மெல்லிய குரலில் தமக்கை.

அவளைக் கூர்ந்து பார்த்துவிட்டு, "நான் யாரோவாகவே இருந்து பிரச்சனை என்னவென்று அறிந்து கொள்ள வேண்டும் என்கிறாய், அதுதானே? ரைட். எப்போது போகட்டும்?" என்று கேட்டான் ரஞ்சன்.

எப்போது வேண்டுமானாலும் கிளம்பத் தயார் என்று தம்பி சொல்லாமல் சொன்னவிதம், சுமாலினியை நெகிழ வைத்தது "இரண்டு நாட்கள் இருந்துவிட்டு போ ரஞ்சி. இல்லாவிட்டால் பாட்டியும், பேத்தியுமாக வீட்டை இரண்டாக்கி விடுவார்கள்... ஆனால், மிகுந்த கவனம் தேவை, ரஞ்சி. அடையாளம் தெரிவது போக, நான் உணர்ச்சி வசப்பட்டு விடுவேனோ என்று பயந்துதான் உன்னைப் போகச் சொல்லுகிறேன்! உனக்கு புரிகிறதுதானே?" என்று மீண்டும் ஒரு தவிப்புடன் கேட்டாள்.

"நன்றாகப் புரிகிறது அக்கா. நீ அமைதியாய் இரு. நீயே சொன்னது போல, உனக்குத் தாய் மனம். உருகி ஓடிச் சுற்றுப்புறம் மறக்க வைக்கக்கூடும். ஆனால், நான் கவனத்தோடேயே கவனிப்பேன்!"

சுமாலினி சொன்னது போலவே, பாட்டியும் பேத்தியும் பாய்ந்தார்கள்.

தாயிடம் எளிதாகச் சமாதானம் சொல்ல முடிந்தது. ஓரளவு வளர்ந்து விட்ட தொழிலை மேலும் விரிவாக்கம் செய்யும் ஆர்வமும், அதற்காகச் சென்னையில் ஒரு கிளை தொடங்கும் யோசனையும் ஏற்கனவே இருந்ததுதான். சென்னைக் கிளைக்கு இடம் பார்க்கும் பெரிய வேலைக்காக கிளம்புவதாகச் சொல்லிவிட்டே அவனால் கிளம்ப முடிந்தது.

ஆனால், சின்னவள் அதை ஒத்துக் கொள்வதாக இல்லை.

"பாட்டீ, நீங்கள் சொன்னது போல, மாமாவுக்கு காலைக் கட்டிப் போட வேண்டியதுதான். வந்து ஒரு வாரம் ஆகவில்லை, அதற்குள்

கிளம்புகிறானே! ஹோட்டல் ஹோட்டலாகப் பிரியாணி சாப்பிட ஓடுகிறான் பாருங்கள்!" என்று படபடத்தாள் சிறுமி.

"அப்படிப் போகாவிட்டால் உனக்கு அடிக்கடி பார் சாக்கலேட் எப்படி வாங்கி வருவது? அதற்காகக் காத்திருப்பதாகச் சொல்வாயே!" என்று மடக்கினான் மாமன்.

ஒருகணம் தயங்கிவிட்டு "நீ இல்லாவிட்டால் ரொம்பப் போரடிக்கிறது மாமா. எங்கள் மகாக் கண்டிப்பு மிஸ் பற்றிச் சொல்வேனே. அவர்கள் பாட வகுப்பு மாதிரி. வீட்டில் சத்தமே இல்லாமல் படுபோர்! அதனால் இங்கேயே இரு மாமா!" என்றாள் பெண் கெஞ்சலாக.

மனம் இளகுவதைக் காட்டிக் கொள்ளாமல் "அக்கா வெளியே மழை பெய்கிறதா என்று பார். உன் பெண் சாக்கலேட் இல்லாமல் இருக்கிறேன் என்கிறாள்!" என்றான் ரஞ்சன் கிண்டல் குரலில்.

"ஏ...ய் நான் அப்படி எப்போ சொன்னேன்? பொய்ம்மா! சாக்கலேட் தான் இங்கேயே உள்ள கடையிலும் கிடைக்குமே, அதற்காக வெளியூர் போக வேண்டாமே என்றால், உன் தம்பி என்ன கதை விடுகிறான் பார். முதலில் இவனை அடக்கி வை!" என்று தாயிடம் புகார் சொன்னாள் சுப்ரியா.

"ஆஹா! என்ன மரியாதை, என்ன மரியாதை! அம்மா, மாமா எல்லோரையும் நீ வா போ என்கிறாயே! நிஜமாகவே இவள் சுப்பிப் பாட்டியேதான்!" என்றான் ரஞ்சன்.

"கொள்ளுத்தாத்தா! எள்ளுத்தாத்தா!" என்று சுப்ரியா கத்த, சிரிப்பும் வேடிக்கையுமாக, அதிலேயே ரஞ்சன் கிளம்புவது உறுதியாயிற்று.

சுமாலினியின் புகுந்த வீட்டு முகவரி கையில் இருந்தபோதும், அந்த வீட்டுப் பக்கம் செல்ல ரஞ்சனுக்கு விருப்பமில்லை. திருமணம் என்ற பெயரில் தமக்கை மிகுந்த துன்பம் அனுபவித்த இடமாயிற்றே!

சுமாலினி மகளின் பள்ளிக்குச் சென்றே அவளைப் பார்த்தது ஏன் என்று புரிந்தவனாக, ரஞ்சனும் பள்ளிக்கே சென்றான்.

ரொம்பக் காலமாக புகழ் பெற்ற பாரம்பரியம் உள்ள பெரிய பள்ளி. பழமையோடு வளமும் வசதியும் உடைய பள்ளி என்று நன்றாகத்

தெரிந்தது

அந்த மட்டும் செலவைப் பாராமல், அக்கா மகளை ஒரு சிறந்த பள்ளியில்தான் படிக்க வைக்கிறார்கள்!

பரவாயில்லை என்று நல்லதாக ஒன்று எண்ணும்போதே. அவனுள் கோபம் குமுறியது.

என்ன பரவாயில்லை? அவர்களிடம் பணம் இருக்கிறது என்று காட்டுகிறார்கள்! அவ்வளவுதானே? அதுதானே என்றைக்குமே அவர்களது பழக்கம்?

முதல் அகழியே, அந்தப் பணம்தானே? அலட்சியமாக தூக்கி எறிந்து பேசுவதும், திமிராக நடப்பதும்... அவர்களிடம் கொட்டிக் கிடப்பதாகவும், மற்றவர்கள் எல்லோரும் பிச்சைக்காரர்கள் என்பது போலவும் எண்ணுவதும், காட்டுவதும்! அவர்களது இயல்பே அந்தத் திமிர்தானே!

அனிதாவுக்குக் காது குத்தியபோது, குழந்தையின் காதுக்கு ஏற்றபடி போட்ட வைரத்தோட்டை 'கண்ணில் போட்டுப் பாரடா, கரிக்கிறதா என்று பார்ப்போம். இவ்வளவு சின்னதை எங்கே தேடி வாங்கினார்களோ' என்று வக்கணை பேசியது, மறக்கக்கூடியது அல்லவே! இத்தனைக்கும் ஒழுக்கம் கெட்ட மகனைப் பெற்று வைத்துக் கொண்டு.!

அப்போது, அவர்களை விடப் பெரிதும் இறங்கிய நிலைதான்.

தேடிவந்து அக்காவைத் திருமணம் செய்தபோது, சுமாலினியின் அழகுக்காக என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். 'சுமி அதிருஷ்டகாரி' என்று பலரும் பேசியது கூட, ரஞ்சனுக்கு லேசாக நினைவிருந்தது.

ஆனால், வசதி குறைந்த பெண்ணை மணந்தால், அவர்கள் வீட்டு அராஜகங்களை சகித்துப் போவாள் என்று எண்ணித்தான் அவர்களாகத் தேடி வந்து திருமணம் செய்தார்கள் என்று விரைவிலேயே தெரிய வந்ததும், குடும்பத்தில் எல்லோரும் எப்படித் துடித்துப் போனார்கள்!

ஏனெனில், அன்பில் பாசத்தில், அவர்கள் கோடீஸ்வரர்கள் ஆயிற்றே!

இன்றைக்கு அவர்களிடமும் பணம் இருக்கிறது. ஆனால், அக்காவின் அழிந்துவிட்ட ஆனந்தம் திரும்பக் கிடைக்குமா?

ஆனால், இதுபோன்ற யோசனைகளால் என்ன பயன்?

பயனற்ற இந்த சிந்தனைகளை உதறித் தள்ளுபவன் போலத் தலையைக் குலுக்கிக் கொண்டு நிமிர்ந்து பார்த்தால், பள்ளிக்குப் பிள்ளைகளைக் கொண்டுவிடும் வாகனங்கள் மெல்லப் பெருகுவது தெரிந்தது.

இன்னும் சற்று நேரத்தில், இங்கே ஒரு போக்குவரத்து நெரிசலே ஏற்பட்டக்கூடும்.

இடைஞ்சலாக தன் காரையும் அதற்குள்ளே கொண்டு நிறுத்த மனமின்றி. பக்கத்து சந்து ஒன்றில் காரை நிறுத்திவிட்டு, இறங்கி நடந்து போனான். பள்ளிக்குச் சற்று தூரத்தில் ஆனால் பள்ளிக்கு வந்து போகிறவர்களை நன்றாகப் பார்க்கக்கூடிய இடத்தில் சும்மா வேடிக்கை பார்க்கிறவன் போல நின்று கவனித்தான்.

அக்கா மகள் பள்ளிக்குச் சற்றுத் தொலைவில் காரில் வந்து இறங்கும்போதே. ரஞ்சனுக்குத் தெரிந்து விட்டது.

காரோட்டி. ஓரமாகக் காரை நிறுத்தியதுமே இறங்கி ஓடி வந்து, பின்புறக் கதவைத் திறந்து விட்டான். திறந்து விட்டார் என்று சொல்ல வேண்டும். வயது அதிகம் இருக்கும். அந்த வகையில் இந்த வயதுப் பெண்ணின் காரை ஓட்டப் பொருத்தமான ஆள்தான்.

தோளில் மாட்டிய பையோடு அனிதா இறங்கியதும், காரின் உள்ளிருந்து சின்னச் சாப்பாட்டுப்பையைக் காரோட்டி எடுத்துக் கொடுத்தான்.

அதை வாங்கிக்கொண்டு, தரையைப் பார்த்து நடப்பது போலத் தாழ்ந்த பார்வையோடு, இப்புறம், அப்புறம் திரும்பாமல் வேகமாக நடந்து, பள்ளியின் உள்ளே சென்றாள் பெண். லேசாகச் சுளித்த புருவம்! ஏனோ?

யாருடனும் பேசவே காணோம்! வகுப்புத் தோழிகள் யாரேனும் வந்திருப்பார்கள்தானே?

ஆனால், தலையை திருப்பிப் பார்த்தால்தானே, யாரேனும்

தோழிகளைக் கண்டுகொண்டு பேச முடியும்? ஒருவேளை, அப்படி யாரையும் பார்த்துப் பேச மனமில்லாமல்தான், இப்படி இடம் வலம் பாராமல் நேராக நோக்கி வேகமாக நடப்பதோ?

அக்காவின் சிறு வயதுப் படத்தை நினைவுபடுத்துவது போல அவளுடைய பெண்ணின் தோற்றம். ரஞ்சனை மிகவும் பாதித்தது.

கொஞ்சம் சின்னவள் போலவும் தோன்றவே, அவனுக்கு உள்ளே வலித்தது.

இரண்டு பெண்களுமாக ஒரே மாதிரிச் சீருடை அணிந்து, ஒரே பள்ளியில் படித்து... எவ்வளவு சந்தோஷமாக வளர்ந்திருக்கலாம்?

இப்போதானால், ஒருவர் இருப்பதே அடுத்தவருக்குத் தெரியாது. சந்திக்க நேர்ந்தால், அடையாளமே கண்டு கொள்ள முடியாது!

திடீரென்று கண் பார்வையில் சென்று கொண்டிருந்த பெண் தெளிவற்றுக் கலங்கிக் காணாமல் போனாள்.

என்ன இது என்று அனிச்சையாகக் கண்களை லேசாகக் கசக்கி விட முயன்றால், கைகளில் ஈரம்! அதாவது, அவனது கண்களில் கண்ணீர் நிரம்பியிருக்கிறது!

சேச்சே! நானா பொது இடத்தில் நின்று அழுகிறேன்? யாரேனும் பார்த்தால் எவ்வளவு அசிங்கம் என்று அவன் கூசித் திரும்பிய வேகத்தில், கையில் ஏதோ பட்டுத் தெறித்து எங்கோ விழுந்தது.

விழுந்த வேகத்தில் அந்த டிஃபன் பாத்திரம் தெருவின் நடுவுக்கு உருண்டு ஓட, அப்போது வந்து கொண்டிருந்த கார் ஒன்றின் சக்கரத்தின் அடியில் மாட்டி, அப்பளமாக நொறுக்கிப் போயிற்று!

வினாடிக்குள் எல்லாம் விரைந்து நடந்துவிடத் திகைப்புடன் திரும்பிப் பார்த்தால், அருகில் நின்று கொண்டிருந்த ஒரு பெண் அவனை கண்ணாலேயே எரித்துக் கொண்டிருந்தாள்!

அந்தப் பெண்ணின் டிஃபன் பாத்திரம் போலும்.

அவளும்... கரெக்ட். யாரோ பெண்ணுருவம் அருகில் நின்று அவனைப் போலவே, பள்ளிப்பக்கமே பார்த்தது போல... அதுவும் அனிதா செல்லும்போதுதான் அவளும் வந்து நின்று பார்த்ததை அரை குறையாக உணர்ந்தது, அவனுக்கு நினைவு வந்தது.

"இப்படியா இடிப்பது?" என்று கோபமாகக் கேட்டாள் அவள்.

அவளுக்குச் சாப்பாடு போயிற்றே, வாங்கிக் கொடுக்கலாமா என்று எண்ணியவாறு, அவளிடம் "சாரி. சாரி. ஏதோ ஞாபகம்! வந்து... இப்போது உங்கள் உணவு..." என்று சமாளித்து அவன் ஏதோ சொல்லும்போதே. பொறுமையிழந்த ஆத்திரத்துடன் "சை...!" என்று சீறியவள் விருக்கெனத் திரும்பி, வேகமாக அங்கிருந்து போயேவிட்டாள்.

செய்வதறியாது ரஞ்சன் குழம்பி நின்றான்.

அவனைப் பார்த்து ஒருத்தி 'சை' என்றுவிட்டாளே!

வேண்டுமென்று வம்பு செய்ய முயலும் விடலை போல எண்ணி விட்டாள் போலிருக்கிறதே! அப்படியில்லை., தெரியாமல்தான் பட்டது என்று விளக்கம் சொல்லவும் வழியில்லாமல், இங்கே வந்து பழகியவள் போல, இந்த நெரிசலில் புகுந்து விரைந்து போய்விட்டாளே!

அவனைத் தப்பாக நினைத்துக் கொண்டே அவள் போய்விட்டது, ரஞ்சனை வெகுவாக உறுத்தியது. அவன் அப்படிப்பட்டவன் இல்லை என்று அவளிடம் எப்படித் தெரிவிப்பது? தேடிப் போய்ச் சொன்னால்கூட நம்புவாளோ என்னவோ?

இவள் யாராக இருக்கும்?

யாரேனும் பிள்ளைகளைப் பள்ளியில் விட்டுவிட்டு அலுவலகத்துக்குச் செல்லும் அம்மாவோ என்று எண்ணிப் பார்க்கவே வழியில்லாமல், அந்தப் பெண்ணின் வயது மிகவும் குறைவு. மிஞ்சி மிஞ்சி முன் இருபதுகளில்தான் இருக்க முடியும்.

ஒருவேளை... என்று ஒன்று தோன்றவே, பள்ளி கேட் அருகே நின்ற காவலாளியிடம் சென்று "பாரப்பா, திரும்பும்போது எப்படியோ கை தட்டி, அந்தப் பெண்ணின் சாப்பாட்டுப் பாத்திரம் கீழே விழுந்து, கார் அடியில் போய் உடைந்து உணவும் வீணாகி விட்டது... 'டப்பர்வேர்' மாதிரி விலை கூட அதிகம் உள்ள பாத்திரம். ஈடு பண்ணலாம் என்று பார்த்தால் வேகமாக போய் விட்டார்கள். அவர்கள் யார் என்று தெரியவில்லை. ஒருவேளை, இங்கே

ஆசிரியையோ என்று..." என்று மெதுவாகக் கேட்கும்போதே. அந்தக் கேள்வியே அபத்தமாகத் தோன்றியது.

இங்கே ஆசிரியை என்றால், பள்ளி தொடங்கும் நேரத்தில் உள்ளே செல்லாமல், வெளியே போவாளா?

நல்லவேளையாகக் காவலாளி இந்தக் கேள்வி, அவனிடம் கேட்கவில்லை. அல்லது, ஏதாவது உணவு வாங்கத்தான் போனாளோ என்று ரஞ்சன் யோசிக்கும்போதே, "அவர்கள் இங்கே டீச்சரில்லை. அந்தக் கார்க்காரப் பொண்ணு - இஸ்கோலுக்குள்ளார போகிறவரைக்கும் நின்னு பார்த்திட்டு திரும்பிப் போயிடும்" என்று இயல்பாகவே பதில் சொன்னான்.

அவனது தோற்றம் ஈட்டித் தந்த மரியாதையோ என்னவோ? ஆனால் அந்தப் பெண்ணுக்கு அது தெரியவில்லையே.

மெல்லத் திரும்பி நடந்தவனுக்கு மனம் சுட்டது. அனாவசியமாக ஒரு பெண்ணின் வயிற்றில் அடித்துவிட்டானே. பாவமில்லை?

ஏதோ திரைப்படம் ஒன்று ரஞ்சனுக்கு திடுமென நினைவு வந்தது. அந்தப் படத்தில் வருவது போல், அவளுக்கு வேறு உணவு வாங்கிக் கொடுக்க முடிந்திருந்தால், அதை உண்ணும்போது அவனை அவள் நல்லவிதமாக நினைத்திருப்பாளோ?

தன் போக்காக நடந்து காரை அடைந்தவனுக்குச் சுரீலென்றது.

அவன் எதற்காக, என்ன நோக்கத்தோடு இங்கே வந்தான்?

அக்கா மகளைப் பார்த்ததும் பெரிதாகக் கண்ணெல்லாம் கலங்கிவிட்டு, இப்போது எவளையோ பற்றி என்ன யோசனை?

மானசீகமாக தலையில் பலமாக ஒரு தட்டுத் தட்டிக்கொண்டு காரில் ஏறி ஓட்டியவாறு ரஞ்சன் யோசித்தான்.

அனிதாவைப் பார்த்தாயிற்று. சேணம் பூட்டிய குதிரை மாதிரி, அக்கம் பக்கம் பாராமல் அவள் பள்ளிக்குள் போவதையும் கண்டாயிற்று. அடுத்து என்ன செய்வது?

பள்ளி விடும் நேரம் வந்து மறுபடியும் அவள் திரும்பிச் செல்லும்போதுதான், இனிக் கண்காணிப்பைத் தொடங்க வேண்டும்.

அதுவரை சும்மா இருப்பதற்கு, அம்மாவிடம் சொல்லி வந்தது

போலச் சென்னைக் கிளை பற்றிய வேலைகளைப் பார்க்கலாம்.

வேலையில் இறங்கிவிட்டால், ரஞ்சனுக்கு வேறு நினைவுகள் வருவதில்லை. அதன்படி சில ரியல் எஸ்டேட் நிறுவனங்களில் தொழில்துறை வாடகை இடங்கள் பற்றி விசாரித்து, இரண்டு இடங்களை நேரிலும் போய்ப் பார்த்தான்.

அதற்குள் மதியம் ஆகிவிடவே, அவளது அலுவல் அறையில் தமக்கை தனியே இருப்பாள் என்பதால், அவளோடு பேசி, விவரம் சொன்னான்.

"ரொம்ப நல்ல பெண். அக்கா. லேசாகக் குனிந்த தலை, பார்வையைக் கூட இப்புறம் திருப்பாமல் நேராகப் பள்ளிக்குள் சென்றுவிட்டாள். அவளுக்குப் பெண் சினேகிதிகள் கூடக் கிடையாது போலத் தோன்றுகிறது. இனிப் பள்ளி விடுகிற நேரம் போய், வீடு வரை பின் தொடரப் போகிறேன்" என்று அறிவித்தான்.

"என்னவோ, அதில்தான் ஏதேனும் பிரச்சினை இருக்கக்கூடும் என்று எனக்குத் தோன்றுகிறது. எதற்கும் யார் என்று காட்டிக் கொள்ளாமல் நீ கவனமாகவே இரு" என்றாள் தமக்கை.

மாலையில் பள்ளி விடும் நேரம் சென்றவன், முன் போலவே காரை ஒதுக்கி நிறுத்திவிட்டு, ஒரு மரத்தடியில் நின்று கவனித்தான்.

கூடவே, காலையில் பார்த்த பெண் எங்கேனும் இருக்கிறாளா என்றும் பலமுறை பார்வையால் அலசியும் ஒரு பயனும் இருக்கவில்லை.

அதற்குள், காலையில் கண்ட அதே காரை, அதே டிரைவர் ஓட்டி வரவும், அவசரமாகப் போய்த் தன் காரில் ஏறி, வெளிப்படையாகத் தெரியாத அளவில் அந்தக் காரைப் பின் தொடர்ந்து சென்றான்.

கார் ஒரு 'ட்யூஷன்' சென்டரில் அவளை இறக்கிவிட்டு விட்டுப் போய்விட்டது.

காரைச் சற்றுத் தள்ளி நிறுத்தி கொண்டு, ரஞ்சன் தமக்கைக்குத் தகவல் தெரிவித்தான். "ப்ளஸ் ஒன் என்றாயில்லையா? ட்யூஷனுக்கும் அனுப்புகிறார்கள், இந்த வகுப்பு முடிகிற நேரம், மறுபடியும் கூட்டிப் போகக் கார் வரும் என்று நினைக்கிறேன்" என்றான்.

காருக்குள் இருந்தே கவனிக்கத் தக்க வித்மாகச் சற்றுத் தள்ளிப்போய் காரை நிறுத்தினான்.

வகுப்பு முடிந்துதானே வருவாள் என்று எண்ணியவன், சிறு கவனத்தை அந்தப் பக்கம் வைத்துக் கொண்டே லாப்டாப்பை எடுத்து வேலை செய்யலானான்.

சுமார் ஒருமணி நேரம் இப்படிக் கழிந்தபின், திடுமென வெளியே ஏதோ சலனம் உணர்ந்து, பார்வையை அந்தப் பக்கம் திருப்பினான்.

அனிதாதான். ஆனால் டியூஷன் இடத்திலிருந்து அவள் மட்டும் தனியாக வெளியே வந்தாள்.

இப்போதும் அவள் அக்கம் பக்கம் பார்க்கவில்லை. நேராகப் போய், சற்று தூரத்தில் மர நிழலில் நிறுத்துவது போலச் சற்று உட்புறமாக நின்ற ஒரு பைக்கில், பழகியவள் போலக் குதித்து ஏறி அமர்ந்தாள்.

அதன்பிறகு, மரத்தின் பின்புறம் இருந்து, ஓர் இளைஞன் வெளியே வந்து உல்லாசப் புன்னகையோடு அவளை நெருங்கினான்! அவளும் அவனைப் பார்த்து வரிசைப் பற்கள் பளபளக்க, வரவேற்பாய் சந்தோஷ முறுவல் செய்தாள்!

கொடிக்கு காய் பாரமாகுமா? 4

ரஞ்சனுக்கு ஒரே திகைப்பு! அதிர்ச்சி!

பள்ளியில் அடுத்த பெண்களுடன் கூடப் பேச விரும்பாதவள் போல தரையிலேயே பார்வையைப் பதித்தபடி நேரே நடந்தது என்ன? இப்போது டியூஷன் வகுப்பிலிருந்து முன்னதாக ஓடி வந்து இன்னொருத்தன் பைக்கில் உட்கார்ந்து, அத்தனை பல்லையும் காட்டி இளிப்பது என்ன?

வெறும் இளிப்போடுதான் நிற்கிறதா?

பேச்சுப் பழக்கமும் இருப்பதைக் கண்கள் பளபளக்க, அவனிடம் அனிதா ஏதோ சொல்லிக் கலகலப்பது காட்டியது.

அவனும், அவள் அருகே நெருங்கித்தான் நின்றான். ஒரு கையை

அவள் அருகே சீட்டில் வைத்துக்கொண்டு, என்னவோ அவள் பேச்சில் தேன் சொட்டுவது போலப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அவ்வப்போது, அவள் கையில் லேசாகத் தட்டல் வேறு!

இது பொதுச்சாலை என்பதால், இந்த அளவில் நிற்கிறானா? சற்றுத் தனியிடம் கிடைத்தால்...

ரஞ்சனுக்கு ரத்தம் கொதித்தது.

காரில் இருந்து இறங்கிப் போய், அவனை இழுத்துப் போட்டுத் துவைத்து விடலாமா என்று கை கால்களோடு மனமும் சேர்ந்து பரபரத்தது. ஆனால் பிடிவாதமாக, உடல் இறுகப் பொறுமை காத்தான்.

அக்கா என்ன சொன்னாள்? அவள் உணர்ச்சி வசப்பட்டு ஏதேனும் பேசிவிடக்கூடும் என்று அஞ்சித்தான், அவள் தம்பியை அனுப்பியதே!

அவன் அதைவிட மோசமாகக் கையையே நீட்டினான் என்றால், அது எங்கே போய் முடியுமோ?

ஆனால் எதற்கும்... என்று பைக் எண்ணைக் குறித்துக் கொண்டான்.

இதையே அக்கா தாங்குவது கடினம். இன்னும் அவனால் இது பெரிய பிரச்சினையாகவும் ஆகியது என்றால், நிச்சயமாக உடைந்து போவாள்.

இதை, அக்கா சொன்னபடிதான் கையாள வேண்டும் என்று பொறுமையை இழுத்துப் பிடித்துக்கொண்டு, ரஞ்சன் அப்படியே அசையாமல் உட்கார்ந்திருந்தான்.

பல மணி நேரம் போலத் தோன்றிய அரைமணி நேரம் கைகளையும் உதடுகளையும் அழுந்த மூடி அவன் அசைய்யாமல் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த பின், அவர்களிடம் வேறு அசைவு தெரிந்தது.

அந்த இளைஞன், வாய் ஓயாமல் ஏதோ அளந்து கொண்டிருந்த அனிதாவின் தோளில் தட்டி, கையை நீட்டி மணியைக் காட்டினான்.

தன் போக்காய் ரஞ்சனும் கைக்கடிகாரத்தைப் பார்த்தால், சரியாக அரைமணி நேரம் ஆகியிருந்தது. பயங்கர நேரம் தவறாமை போல!

பைக்கில் இருந்து இறங்கினாலும், அனிதா செல்ல மனமின்றித் தயங்கி நின்றாள். ஆனால் அவளது தோள்களைப் பற்றி, ட்யூஷன்

சென்டர் பக்கமாக அவன் லேசாகத் தள்ளிவிட்டான். பிடிக்காவிட்டாலும், வேறு வழியில்லாதவள் போல, அவள் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றாள்.

பார்த்துக் கொண்டே இருந்த ரஞ்சனுக்கு உடம்பெல்லாம் தீப்பற்றி எரிந்தது!

என்ன தைரியம் இந்த ராஸ்கலுக்கு? அவன் வீட்டுப் பெண்ணைப் படிக்க விடாமல் கூப்பிட்டுப் பேசுவதோடு, தொட்டுவேறு திருப்புகிறான்! தொட்ட கையை முறிக்க... என்று ஆத்திரப்படும்போதே, டியூஷன் வகுப்பு முடிந்து எல்லோருடனும் அனிதாவும் சேர்ந்து வெளியே வருவது தெரிந்தது.

இங்குமங்கும் பாராத அதே நேர்ப்பார்வை 'என்னிடம் யாரும் நெருங்க வேண்டாம்' என்று எச்சரிப்பது போல அதே புருவச் சுளிப்பு.

சற்றுமுன் எவன் பைக்கிலோ அமர்ந்து, கண்கள் பளிச்சிட, மூச்சு விடாமல் கதையளந்தவள் இவளே என்று சத்தியம் செய்தால் கூட நம்ப முடியாது! என்ன நடிப்பு!

பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அவளை அங்கே கொண்டுவிட்ட கார் வர, அவள் நேராகப் போய்க் காரில் ஏற, கார் கிளம்பியது.

அவசரமாகத் திரும்பிப் பார்த்தால், அந்த ராஸ்கலும் ஏற்கனவே கிளம்பித் தெரு முனை திரும்பிக் கொண்டிருந்தான். அனிதா காரில் ஏறுகிறாளா இல்லையா என்று, நின்று பார்க்கக்கூட இல்லை! அந்தக் கார் டிரைவர் ஏதேனும் சந்தேகப்பட்டு விடக்கூடாது என்று அவ்வளவு பயம், கவனம் போல!

ஆனால், பைக்கில் செல்லும்போது அவன் பின்னே காரில் தொடர்வது கடினம்.

அத்தோடு அக்காவுடைய பெண்தான் அவனுக்கு முக்கியம், மற்றபடி அந்த நாய் எப்படி, என்ன ஆனாலும் ரஞ்சனுக்கு அக்கறையில்லை!

ரொம்பவும் கேவலமாக எண்ணுகிறோமே, ஒருவேளை இது உண்மை அன்பாக இருக்கலாமோ என்று ஒருகணம் அவனுக்குத்

தோன்றத்தான் செய்தது. ஆனால், சம்பந்தப்பட்ட பெண்ணுடைய உறவினர் இப்படிக் கருதுவதுதான் இயல்போ, என்னவோ. அந்த பைக்காரனை ரஞ்சனால் கொஞ்சமும் நல்லவிதமாக நினைக்கவே முடியவில்லை.

எப்படியோ போய்த் தொலையட்டும் என்று ஒதுக்கிவிட்டு, அக்கா மகள் விஷயத்தில் மனதைச் செலுத்தினான் அவன்.

அவளது வீடு எப்படி இருக்கிறது? அங்கே யார் யார், அவளிடம் எப்படியெப்படி நடந்து கொள்கிறார்கள் என்று அறிய வேண்டும்.

அறிந்து, அந்த அத்தானின் சட்டையைப் பிடித்துக் கேட்க வேண்டும். பெண்ணை வளர்த்திருக்கும் லட்சணமா என்று!

எப்படியும், இந்த ராஸ்கலுக்கு ஒரு வழி பண்ண வேண்டும்.

காரைத் தொடர்ந்து செல்லும்போதே, அடுத்து செய்ய வேண்டியது பற்றி, ரஞ்சனின் மனம் பலவேறு விதமாக யோசித்தது.

இதை, சுமாலினியிடம் இப்போது சொல்லக் கூடாது என்று அவனுக்கு நிச்சயமாகத் தோன்றியது. முழுக்க முழுக்க வெட்டிவிட்ட உறவு என்றாலும், ஒரேயடியாக அதை விட்டுவிட முடியாமல்தானே, அவ்வப்போது வந்து பார்த்திருக்கிறாள்?

மகள் நன்றாக இருக்கிறாள் எனும்போதே மதிப்பெண் குறைவதை எண்ணிப் பெரிதாகக் கவலைப்படுகிறவள்! அதன் காரணம் இது என்று தெரிந்தால் அவள் தாங்க மாட்டாள் என்பது நிச்சயம்.

ஒருவேளை அவனாகவே இதைச் சீர்படுத்த முடிந்தால், அனாவசியமாக அக்காவைக் கஷ்டப்படுத்துவானேன்? திருமணம் என்ற பெயரில் அவள் அனுபவித்திருக்கும் துன்பங்கள் போதாதா?

ப்ளஸ் ஒன் பாடம் அனிதாவுக்குப் புரியவில்லை, மதிப்பெண் குறைவதால் டியூஷனுக்கும் போகிறாள் என்று சொல்லி வைக்கலாமே! இப்போதைக்கு, அது போதும்.

கார் சென்ற வழி, பொத்தாம் பொதுவாக ஏதோ தெரிகிற மாதிரி இருந்தாலும் பெரிய பெரிய அடுக்கு மாடிக் கட்டிடங்களும், பெரிய கடைகளுமாக, பனிப்படலம் போல லேசாக நினைவில் இருந்ததைக் கூட, வேறாக்கிக் காட்டின.

கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றியதாகச் சொல்வார்களே, அதைப் போல அக்கா மகளின் காரைத் தொடர்ந்தான் அவன்.

ஒரு துருப்பிடித்த கேட்டினுள் கார் செல்லவும், எதிர்ப்புறமாகச் சற்றுத் தள்ளி போய் தன் வண்டியை நிறுத்திக்கொண்டு, இறங்கி நின்று வீட்டை ஏற இறங்க நன்றாகப் பார்த்தவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

முதலில் வெளி கேட்! தங்க நிறப் பூக்களும், சிவப்பு நிறப் பெயிண்டுமாக அது அன்று பளபளத்தது. இப்போதும் அவனுக்கு நன்றாக நினைவு இருந்தது. வீடு தோட்டம் எல்லாமே அப்படித்தான்!

சொன்ன இடத்தில் அளவாக நின்று அழகாகப் பூத்திருந்த, அழகழகான செடி கொடிகள். விசாலமான புல்தரை! பக்கவாட்டில் ஒரு பந்தலில் பழ வாசனையுடன் மனோரஞ்சிதம் பூத்து, நறுமணத்தை அள்ளி வீசிக் கொண்டிருந்தது.

அக்கா வீடு என்று முதலில் பெருமையாக பார்த்ததுதான். அப்புறம்தானே, அந்த ஒய்யாரக் கொண்டைக்குள் இருந்த ஈரும் பேனும் சிக்குச் சிடுக்குகளும் வெளியே தெரிந்து வெறுப்பேற்றியது!

"அந்த வீட்டில் மனமயக்கும் பூவாசம் இருக்கிறதென்று நினைத்தேன் ஆனால் அங்கே இருக்கிறவர்கள் அந்த பூவுக்குள் மறைந்திருக்கும் பூநாகமாக அல்லவோ இருந்திருக்கிறார்கள்!" என்று அப்பா வேதனையில் புலம்பியது தெளிவாக ஞாபகம் வந்தது.

என்னவோ மனதுக்குள் படம் ஓடுவது போல, சுத்தமாகப் பராமரிக்கப்பட்டிருந்த அன்றைய வீடும் தொடர்ந்த வேதனையும் ரஞ்சனுக்கு தெளிவாக நினைவு வந்தன. இப்போதும் வீடு அதே அளவிலேயே நின்றாலும், பராமரிப்பே இல்லாதது போல எத்தனை வேறுபாடுகள்!

இதே வீடுதானா என்று சந்தேகம் கூட வந்தது.

ஆனால், நேரே நடந்து வீட்டுக்குள் செல்லும் பாதையில் மேலே கம்பிகளை அரைவட்டமாக வளைத்து, அந்தப் பந்தலில் குண்டு மல்லிகையை முன்பு அழகாக படர வைத்திருந்தார்கள். இப்போது மல்லிகை இல்லாவிட்டாலும், கம்பிப் பந்தல் அமைப்பு அப்படியே இருக்கிறதே! நிச்சயமாக. அதே வீடுதான்.

பெண்ணை வீட்டில் விட்டுவிட்டுக் காரோட்டி மறுபடியும் காரை வெளியே எடுத்துப் போனார்.

உள்ளே வேறு யாரும் இல்லை, அனிதா வீட்டில்தான் இருக்கிறாள்.

இனி அவள் வெளியே போக வாய்ப்பில்லை. காரோட்டிக்கே பயப்படுகிறவன், வீடு வரை வரவும் போவதில்லை.

இனி, நாளைக் காலையில் கண்காணிப்பைத் தொடங்கினால் போதும்!

யோசனையோடு திரும்பிச் சென்று காரைத் திறப்பதற்குக் கையை நீட்டியபோது, வீட்டின் பக்கவாட்டில் ஒரு கேட் திறக்கும் சத்தமும், கூடவே ஒரு ஸ்கூட்டர் வந்து வேகம் குறையும் ஒலியும் கேட்டுத் திரும்பினால் இன்னோர் ஆச்சரியம்.

புதிதாகச் சுற்று மதிலின் ஒரு கோடியில் ஒரு சின்ன கேட் மட்டுமல்ல, பக்கவாட்டில் மாடிப்படி கூடத் தெரிந்தது!

வெளிப்புறத்தில் மாடிப்படி என்றால் மாடியை வாடகைக்கு கொடுத்திருக்கிறார்களா? அப்படித்தானே அர்த்தம்?

கால வித்தியாசம் என்றால் இதுதானா? அவர்கள் வாடகை வீட்டில் இருந்ததை அவ்வளவு கேலி பேசியவர்கள்!

பழைய நினைவுகளும் இன்றைய இருப்புமாக அவன் தடுமாறிக் கொண்டு இருந்தபோது "அப்புறம் மதியத்துக்கு என்னடா சாப்பிட்டாய்?" என்ற கேள்வியும் "காண்டீனில்தான்மா. கொஞ்சமும் நன்றாகவே இல்லை! இப்போது வீட்டில் என்ன இருந்தாலும் மேஜையில் எடுத்து வையுங்கள். பசி கபகப என்கிறது!" என்ற பதிலும், அவனை நனவுக்குக் கொணர்ந்தன.

"இதோம்மா" என்று கேட்டை மூடிவிட்டுப் படியேறலானாள் அவளுடைய தாயார்.

மதியச் சாப்பாடு இல்லையாமா,,, அவனும் சாப்பாட்டுப் பாத்திரத்தைத் தானே தட்டிவிட்டிருந்தான்?

திகைத்துப் போய் சற்று முன் வந்தவளைப் பார்த்தால், அவளும், அதே டிஃபன் பாக்ஸ் பெண்! ஆனாலும், உலகம் இவ்வளவு சின்னதாக இருக்கிறதே!

இவளுக்கு இந்த வீட்டில் என்ன வேலை? என்ன உறவாக இருக்க முடியும்?

உறவாக இருக்க வழியில்லை; சின்னக் கேட் வழியே வந்தாளே! அப்படியானால், இவள்தான் மாடியில் குடியிருப்பவளோ?

யாராக இருந்தாலும், அவளைப் பார்க்க நேர்ந்தது. அதிசயமே! அவளிடம் ஒரு பாக்கிவேறு வைத்திருக்கிறானே! கட்டாயம் செலுத்த வேண்டிய பாக்கி!

அவளிடம் மன்னிப்புக் கேட்கும் கடமை அவனுக்கு இருக்கிறது! வயிற்றில் அடித்ததாலேயே கட்டாயமாக செய்தாக வேண்டியது!

தள்ளிப் போடுவானேன்? இப்போதே மன்னிப்புக் கேட்டு விடலாமே என்று எண்ணி ஓர் எட்டு ரஞ்சன் எடுத்து வைக்கும்போதே, அந்தப் பெண்ணும் மாடிப்படி அருகே அவளது இரு சக்கர வாகனத்தை ஸ்டான்ட் போட்டு நிறுத்திவிட்டு நிமிர்ந்தாள்.

ரஞ்சனைப் பார்த்ததும், அவளும் வெகுவாகத் திகைத்துப் போனாள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் உடனே சுதாரித்து கோபத்துடன் கூடிய ஓர் அலட்சியமான தலை சிலுப்பலுடன் மறுபடியும் திரும்பி, மாடிப்படியில் மடமடவென்று வேகமாக ஏறிப்போய்விட்டாள்.

ஓஹோ! அசட்டு விடலைப் பையனைப் போல, அவளை, அவன் விடாமல் தொடர்ந்து வந்ததாக எண்ணியிருப்பாளோ?

என்ன அநியாயம்! அப்படி அந்த வீடு வரை, ரஞ்சன் அவளைப் பின் தொடர்ந்து வருவதானால், அவனுக்கு வேறு வேலை வெட்டி எதுவும் கிடையாதா?

ஆனாலும், இவளுக்குக் கர்வம் அதிகம்தான்!

அப்போதைக்கு மன்னிப்புக் கேட்கும் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டு, அவனது இருப்பிடம் நோக்கி, ரஞ்சன் சென்றான்.

சுமாலினியிடம் கொஞ்சம் வடிகட்டி, வீடு வரை அனிதாவைப் போய்ப் பார்த்துவிட்டு வந்ததாகவும், மறுநாளும் மீண்டும் அக்கா மகளைப் பின் தொடர்ந்து போய், இன்னும் கொஞ்ச நேரம் கண்காணிக்கப் போவதாகவும் தெரிவித்தான்.

பள்ளி அருகே ஒரு பெண்ணின் உணவுப் பாத்திரத்தைத் தெரியாமல் தட்டிவிட்டது, அந்தப் பெண்ணையே இந்த வீட்டில் பார்த்தது எல்லாம் ஒரு வேடிக்கை கதை போல அளந்தான்.

அவன் எதிர்பார்த்தது போலவே, சுமாலினியும் இறுக்கம் தளர்ந்து, "ரஞ்சி பார்த்துடா, யாரையும் வயிற்றில் அடிக்கக் கூடாதே! ஒருவேளை சாப்பாட்டைத் தட்டிவிட்டுத் தண்டனையாக வாழ்க்கை முழுவதும் சாப்பாடு போடும்படி ஆகிவிடப் போகிறது! அந்தப் பெண் பார்க்க எப்படி இருந்தாள்? நல்ல அழகா?" என்று கேலிக் குரலில் கேட்கவும், ஒரு கணம் ரஞ்சன் திகைத்துத் திணறிப் போனான்.

அவள்... அந்தப் பெண் எப்படியிருந்தாள்? அழகிதானோ? அப்படித்தான் தோன்றியது...

ஆனால்,அதைத் தமக்கையிடம் சொல்ல மனமற்று "போக்கா! நான் அனிதாவைப் பார்ப்பேனா? எவளோ ஒருத்தியைக் கவனிப்பேனா? எனக்கு அவள் முகமே அவ்வளவாக நினைவில்லை. ஏதோ சாப்பாடு என்று பேசக் கேட்ட பிறகுதான் அவள் என்று தோன்றியதே! ஒருவேளை... நாளைக்கும் அவளைப் பார்க்க நேர்ந்தால், அப்புறமாகச் சொல்லுகிறேன்" என்றான் அவன் விட்டேற்றியாக!

அதன்பின், சென்னை கிளை தொடர்பாக நடந்த வேலைகளைச் சொல்லிவிட்டு, "அம்மாவிடம் இதை மட்டும் பேச்சுவாக்கில் சொல்வது போலத் தெரிவித்து விடக்கா" என்றான் தம்பி.

தொழில் தொடர்பாகத்தான் மகன் அலைகிறான் என்று நினைத்து, அம்மா நிம்மதியாக இருப்பார்கள்.

மறுநாளும் அனிதாவின் பள்ளி அருகில் இருந்த சந்தில் காரை நிறுத்திவிட்டு அக்கா மகளின் வருகைக்காக ரஞ்சன் காத்திருந்தான்.

தலையில் பெரிய கைக்குட்டையைக் கட்டிக்கொண்டு, ஓரமாக நின்றவள், அந்த மாடிக்காரிதானோ? ஒருதரம் இவனிடம் ஒரு பார்வை பாய்ந்ததோ என்ற சந்தேகம் கூட அவனுக்கு வந்தது.

ஆனால் அதுபற்றி ஏதேனும் வகையில் செயல்படுமுன், அனிதாவின் கார் பள்ளியை நோக்கி வந்தது.

அனிதா காரிலிருந்து இறங்கிச் செல்லவும், கைக்குட்டையால்

முக்காடு போலத் தலையை மறைத்திருந்த அந்தப் பெண், சின்னவளைப் பின் தொடரலானாள்.

அனிதா பள்ளியினுள்ளே சென்று, மறையும் வரை பார்த்துவிட்டு, அவள் மடமடவென்று வெளியேறவும், ரஞ்சனுக்கு நூறு சதவீதமாக, இவளேதான் அந்த மாடிவீட்டுப் பெண் என்று நிச்சயமாயிற்று.

பள்ளி வரை அனிதாவைப் பின்தொடர்ந்து வருகிறாளே. என்ன காரணம்?

அவனைப் போலவே, ஒரு நல்ல எண்ணத்தில்தான் வருகிறாளா? அல்லது... அல்லது என்ன?

இப்படித் தூரத்தில் பின்தொடருவதில் அனிதாவுக்குக் கெடுதல் நடக்க வாய்ப்பில்லை. ஆனாலும், இந்தப் பெண்ணைப் பற்றியும் அறிவது நல்லது.

ஆனாலும், முதல் முக்கியத்துவம் அனிதாவுக்குத்தான்.

மாலையில் ட்யூஷனுக்குப் போனால் முன்தினம் போலவே, அக்கா மகள் அரை மணி முன்பாக வருவதும், பைக்காரனுடன் கலகலவென்று பேசுவதும், கொஞ்சமும் வேறுபாடே இல்லாமல் நடந்தது.

அவனுக்கு உறுத்தலுடன் கூடிய சிறு ஆச்சரியம் என்னவென்றால், அன்றும் அந்தப் பைக்காரன்தான் நேரத்தை நினைவுபடுத்தி, அனிதாவைத் திருப்பி அனுப்பினான்.

அதாவது, அனிதாவின் அழகான முகத்தில் மதிமயங்கி, மற்ற அனைத்தையும் அவன் மறந்து விடவில்லை! முக்கியமாக நேரக் கணக்கு துல்லியமாக அவன் கருத்தில் இருக்கிறது!

ஏன் அப்படி? நேரம் தப்பிப் போய், யாரும் கண்டுபிடித்து விடக் கூடாது என்றா? கண்டுபிடித்தால், அனிதா வீட்டாரிடம் மிக பயங்கரமாக வாங்கிக் கட்ட நேரும் என்ற பயமா?

அந்தக் குடும்பம் செய்யக் கூடியதுதான், அடியோடு நியாயமே தெரியாதவர்கள்! நல்லவர்களுக்கே கெட்டது செய்கிற கும்பல், அவர்களிடம் வாலாட்டுகிறவனைச் சும்மா விட்டுவிடுவார்களா? விஷயம் தெரிய வரும்போது, கைகால்கள் உடையாமல் தப்புவது கடினம். ஆனால் அது அவனது தலைவிதி!

இங்கே அக்கா மகளைப் பொறுத்தவரை, அவள்தான் முழுக்க மயங்கிக் கிடக்கிறாளோ என்று, ரஞ்சனுக்குத் தோன்றியது. அல்லது...

முழு நேரமும் அவளேதான் பேசினாள்? ஒருவேளை பேச ஆளில்லாமல் தவித்தவளுக்கு, இவன் கிடைத்தது... ஊகூம்... அவன் தோளைத் தொட்டுத் திருப்புவதை அவள் மறுக்கவில்லையே! இப்படியும் இருக்கலாம் என்று மனது அக்கா மகளுக்குச் சாதகமாக வக்காலத்து வாங்குகிறது!

ஆனாலும், வயதுக் கோளாறு பதினாறு வயதிலேயேயாத் தொடங்கிவிடும்? வழி காட்டத் தாய் அருகில் இல்லாததாலா? ஆனால், குடும்பத்தில்தானே இருக்கிறாள்? தாத்தா, பாட்டி, தந்தை, அந்த இன்னொருத்தி... தம்பி தங்கைகள் கூட இருக்கலாம்!

அவர்களோடு எப்படிப்பட்ட உறவு என்று, விரைவில் அறிய வேண்டும்.

ஆனால், எப்படியும், நிச்சயமாக, இது நல்ல சங்காத்தமில்லை. அவன் முழுக்க முழுக்க ஆண்கள் பார்லரில் உருவான ஆள். ரஞ்சனால், அதை ஒரே பார்வையில் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால், மிகவும் விலை உயர்ந்த ஒப்பனை! இந்த மாதிரித் தலை முடியை ட்ரிம் செய்து மீசையை வடிவமைப்பதற்கு நிறையக் கேட்பார்கள்.

ஆனால், அலங்காரத்துக்கு அவ்வளவு செலவு செய்கிறவன், ஏன் ஒரு சாதாரண பைக்கில் சுற்றுகிறான்? புதிதாகப் பெயின்ட் பண்ணியிருந்த போதும், ரொம்ப பழைய மாடல்!

பணக்காரப் பெண்ணை மயக்குவதற்கு இந்த அலங்காரங்கள் செய்தர்லும், மற்றபடி மிகச் சாதாரணமான ஆளா? வயதும் கூடுதல். அவளுக்குப் பதினாறே வயது. அவன் இப்போதே இருபத்தைந்துக்கு மேல் நிச்சயமாக இருக்கும்!

எத்தனை பெண்கள், பத்து படிக்கும்போதே, எதிர்காலத்தில் என்ன செய்வது அதற்கு என்ன படிப்பது என்று எவ்வளவு தெளிவாக இருக்கிறார்கள்! இவளானால், புத்தியை அலைய விடுகிறாளே!

இதற்கெல்லாம் மேலாக, தினமும் ட்யூஷனில் அரைமணி நேரம்

குறைந்தால், முழுதாக அவளால் படிக்க முடியுமா? படிப்பு என்னாவது?

பணம் வரும் போகும், ஆனால் கல்வி அழியாத செல்வமல்லவா? படிக்கிற வயதில் மனதை அலைய விட்டால் அந்தச் செல்வம் கிடைப்பது அரிதாயிற்றே!

என்னென்னவோ எண்ணி மனம் தவித்தபடி, மீண்டும் அந்த வீட்டுக்கு எதிர்ப்புறமாகச் சற்று தள்ளிக் காரை நிறுத்திக்கொண்டு, வீட்டை பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

அனிதா வீட்டுக்கு வந்து சற்று நேரத்தில், அந்தப் பெண்ணும் வீடு வந்து சேர்ந்தாள்.

முன் தினம் போலவே எல்லாம்.

ஆசை மகள் போல! அம்மா கீழே இறங்கி வந்து கேட்டைத் திறந்துவிட, பேசிக்கொண்டே இருவரும் படியேறிப் போனார்கள்.

இவளுக்கு இந்த வீட்டில் என்ன நிலைமை? மாடிக்குத்தான் போகிறாள். ஆனால் மாடியில் வாடகைக்கு இருப்பவள் என்றால், அக்கா மகளை பின் தொடர்ந்து பள்ளி வரை செல்வானேன்? அவள் உள்ளே செல்லும்வரை பார்த்துவிட்டுப் போவானேன்?

தாயின் பின்னே மாடிப்படி ஏறுமுன், நின்று ஓர் அலட்சியப் பார்வையை அவன் மேல்... அதாவது அவனது காரின் மேல் வீசிவிட்டுப் போனாள் அந்தப் பெண்.

அதன் பொருள் என்னவாக இருக்கும் என்று யோசித்தவனுக்கு விரைவில் விடை கிடைத்தது, கார்மேல் யாரோ பிரம்பு போல எதையோ வைத்துத் தட்டினார்கள்.

யார் என்று சிறு முகச் சுளிப்புடன் திரும்பிப் பார்த்தால், ஒரு போலீஸ் அதிகாரி, காரின் அருகில் வந்து நின்று, அவரது பிரம்பால் அவனது காரைத் தட்டிக் கொண்டிருந்தார்.

அதிகாரத் தட்டல்! அந்தப் பெண்ணின் கைவரிசையோ?

போலீஸ் புகார் வரை போவதானால், என்ன திமிர். அவளுக்கு!

கொடிக்கு காய் பாரமாகுமா? 5

தயங்கி, முகம் சுளித்து, அந்தப் போலீஸ் அதிகாரிக்கு எரிச்சலூட்டாமல் உடனே கார்க் கதவை திறந்து, காரை விட்டு இறங்கி நின்று "என்ன சார்?" என்று மரியாதை கொடுத்து, அதேசமயம் வியப்பையும் காட்டி ரஞ்சன் கேட்டான்.

அவரும் இதுபோலப் பலது பார்த்திருப்பார்தானே?

முகம் மாறாமலே "இந்த ஏரியாவுக்கு புதிதாக வந்தீர்களா? யார் நீங்கள்? என்ன செய்கிறீர்கள்? டிரைவிங் லைசன்ஸ் இருக்கிறதா? பார்க்கலாம்?" என்று கையை நீட்டினார்.

கைப்பையிலிருந்து டிரைவிங் லைசன்சோடு, அவனது விசிட்டிங் கார்டையும் சேர்த்து எடுத்து, போலீஸ் அதிகாரியிடம் ரஞ்சன் கொடுத்தான்.

இரண்டையும் பார்த்துவிட்டு, அவனிடம் திருப்பிக் கொடுத்தார் அதிகாரி, ஆனாலும் "இங்கே யார் வீட்டுக்கு வந்திருக்கிறீர்கள்?" என்று தொடர்ந்து விசாரித்தார்.

குழப்பமுற்றவன் போலச் சுற்றிலும் ஒரு தரம் பார்க்கிற பாவனையில் மாடி வீட்டு ஜன்னல் திரையின் பின்னே, அந்தத் துடுக்குக்காரி நிற்பதைக் கவனித்தான் ரஞ்சன்.

"பழைய குடும்ப நண்பர், இன்ஸ்பெக்டர் சார். சந்தித்து நிறைய ஆண்டுகள் ஆயின, வந்து பழகிய இடம் என்பதால், இலகுவாகக் கண்டுபிடித்து விடலாம் என்று நினைத்தேன். தேடிக் கொண்டிருக்கிறேன். நிறைய இடங்கள் பழைய அமைப்பே மாறிப் போயிருக்கின்றன. அதுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான் அவன்.

"நண்பர் பெயரென்ன?" என்று விடாக்கண்டனாகக் கேட்டார் காவல் அதிகாரி.

அவன் கோலத்தில் புகுந்து "இல்லை சார். பாதிப் பெயராகக் குறுக்கிக் கூப்பிட்டுத்தான் பழக்கம், நானே சற்று தேடினால் கண்டுபிடித்து விடுவேன் என்று நினைக்கிறேன்" என்று சமாளிக்க

முயன்றான்.

ஆனால் காவல் அதிகாரி நேரடியாகவே கூறினார் "புதியவராக இருந்து கொண்டு இப்படி ஒரே இடத்தில் காரை நிறுத்தி வைத்துக் கொண்டு இருக்கக்கூடாது மிஸ்டர் ரஞ்சன். இங்கே வசிப்பவர்களுக்கு யாரோ என்று யோசனையாக இருக்கும். கிளம்புங்கள்"

அதாவது புகார் வந்திருக்கிறது என்று சொல்லாமல் சொன்னார்.

எதிர்ப்புறம் அந்த வீட்டுமாடியைப் பார்த்தால், அவள் நின்று பார்ப்பது, ஜன்னல் திரையில் வரிவடிவாகத் தெரிந்தது.

அழகான வடிவமே! என் மேல் போலீசில் புகார் செய்தாளா என்று வந்த சீற்றமும் உடனே மறைந்தது, எல்லாப் பெண்களும் இப்படி கவனத்தோடு இருந்தால், நகரின் குற்ற விகிதமே குறைந்துவிடுமே!

நினைக்கும்போதே ஏதோ விசித்திரமாக உணர்ந்தான்.

இன்றென்ன பெண்களுக்கு வக்காலத்து வாங்குகிற நாளா? அப்போது அக்கா மகளுக்கு ஆதரவாக, இப்போது அறிமுகமே இல்லாத எவளோ ஒருத்திக்காக!

காவல் அதிகாரி நிற்பது நினைவு வர, "சரி சார். நானே இன்னும் கொஞ்சம் விவரம் சேகரித்துக் கொண்டு வந்து, நண்பரைத் தேடுகிறேன்" என்று அவருக்குச் சமாதானமாகப் பதில் சொல்லி சமாளித்தான்.

உடனே அவன் காரை எடுப்பதை நின்று பார்த்துவிட்டு போனார் காவல் அதிகாரி.

எதிர் வரிசை வீடுகளின் பக்கமாக திரும்புகிறாரோ என்று தோன்றியபோதும், காரை நிறுத்தி உறுதி செய்துகொள்ள, ரஞ்சனுக்குப் பிடிக்கவில்லை.

நிச்சயமாகத் தெரிந்த ஒன்றை எதற்காக உறுதி செய்வது?

ஆனால், அங்கே நின்று கவனிப்பது கடினம் என்றாகிவிட்டது.

இனி, அடுத்து என்ன செய்வது?

இந்த ஒரு காவல் அதிகாரிக்குப் பயந்து, வந்த வேலையை விட்டுவிடுவது முடியாத காரியம். பொறுப்பை வெளி ஆட்களிடம் ஒப்படைப்பதும், சுமாலினி சொன்னது போல அவ்வளவு சரியல்ல!

தீவிரமாக யோசித்து, அடுத்த நடவடிக்கையைத் தீர்மானித்தபோது, உள்ளூர உற்சாகமாகவே ரஞ்சன் உணர்ந்தான்.

அக்காவிடம் அது பற்றிக் கூறினான் "இந்த வீட்டின் மாடிப்பகுதியை வாடகைக்கு விட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அங்கே இருப்பவர்களுக்கு, நம் அனிதா மீது அக்கறை இருப்பதாகவும் தோன்றுகிறது. அதனால், அந்தக் குடும்பத்திடம் உதவி கேட்கலாமென்று நினைக்கிறேன். நான் யாரென்று காட்டாமல், பதினாறு வயது பெண் பற்றி விவரம் கேட்க முடியாது. அதனால் உன் கல்யாணப் படம், அதில் நான் இருப்பது, அனிதாவுக்குக் காது குத்தியபோது எடுத்தது, எல்லாவற்றிலும் நான் தெளிவாகத் தெரியும்படியான படங்கள் சிலது, என் லாப்டாப்புக்கு அனுப்பு. அந்த குச்சி மனிதன் நான்தான் என்று தெரியும்படியாக அடுத்தடுத்து எடுத்த என் படங்களும் அனுப்பு, அக்கா" என்றான்.

"இன்றே அனுப்பி விடுகிறேன் ரஞ்சி" என்று உடனே சொன்ன சுமாலினிக்கு ஒருசந்தேகம் வந்தது.

"ரஞ்சி, அங்கே என்னைப் பற்றி என்ன கதை பரப்பி வைத்திருக்கிறார்களோ? எப்படியும் நல்லவிதமாக இருக்காது, உன் முயற்சி எதிர்மறையான பலனைத் தந்துவிட்டால் என்ன செய்வது? உன்னை வீட்டுக்கு உள்ளே விடவேனும் வேண்டுமல்லவா? அது மட்டும் கொஞ்சம் கலக்கமாக இருக்கிறதேம்மா" என்று அஞ்சினாள் அனிதாவைப் பெற்றவள்.

இது, ரஞ்சனும் யோசித்ததுதான். ஆனால், வந்த காரணம் பற்றித் தெளிவாக எடுத்துச் சொல்லிப் புரிய வைத்துவிடலாம் என்ற நம்பிக்கையும் அவனுக்கு இருந்தது.

"அக்கா, நாம் ஒன்றும் சொத்து பத்துக்காக இங்கே வந்து வாயைப் பிளந்துகொண்டு நிற்கவில்லை. நம் கவலை, அனிதாவின் எதிர்காலம், அதிலும் இப்போதைக்கு அவளது படிப்பு மட்டுமே! என் பேச்சால்தான் தொழில் இவ்வளவு பெருகியிருக்கிறது என்று அவ்வப்போது சொல்வாயே! என் சொல் திறன் முழுவதையும் பயன்படுத்தி, அவர்களது நல்லெண்ணத்தைக் கட்டாயம்

பெற்றுவிடுவேன். கவலைப்படாதே, படங்களை அனுப்பிவிட்டு, நிம்மதியாகக் காத்திரு" என்று தம்பி தெம்பூட்ட, சுமாலினியும் ஒருவாறு அமைதி பெற்றாள்.

இப்படி அவன் கேட்டு, சுமாலினி அனுப்பிய படங்கள் அனைத்தையும் பார்த்த ரஞ்சனுக்குத் தமக்கையைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

அக்காவும் தம்பியும் மட்டுமில்லாமல், அவர்களுடைய பெற்றோரின் படங்களையும் சுமாலினி அனுப்பியிருந்தாள்.

தாய் தந்தை சிறப்பாகச் சீர் செய்த படங்கள், பாசப் பரவசத்தோடு பேத்தியைத் தூக்கி வைத்திருந்தது, குடும்பமே குழந்தை அனிதாவைச் சுற்றி நின்று கொஞ்சியது... இப்படிப் பலதையும் சுமாலினி அனுப்பியிருந்தாள்.

எல்லாமே அவர்கள் யார் யார் என்று விளக்குவதோடு, பெரிய அளவில் சீர் செய்ததையும், குழந்தையிடம் அவர்களது பாசத்தையும் அடிக்கோடிட்டு எடுத்துக் காட்டின.

'சுமி கெட்டிக்கார நிர்வாகி' என்று அப்பா எவ்வளவு சரியாகச் சொல்லியிருக்கிறார் என்று பெருமிதப்பட்டான் ரஞ்சன்.

அந்த வீட்டினர் பரப்பியிருக்கக் கூடிய இரண்டு குறைகளையும் அந்தப் படங்களாலேயே அடித்துவிட்டாளே!

மறுநாள் அனிதாவின் பள்ளிக்குச் செல்லாமல், ரஞ்சன் தொழில் தொடர்பான வேலைகளைக் கவனித்தான்.

அப்படியே எல்லோரிடமும் கலகலப்பாகப் பேச்சுக் கொடுத்ததில் ஒருவர் கிடைக்க, அவரோடு வட்டார வாகனப் பதிவு அலுவலகத்திற்கு சென்று அனிதாவைச் சந்திப்பவனின் பைக் எண்ணைக் கொடுத்து, அவனது முகவரியைப் பெற்றுக் கொண்டான்.

முகவரியை வாங்கித் தந்தவர், லேசாக முகம் சுளித்து "இது அவ்வளவு நல்ல ஏரியா இல்லையே, ரஞ்சன். கொஞ்சம் குடிசைப் பக்கம் என்பதோடு சட்டத்தை அவ்வளவாக மதிக்கிறவர்கள் கிடையாது!" என்று இன்னும் கொஞ்சம் விவரம் தந்தார்.

ரஞ்சனின் சந்தேகம் உறுதிப்பட, "அதே சந்தேகம்தான். எனக்கும்,

உறுதிப்படுத்திக் கொள்ளத்தான் உங்கள் உதவியைக் கேட்டேன், ரொம்ப நன்றி சார்!" என்றான் மிகுந்த மகிழ்ச்சி காட்டி.

அதுபற்றி இன்னும் கொஞ்சம் விவரம் அறிந்துகொள்ள, அவனோடு கூட வந்தவருக்கு ஆசைதான்.

ஆனால், முழு மனதாக நன்றி உரைத்தவன், அடுத்து, உடனே புதுக்கிளையின் அமைப்பு பற்றி வேறு பேச்சு பேசவும், மேற்கொண்டு தூண்டித் துருவாமல், அவரும், அந்தப் பேச்சில் அவனோடு இணைந்து கொண்டார்! அது, அவருக்கும் லாபம் தரக்கூடியது ஆயிற்றே!

மாலை வரை இந்த வேலைகளில் கவனம் செலுத்தியவன், அனிதாவின் டியூஷன் முடிகிற நேரம், டியூஷன் சென்டருக்கு சென்றான்.

அந்தப் பைக் சொந்தக்காரனின் பெயர் கலைச்செல்வன் என்ற கண்டுபிடித்திருந்தார்கள்.

'ஏண்டா உனக்கு என் அக்கா மகளாடா கேட்கிறது?' என்று பொருமியபடி இன்னும் சற்று அதிகத் தூரத்திலேயே காத்திருந்தான்.

இந்த பக்கமும், நேராக வீடு இருந்த கிளைச் சாலைக்குள் காரைக் கொண்டு செல்லவில்லை.

தெரு முனையில் ஒதுங்கி இருந்து கவனித்துவிட்டு, அனிதாவை விட்டுவிட்டு இந்தக் கார் போய்விட, மாடி வீட்டுப் பெண்ணும் திரும்பி வந்த பிறகும் சற்றுப் பொறுத்தே, ரஞ்சன் தன் காரை அந்தத் தெருவுக்குள் செலுத்தினான்.

உள்ளே சென்றவன், வேண்டுமென்றே, முந்தைய இடத்திலேயே காரை நிறுத்திவிட்டு, நேராக மாடிக்கே சென்றான்.

அழைப்பு மணியை அழுத்தியதும் சற்றுக் கவனத்துடனேயே மெதுவாகக் கதவைத் திறந்தவர், அந்த வீட்டுத் தலைவராகத்தான் இருக்க வேண்டும்!

அறிமுகமற்ற இளைஞனைக் காணவும், "யார்... யார் வேண்டும்?" என்று அவர் மெதுவாகக் கேட்டார்.

அவளுடைய தந்தை தயங்குவதை அவனால் புரிந்து கொள்ள

முடிந்தது.

அந்தப் பெண் எங்கே போனாள்? அவளுக்கானால், அவனை அடையாளமேனும் தெரியும்! அவனை, அவள் பார்த்த இடங்களை நினைவுபடுத்தி விட்டு விளக்கம் சொல்வது, ஓரளவு எளிதாக இருக்கும். ஆனால், அவளை ஆளையே காணோமே!

—இப்போது இவரிடம் எல்லாம் சொல்லித்தான் தொடங்கவே முடியும்!

"வந்து... என்னைத் தப்பாக எண்ண வேண்டாம் சார். கோவையில் கணிசமான அளவிலேயே தொழில் நடத்துகிறோம். இங்கேயும் கிளை தொடங்குவதாக இருக்கிறோம்" என்று கைப் பையில் இருந்த தன் விசிட்டிங் கார்டை எடுத்து அவரிடம் கொடுத்தான்.

கார்டைப் பார்த்துவிட்டு, இப்போது இங்கே ஏன் வந்தாய் என்பது போல அவர் கேள்வியாக நோக்கவும், "சார், நான் இந்த கீழ் வீட்டுக்காரர்களுக்கான உறவினன். எங்களுக்குள் ஒரு பிரச்சினை என்பதால், அங்கே நேரே போக முடியவில்லை..." என்று அவன் சொல்லும்போதே கும்மென்ற சந்தன மணம் வீச, வீட்டின் பின்புறத்திலிருந்து அவள் வந்தாள்.

சென்னை சாலைகளின் தூசும் மாசும் போகக் குளித்திருப்பாள் போல! அன்றலர்ந்த மலர் போல, வெகு அழகாக இருந்தாள்!

இவளைப் பின் தொடர்வதைக் காட்டிலும் வேறு வேலை இல்லையா என்று எண்ணினானே! வேலையை விட்டுவிட்டு கூட, தனியாக இவளுக்காகவே வந்து நிற்கலாம்!

ரசனையோடு பார்க்கும்போதே அவளது முகம் கடுக்கவும், "ப்ளீஸ். ப்ளீஸ்! கொஞ்சம் பொறுமையாக இருங்கள். நீங்கள் என்னை இதற்கு முன் இரண்டு தடவை பார்த்திருக்கிறீர்கள். இரண்டு முறையும் அனிதாவின் பள்ளியின் முன்புதான். அனிதாவின் பள்ளிக்கு நான் வர ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது. என் பேச்சை நம்பாவிட்டாலும், போலீசைக் கூப்பிடுமுன், இவைகளைக் கொஞ்சம் நன்றாகப் பார்க்க வேண்டும்" என்று அவசரமாக அவனது லாப்டாப்பை எடுத்து, எதிரில் இருந்த டீபாய் மேல் கடை

பரப்பினான்.

அனிதாவின் பள்ளி என்றதும், மகளின் கண்களில் மிகச் சிறு மாற்றம்... கூர்மை கூடியது போலத் தோன்றவும், வாய்ப்பை விடாமல், அவசரமாக லாப்டாப்பை இயக்கி ஃபோட்டோக்களைக் கொணர்ந்தான்.

அவன் வைத்திருந்த வரிசையில், முதலில் இருந்தவை அனிதாவின் புகைப்படங்கள், ஐந்தாறு வயதில் இருந்து அந்தப் பள்ளியின் சீருடையில் பள்ளி பின்னணியில் அவள் அறியாமல் எடுத்தவை என்பது புரியும் வகையில் எங்கெங்கோ பார்த்தபடி, ஆனால் வயது வரிசைப்படி இருந்தன.

பேச்சுச் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த வீட்டரசி உட்பட, அங்கிருந்த மற்ற மூவருமே திகைத்துப் போனது நன்றாகவே தெரிந்தது.

"இதெல்லாம் உங்களிடம் எப்படி...?" என்று கேட்டாள் பெண்.

"சொல்லுகிறேன், அதற்காகவேதான் இங்கே வந்தேன், எல்லோரும் உட்கார்ந்தீர்கள் என்றால், இன்னும் சில படங்களைக் காட்டி விடுகிறேன். அப்புறமாகச் சொன்னால், எல்லாமே எளிதாக விளங்கும்" என்று கூறி, அங்கே இருந்தவற்றுள் ஒரு சின்ன மோடாவை இழுத்துப் போட்டு அமர்ந்தபடி, மற்ற மூவரும் சோஃபாவில் உட்கார்ந்து பார்ப்பதற்கு வசதியாக லாப்டாப்பைத் திருப்பி வைத்தான்.

அவள் என்ன நினைத்தாளோ? "ஒரு நிமிஷம்" என்று உள்ளே போய். அவனும் சற்று வசதியாகவே அமரும்படியாக ஒரு நாற்காலியை எடுத்து வந்து கொடுத்தாள்.

"தாங்க்ஸ்" என்று உட்கார்ந்துகொண்டு, ரஞ்சன் சுமாலினி அனுப்பிய மற்ற படங்களைக் காட்டலானான்.

முதலில் அக்காவின் திருமண ஃபோட்டோவைக் காட்டி, "பாருங்கள் சார்,இது என் அக்காவின் திருமணத்தின் போது எடுத்த படம். இதுநான், கொஞ்சமேனும் அடையாளம் தெரிகிறதா? அக்காவுக்கும் எனக்கும் பதினோரு வயது வேறுபாடு. இவர்கள், என் அக்காவும்... அவளுடைய கணவரும்... அக்கா கணவர் உங்களுக்கு நன்றாக தெரியும் என்று நினைக்கிறேன். இது, என் அப்பா மாலை

போட்டு மாலையோடு அவர்கள் வீட்டில் கேட்டார்கள் என்று பத்து பவுன் தங்கச் சங்கிலியும் அணிவித்து அப்பா மணமகனை வரவேற்பது... இத்.. இது..." என்று வரிசைப்படி மடமடவென்று காட்டிவிட்டு, அனிதாவின் காது குத்து விழாப் படத்தில் கொணர்ந்து நிறுத்தினான்.

"உங்களுக்கு அனிதா எத்தனை ஆண்டுப் பழக்கம் என்று எனக்குத் தெரியாது. ஆனால் இது என் அக்காவின் மகள் அனிதாவை என் மடியில் வைத்துக் காது குத்தியபோது எடுத்தது. அ... அப்புறம்.. அப்புறமாக தொதொடர்பே இல்லாமல் போய்விட்டது. படங்கள் எல்லாமே நிஜமானவை. சற்று கவனித்துப் பார்த்தாலே, இவைகளைக் கொண்டு, நான் யாருக்கும் காது குத்த முயற்சிக்கவில்லை என்று புரியும்" என்று கரகரத்த குரலில் கூறியவாறு படங்களைக் காட்டி முடித்தான்.

இரக்கத்துடன் நோக்கி "நீங்கள் அனிதாவுடைய தாய்மாமா!" என்றாள் அவள்.

பேச மாட்டாமல் முதலில் ரஞ்சன் தலையை மட்டும் ஆட்டினான்.

இன்னும் விளக்கம் தேவை என்று உணர்ந்து, தொண்டையைச் செருமி சீர்ப்படுத்திக் கொண்டு, "ஆமாம். ஆனால் எனக்கும் அம்மாவுக்குமே தெரியாமல் இங்கேயும் யார் என்று காட்டிக் கொள்ளாமல், அக்கா தன் மகளுடைய வளர்ச்சியைக் கவனித்துக் கொண்டேதான் இருந்திருக்கிறாள். கல்வியையும். அக்காவைப் பொறுத்த வரையில் மகள் நல்லபடியாக வளர்ந்தால் போதும், தலையிட்டு மகள் மனதைக் கன்னப்படுத்த கூடாது என்று எண்ணினாளாம்.

"ஆனால், இப்போது மகள் பற்றி, அவளுக்கு ஒரு சஞ்சலம். அது பற்றி, என்னை வந்து விசாரிக்கச் சொன்னாள். வந்து... இது உங்களுக்குத் தெரியுமோ இல்லையோ. இந்த ஆண்டுத் தொடக்கத்தில் இருந்தே, பள்ளித் தேர்வுகளில் அனிதாவின் மதிப்பெண்கள் மிகவும் குறைந்திருக்கின்றன..." என்று அவன் கூறியபோது மாடி வீட்டுப் பெண் ஒப்புதலாகத் தலையாட்டினாள்.

அவர்கள் ஏற்கும் விதமாகத்தான், அவனது பேச்சு இருந்திருக்கிறது என்று உள்ளூர நிம்மதி அடைந்தபடி, ரஞ்சன் தொடர்ந்தான்.

"பணம் வரும், போகும். ஆனால் கல்விச் செல்வம் பெரிய துணையாக எந்நாளும் கூட இருப்பது, இருக்க வேண்டியதும் கூட, அதில் மகள் இறங்கிப் போவதை அக்காவால் தாங்க முடியவில்லை. அந்தத் தவிப்பில்தான், மகள் பற்றிய விவரத்தை அக்கா என்னிடம் சொன்னதே. இவ்வளவு காலம் நன்றாகப் படித்த பெண் இப்போது படிப்பில் மோசமாவதன் காரணத்தை அறிந்து, பிரச்சினையைச் சீர்ப்படுத்த வேண்டும் என்றாள்! அதற்காகவே என்னை இங்கே அனுப்பினாள். அதனாலேயே, இரண்டு நாட்களாக அனிதாவின் பின்னே அலைகிறேன்" என்று முடித்தான்.

சற்று நேரம் யாரும் பேசவில்லை. பிறகு முகத்தில் லேசான கன்றல் சிவப்புடன் முதல் முறையாக அந்த மாடி வீட்டுப் பெண் பேசினாள்.

"இதெல்லாம் தெரியாமல்... சாரி!" என்று முணுமுணுத்துவிட்டு, அவளே பேச்சைத் தொடர்ந்தாள்.

"ஆனால், அனியின் படிப்பு பற்றி, எனக்கும் கவலைதான், சார். நாளுக்கு நாள் மதிப்பெண் குறைந்து கொண்டே போகிறது..."

"அறுபது சதத்துக்கு இறங்கிவிட்டதாக அக்கா வருத்தப்பட்டாள்" என்றான் ரஞ்சன்.

"ரொம்பவும் கரெக்ட்! ப்த்தாம் வகுப்புத் தேர்வில் தொண்ணூற்றெட்டு சதவீதம் எடுத்தவள். முன்பெல்லாம் என்னிடம் சந்தேகம் கேட்க வருவாள் பாட விஷயத்தில் அவளுக்கு நன்றாகப் புரியும்வரை விடாமல் துளைத்து எடுப்பாள். ஆனால், இப்போது படிப்பு பற்றி நானாகக் கேட்டால் கூடச் சரியாக பதில் சொல்வது இல்லை. காரணம் கேட்டால், படிப்பு போரடிக்கிறது என்கிறாள்!

"புதிதாக ஏதேனும் மோசமான பழக்கம் ஏற்பட்டிருக்கிறதோ என்று, எங்களுக்குச் சந்தேகம். 'கோ எட்' வேறு, அதற்காகத்தான் பள்ளி வரை அவளைப் பின்தொடர்ந்து போகிறேன். ஆனால் சந்தேகப்படும்படி எதுவும் இல்லை. நேரே பள்ளிக்குத்தான் போகிறாள். பள்ளியிலும் நேரே வகுப்புதான். அங்கேயும் வழக்கம்

போலவே, யாரையும் நிமிர்ந்து கூடப் பார்ப்பதில்லை" என்றாள்.

மாலையில் நடப்பதைச் சொல்லலாமா கூடாதா என்று ரஞ்சன் யோசிக்கும்போதே, அந்தப் பெண் தொடர்ந்தாள். "சாதாரணமாக அனிதா நல்ல இனிமையான பெண்தான். ஆனால் மற்றவர்களோடு லேசில் பேசிப் பழக மாட்டாள். பள்ளியில் அவள் பற்றி ஆசிரியைகளின் குறையே, அவள் யாரோடும் கலந்து பேசுவதில்லை என்பதுதான். ரொம்பவும் தாழ்வுணர்ச்சி அதிகம். தாழ்வுணர்ச்சி... அம்மா சரியில்ல... மோசம் என்று... சாரி... அஅப்படி... அப்படிச் சொல்லித்தான் கேள்வி!" என்று அவனது முக மாறுதலைக் கவனித்துவிட்டு மன்னிப்புக் கேட்டாள் அவள்.

"வேறென்ன சொல்வார்கள்?" என்றான் அவன் சீறலாக, "அவர்கள் கேட்டதெல்லாம் எப்படியாவது செய்தபோதும், அவர்கள் எதிர்பார்த்த பணம் எங்களிடம் இல்லை என்பது குறையாகவே நின்று விட்டது. அத்தானுக்கும் ஏற்கனவே வேறு நாட்டம். எனவே முறையாக வந்த மருமகளைக் கழித்துக் கட்டிவிட்டு, பணக்காரப் பெண்ணை மறுதாரம் கட்டி வைத்தோம் என்று உண்மையைச் சொல்ல, அந்தம்மாவுக்கு வாய் வருமா?" என்றான் ஆத்திரத்துடன் அவன்.

நியாயமான கோபம் என்பதால், சமாதானமாகக் கூட, யாரும் பேசவில்லை.

சிறு மௌனத்தின் பின், அவளுடைய தாயார் பேசினாள் "பத்து ஆண்டுகளுக்கு முன்பாக நாங்கள் இங்கே குடி வந்தபோது, அந்த அம்மாள் பெரிதும் அப்படித்தான் பேசினார்கள். ஆனால் இப்போதெல்லாம் கொஞ்சம் வேறு மாதிரிப் பேசுகிறார்கள். நல்லபடியாக அன்போடு நடந்த பெண்ணைப் பிடிக்காமல் விரட்டினேன், பையன் ஆசைப்பட்டானே என்று கொண்டு வந்தவள், எங்கள் பிள்ளையையே எங்களிடம் இருந்து பிரித்துக் கொண்டு போய்விட்டாள். தாயை விட்டு மகளைப் பிரித்துத் தூக்கி வந்தோம். ஓட்டின தூசியாய் எங்களைத் தூக்கி எறிந்துவிட்டுத் தாய் தகப்பன் மகள் என்கிற பாசத்தையும் வழித்து துடைத்துப் போட்டுவிட்டு,

எங்கள் மகனை, எங்களை விட்டுப் பிரித்துக் கொண்டு போய்விட்டாள் அடுத்து வந்தவள் என்று, அனிதாவுடைய பாட்டி என்னிடம் இரண்டு தரம் புலம்பி இருக்கிறார்கள்" என்று அப்போதைய நடப்பைத் தெரிவித்தாள்.

"பின்னே? தினையோ வினையோ, விதைத்ததை அறுத்துதானே ஆக வேண்டும்" என்றான் ரஞ்சன் வெறுத்த குரலில்.

"அந்தப் பாட்டியை விடுங்கள். உங்கள் அக்கா பெண்ணை ஒரு தரம் பக்கத்தில் பார்க்க வேண்டுமா?" என்று அவனை நோக்கிக் கேட்டாள் பெண்.

உதட்டைக் கடித்துக்கொண்டு ரஞ்சன் பேசாதிருக்கவும் "அம்மா. இன்று என்ன டிஃபன்?" என்று தாயிடம் கேட்டாள்.

புரிந்து கொண்டு "யாரோ சினேகிதிக்கு கொடுக்கக் கேட்டாயே மஞ்சு. அதற்காக முந்திரிக் கொத்து செய்தேன். நானே அனியைக் கூப்பிட்டுக் கொடுக்க நினைத்திருந்தேன். இப்போது கூப்பிடேன்" என்றாள் அன்னை புன்னகையோடு.

'மஞ்சு'வா? எதன் சுருக்கமாக இருக்கக்கூடும்?

"அனீ!" என்று குரல் கொடுத்தாள் அந்த மஞ்சு.

கீழ்வீட்டின் உள்ளிருந்து ஒரு குரல் தெளிவற்று ஒலிக்க, "கொஞ்சம் வந்துவிட்டுப் போகிறாயா, அனிம்மா? உனக்குப் பிடித்தமான ஒன்று அம்மா செய்து வைத்திருக்கிறார்கள். வழியிலேயே நான் ஒன்றை வாயில் போட்டுக் கொண்டால் என்ன செய்வது? உன் கையில்தான் தர வேண்டுமாம். கொஞ்சம் வருகிறாயா, செல்லம்?" என்று அழைத்தாள்.

"அதெல்லாம் வாயிலே போட மாட்டீர்கள், எனக்குத் தெரியும்" என்று சிறுநகை கலந்த குரலில் சலுகையோடு கூறியவாறே படியேறி வந்த சின்னவள், ஹாலுக்குள் அறியாத மனிதனைக் காணவும், தயங்கி நின்றாள்.

"உள்ளே வாம்மா" என்று வீட்டுத் தலைவர் அழைக்க, அவருடைய மனைவியும் முன்னே வந்து "முந்திரிக் கொத்து செய்தேன், அனிம்மா. உனக்குப் பிடிக்குமே என்று கொஞ்சம் எடுத்து வைத்தேன். அதைத்

தரத்தான் கூப்பிட்டோம் வா, உள்ளே வா. சும்மா உள்ளே வாம்மா யாரோ என்று தயங்காதே. இவர் எங்களுக்கு ரொம்பத் தெரிந்தவர். வீட்டில் எல்லோருக்குமே ரொம்பவும் வேண்டியவர். பாருங்கள் ர... தம்பி இவள் இந்த வீட்டு சொந்தக்காரருடைய பேத்தி, பெயர் அனிதா" என்று இருவருக்கும் அறிமுகம் செய்து வைத்தாள்.

வெட்கப் புன்னகையோடு அவள் வணக்கம் சொல்ல, இயல்பாக அவன் அதை ஏற்றுப் பதில் வணக்கம் கூறுமுன், ரஞ்சன் பெரும்பாடு பட்டுப் போனான்.

அந்த வீட்டினரோடு அனிதா இயல்பாக பேசினாள் "அங்கிள் இன்று பத்திரிகையில் வந்த சொடோக்குப் போட்டு விட்டீர்களா? ஐந்து ஸ்டார் என்றாலும், இன்றைக்கு ரொம்ப இலகுவாக இருந்தது. நான் டியூஷனில் இருந்து வந்த பிறகு எடுத்து, இப்போதுதான் போட்டு முடித்தேன்" என்றாள் வீட்டுத் தலைவரிடம்.

"நீ கெட்டிக்காரி என்பதால் சீக்கிரம் போட்டுவிட்டாய்! எனக்கு கொஞ்சம் நேரம் இழுத்தது. அலுவலகம் செல்லுமுன் முடிக்க முடியாமல், திரும்பி வந்தபிறகும் அரைமணி நேரம் பிடித்துவிட்டது"

பழகியவர்களிடம் இயல்பாக பேசுவாள் போல!

அவர்களது உரையாடலில் கலந்துகொள்ள வாய் திறந்துவிட்டு, தொண்டை ஒத்துழைக்காது என்று புரிந்து, ரஞ்சன் வாயை மூடிக் கொண்டான்.

"பாடம் ஏதாவது சந்தேகம் இருக்கிறதா, அனி?" என்று அந்த மஞ்சு கேட்டதும், அனிதாவின் முகம் லேசாக மாறியது.

மறுப்பாகத் தலையசைத்து, "அதுதான் சித்தி என்னை டியூஷன் வகுப்பில் சேர்த்திருக்கிறார்களே. அங்கே ஒருதரம் படிப்பதே போதும், அக்கா. நான் போகட்டுமா, ஆன்ட்டி? பாட்டிக்கு கால் வலி என்றார்கள். பாவம், அவர்களுக்குத் தைலம் தேய்த்து விடலாம் என்று நினைத்தேன்" என்று அனிதா எழுந்தாள்.

மூடிய பாத்திரத்தைப் பெரியவள் கொண்டு வந்து கொடுக்க, எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு அனிதா கிளம்பினாள்.

கிளம்பும்போது அவன் புறம் லேசாகத் திரும்பி, சிறு தயக்கப்

புன்னகையுடன் தலையசைத்து "வருகிறேன்" என்று சின்னக் குரலில் கூறிவிட்டு போனாள்!

தட்டி விழிக்கக் கூட மனமற்ற ஏக்கப் பார்வையும், விழிகளில் நீர்த்திரையுடன் கூடிய தவிப்பும் அந்த குடும்பத்தினர் யார் கண்ணையும் தப்பவில்லை.

தரையைப் பார்த்தபடி ரஞ்சன் பேசாமல் அமர்ந்திருக்க, வீட்டினர் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

மூவருக்குமே அவனிடம் இப்போது முழு நம்பிக்கை ஏற்பட்டது.

"கவலைப்படாதீர்கள். அடிப்படையில் அனிதா நல்லவளே. அதனால் சீக்கிரமாகத் திருத்தி விடலாம்" என்றாள் அந்த மஞ்சு.

ஒருவாறு சமாளித்துக்கொண்டு "மகளைப் பார்க்க வரும்போதெல்லாம் அக்கா என்ன பாடு பட்டிருப்பாள் என்று இப்போது புரிகிறது. உங்கள் எல்லோருக்கும் ரொம்ப நன்றி. அக்கா மகளை அருகில் பார்க்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தீர்கள். பேசவும்! இந்தச் சில நிமிஷங்களை, நான் ஒருபோதும் மறக்க மாட்டேன் சார்" என்றான் ரஞ்சன் உணர்ச்சி வசப்பட்ட குரலில்.

"ரொம்ப சாரி. ரஞ்சன் சார். இந்த உண்மை தெரியாமல் மடத்தனமாக ஏதேதோ பண்ணிவிட்டேன்" என்று மஞ்சரி மன்னிப்புக் கேட்டாள். "என்னைத் தப்பாக எண்ணியிருப்பீர்கள்..." என்று இழுத்தாள்.

"ஏய். என்னடீ செய்து வைத்தாய்?" என்று மஞ்சுவுடைய தாயார் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, வில்லிலிருந்து விடப்பட்ட அம்பு போல ஒரு வேகத்துடன் ரஞ்சன் இருக்கையிலிருந்து துள்ளி எழுந்து, அருகிருந்த ஜன்னல் புறமாக எட்டிப் பார்த்தான்.

கொடிக்கு காய் பாரமாகுமா? 6

அதே வேகத்துடன் உள்ளே திரும்பி மஞ்சுவுடைய தந்தையைப் பார்த்து, "சார் சீக்கிரமாக உங்கள் பெயரைச் சொல்லுங்கள். இல்லை, வேண்டாம்.. வெளியே பெயர் போர்டு பார்த்தேனே... ம.. மகாதேவன்தானே? சார், நான் உங்கள் நண்பருடைய பையன். அப்பா உங்களை தேவா என்று கூப்பிடுவார். ப்ளீஸ் சார், எனக்குப் பைத்தியமோ என்று பாராதீர்கள். என் பேச்சுக்குக் காரணம் இருக்கிறது. அம்மா, உங்கள் பெண்ணிடம் ஒரு கேள்வி கேட்டீர்ளே, அதன் பதில் வந்து கொண்டு இருக்கிறது. அதைச் சமாளிக்கத்தான் இந்தக் கோரிக்கை" என்று வெகு வேகமாகப் பேசியவன், அதன்பின் இயல்பான குரலில், "அப்பாவுக்கு பிறகு கோவை அதன் சுற்று வட்டாரத்திலேயேதான். தேவா சார்... சென்னை என்றதும், உங்கள் நினைவு வந்ததா..." என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, வாயிற்புறம் அரவம் கேட்டது.

கதவை ஒற்றை விரலால் லேசாகத் தட்டிவிட்டு, "உள்ளே வரலாமா?" என்று கேட்டபடியே, வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தார், அந்தப் பகுதி காவல் அதிகாரி!

அந்த வீட்டுக்கு முழுக்க புதியவர் அல்ல என்பது தெரிந்தது.

"வாருங்கள்.." என்று மஞ்சுவுடைய தந்தை மகாதேவன் வரவேற்பாகச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அதிகாரி கூரிய விழிகளை ஒரு தரம் சுழற்றிவிட்டு, ரஞ்சனிடம் பார்வையை நிறுத்தினார்.

"என்ன மிஸ்டர் ரஞ்சன். கடைசியாகத் தேடிய ஆளைக் கண்டு பிடித்து விட்டீர்கள் போல? எதிரேயே நண்பரை வைத்துக் கொண்டா, ஊரெல்லாம் தேடினீர்கள்?" என்று வினவினார்.

மகாதேவனுக்கும் மந்த புத்தி கிடையாது "ஆமாம் இன்ஸ்பெக்டர். பாலிய சினேகிதன் பிள்ளை! மற்றவர்கள் எல்லோருமே, மகா, மகி என்றாலும், இவன் அப்பா மட்டும் என்னை தேவா என்றுதான் கூப்பிடுவான். இவனும் அதே நினைவில் தேவன், தேவராஜ் இப்படிப் பெயர்களைத் தேடினானாம்! இன்றைக்குத்தான் அந்தத் 'தேவா'

பின்பகுதியாக இருக்குமோ என்று சரியாக யோசித்து வீட்டுக்கே வந்து சேர்ந்திருக்கிறான்" என்று கடகடவென்று ஒரு வேடிக்கை போலக் குரலில் நகையுடன் கூற, காவல் அதிகாரியின் கண்களில் இருந்த சந்தேகம் மறைந்தது.

"காரைத் தைரியமாக இங்கேயே நிறுத்தியிருந்ததிலேயே, இவர் தேடிய ஆள் நீங்கள்தான் என்று புரிந்து கொண்டேன். எதற்கும் ஒரு தரம் சரி பார்த்துவிடுவது நல்லது என்றுதான் உள்ளே வந்தேன். கீழ் வீட்டில் பெரியவர்கள், பாப்பா எல்லோரும் சுகம்தானே? ஓக்கே... வருகிறேன்" என்று மஞ்சுவை ஒருதரம் பார்த்துவிட்டுக் கிளம்பினார்.

அவர் சென்றதும், பெரியவர்கள் அழுத்திக் கேட்டதும், தான் புகார் கொடுத்தது பற்றி, மஞ்சு ஒத்துக் கொண்டாள்.

"பின்னே என்னப்பா? இவரைப் பற்றி நமக்கு என்ன தெரியும்? அனி பள்ளியில் இவர் தட்டிவிட்டு என் சிற்றுண்டி, பாத்திரத்தோடு போயிற்று. அங்கிருந்து வந்தால், வீட்டை வெறித்தபடி நிற்கிறார். அதுதான் எச்சரித்து அனுப்புமாறு, இன்ஸ்பெக்டரிடம் சொன்னேன்" என்று தந்தையிடம் சமாதானம் சொன்னவள், ரஞ்சனிடம் திரும்பி, "ரொம்ப சாரி. உங்கள் பிரச்சினை இவ்வளவு பெரிதென்று தெரியாது, திடுமென போலீஸ் அதிகாரி வந்து எச்சரிக்கவும்... என்னைத் தப்பாக நினைத்திருப்பீர்கள்..." என்று தன் சஞ்சலத்தை முழுதாய் வெளிக்காட்டிச் சொன்னாள் அவள்.

ரஞ்சனின் கண்கள் சிரித்தன "உண்மையைச் சொல்வதானால், ஒரு கணம் என் மேலா புகார் என்று ஆத்திரம் வரத்தான் செய்தது. ஆனால், உடனேயே, இதுபோல சமூக அக்கறை உள்ள பெண்கள் அங்கங்கே இருந்தாலே நாட்டில் குற்றங்கள் குறைந்து போகுமே என்று நல்ல விதமாகவே எண்ணம் ஓடிற்று" என்றான்.

"ரொம்ப நன்றி, ரஞ்சன். என்னையா போட்டுக் கொடுத்தாய், உன்னை என்ன செய்கிறேன் பார் என்று கத்தியைத் தூக்குகிற கலாச்சாரம் பெருகுகிற இந்த நாளில், நீங்கள் இந்த மாதிரி நினைத்ததே பெரிய விஷயம். உங்கள் பெற்றோர் உங்களை நல்ல விதமாக வளர்த்திருக்கிறார்கள்" என்றார் மகாதேவன்.

"நான் வளர்ந்தது, பெரும்பாலும் என் அக்காவின் வழி

காட்டுதலில். அப்பாவுக்குத் தொழிலைக் காத்து வளர்ப்பதற்கே நேரம் சரியாகிவிடும். அதிலும், அக்காவின் திருமணத் தோல்விக்குப் பின், அவளுக்கும் தன்னிறைவாக வாழும் அளவுக்குச் சம பங்கு கொடுக்க வேண்டும் என்று பயங்கரமாக உழைத்தார்!" என்றான்.

சொல்லும்போதே, அக்காவுக்காக ரொம்ப அதிகப்படியாக வக்காலத்து வாங்குவதாகத் தோன்றுகிறதோ என்ற சந்தேகம் வந்தது.

இத்தனை காலமாக... ஆண்டுக் கணக்கில் இவர்கள் மனதில் பதிந்திருந்த உருவகத்தை, அவ்வளவு சீக்கிரமாக மாற்றிவிட முடியாது. எனவே அதையே பேசுகிறானே என்று எரிச்சல் கூடத் தோன்றலாம்.

அத்தோடு, அந்தப் பெண் குளித்துவிட்டு வந்தாள், மாலைச் சிற்றுண்டி பற்றிக்கூட, அவன் முன்னிலையில் கேட்டுத்தான் தெரிந்து கொண்டாள். பசியிருக்கும். சேர்ந்து உண்ண மற்றவர்களும் காத்திருக்கலாம். அவர்களது வீட்டு வழக்கத்தை கெடுத்துக்கொண்டு, அவன் இங்கே உட்கார்ந்திருப்பது சரியல்ல.

இப்படியெல்லாம் தோன்றவும், ரஞ்சன் எழுந்தான் "நானும் கிளம்புகிறேன் சார். கேட்கத் தேவையில்லை போலத் தோன்றினாலும், என் திருப்திக்குக் கேட்டுக் கொள்ளுகிறேன். அனிதா மீது ஒரு கண்ணை வைத்துக் கொள்ளுங்கள். ஏதேனும்... ஏதேனும் பிரச்சினை என்றால் எனக்கு தெரிவியுங்கள். எனக்கும் அவள், பற்றி உதவி தேவைப்பட்டால், மீண்டும் இங்கே வர அனுமதி தர வேண்டும். வருகிறேன் சார். வருகிறேன்..." என்று திரும்பினால், மஞ்சுவுடைய தாயாரைக் காணோம்.

எங்கே என்று பார்க்கும்போதே, ்கையில் ஒரு ட்ரேயுடன் உள்ளே வந்தாள் அந்தப் பெண்மணி. ட்ரேயில் நாலு சிற்றுண்டித் தட்டுக்கள்.

"நன்றாக இருக்கிறது. அனியுடைய தாய்மாமாவாக இருந்து கொண்டு, யாரோ போல இங்கே ஒன்றும் சாப்பிடாமல் போவீர்களா? இன்னும் கொஞ்சம் பழகியபிறகு, அனியே உங்களோடு சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடுவாள், பாருங்கள். எடுத்துக் கொள்ளுங்கள். இங்கே எல்லோரும் சேர்ந்துதான் உண்பது. காம்பி மேக்கரில், அதுவும் சீக்கிரமே தயாராகிவிடும். நீங்கள் கை கழுவ வேண்டுமா, தம்பி. மஞ்சு, வாஷ் பேசின் காட்டும்மா" என்று பிரியமாகப் பேசவும், ரஞ்சனுக்கு

ஆறுதலாக இருந்தது.

அவன் அஞ்சியது போல,இவன் எப்போது போவான் என்று அவர்கள் காத்திருக்கவில்லை!

நாலு பேருமாகச் சிரித்துப் பேசியவாறே உண்டார்கள்.

அவனது தாகம் உணர்ந்து, அனிதாவைப் பற்றி அதிகம் பேசினார்கள்.

"இங்கே குடி வந்து பத்து ஆண்டுகள் ஆயின. மகன் குடும்பம் பிரிந்து வேறு வீட்டுக்குச் செல்லவும், பேத்தியோடு இந்தப் பெரிய வீட்டில் தனியே இருக்கக்கூடாது என்று பெரியவர்கள் மாடியை எங்களுக்கு வாடகைக்கு விட்டார்கள். அப்போதிருந்து அனியோடு பழக்கம். தனிமைத் தாக்கமோ என்னவோ, அனி எங்களோடு ஒட்டிக் கொண்டாள். அதுவும் இவளிடம் 'அக்கா அக்கா' என்று சுற்றி வருவாள். எத்தனைடீ? உனக்கும் அவளுக்கும் ஏழு வயது... ஏழா, எட்டா?" என்று கேட்டாள் அன்னை,.

"ஏழரை!" என்ற மஞ்சு, சன்னச் சிரிப்புடன் முகத்தை சுளித்து, "ஐயோ, கேட்க நன்றாக இல்லையே! ஏழு ஆண்டுகள் ஐந்து மாதங்கள் என்று விளக்கமாகவே சொல்லிக் கொள்ளலாம்! என்னைப் போல அவளும் பழக ஆள் இல்லாமல் இருந்தோமா, பிடித்துப் போயிற்று. என்னைப் போல நல்ல மதிப்பெண் வாங்க வேண்டும் என்றே கஷ்டப்பட்டுப் படிப்பாள்..." என்று சொல்லி வந்தவள், ரஞ்சனின் கண்ணோரம் சுருங்குவதைக் கவனித்து "என்ன?" என்று கேட்டாள்.

புன்னகையுடனேயே அவன் தலையசைக்கவும் சற்று யோசித்தவளின் கண்கள் அகன்றன "சந்தடி சாக்கில் 'செல்ஃப் டப்பா' அடித்ததாக நினைத்தீர்களா? அதெல்லாம் கிடை..." என்று ரோஷமாகத் தொடங்கியவளுக்கும் குபுக்கெனச் சிரிப்பு வந்தது.

சிரித்துவிட்டு, "சே, மெய்யாகவே நான் நன்றாகத்தான் படிப்பேனாக்கும். வேண்டுமானால், அம்மா அப்பாவைக் கேட்டுப் பாருங்களேன்" என்றாள் மஞ்சு.

ஆனால், முறுவல் விரிவடைந்ததே தவிர, அவன் எதுவும் பேசவில்லை.

மகள் யோசிக்கவும்,. "வேலிக்கு ஓணான் சாட்சி என்கிற மாதிரி

எங்களிடமாடிக் கேட்கச் சொல்லுவாய்? அதுதான் தம்பி சிரிக்கிறார்" என்றாள் மஞ்சுவுடைய தாயார்.

மஞ்சுவைக் கிண்டலடித்ததுபோதும் என்று எண்ணியவனாய், "நீங்கள் தம்பி தம்பி எனும்போது, என் அக்கா சுமாலினி பேசுவது போலவே இருக்கிறது" என்று பேச்சை மாற்றினான்.

ஆனால் "போச்சுடா!" என்று மகாதேவன் கவலைப்பட்டார். "சும்மாவே இவளுக்குத் தான் ரொம்ப இளமையாக இருப்பதாக எண்ணம்! உங்கள் அக்கா என்றால்,பின் இருபதுகளில் அல்லவா இருப்பார்கள்?" என்றார் அவர் வருத்தம் போலக் காட்டி.

"இல்லை சார். அக்காவுக்கும் எனக்கும் பதினோரு வயது வேறுபாடு என்றேனே. சார்!" என்று குறுநகையோடு ரஞ்சன் நினைவூட்டினான்.

"அப்போதும் அதிகப்படி இளமைதானே? இவளுக்கு நாற்பது தாண்டிவிட்டதே!"

"அதைச் சொல்லாமல் தீராதே!" என்றாள் மனைவி பதிலுக்கு, "இவருக்குத் தன்னை, இரண்டு பெண்களுக்கு அப்பாவா? என்று யாரேனும் கேட்டு மானத்தை வாங்கி விடுவார்களோ என்ற பயம்!"

"ஹே, எனக்கும் அந்தப்பயம் உண்டுதான். யாராவது அக்காவா என்றுவிட்டால், எனக்கல்லவா வயது அதிகமோ என்றாகிவிடும்! அதனால் யார் வந்தாலும் போனாலும், பேசும்போது வாக்கியத்துக்கு ஓர் அம்மாவாவது கட்டாயம் போட்டுவிடுவேன்! ரொம்பவும் அன்பு மாதிரி.." என்றாள் மகள்.

"அடிப்பாவி! நிஜமாகவே அன்பு என்று நம்பினேனே! இப்படியா கல்லைத் தூக்கிப் போடுவாய்?"

புன்னகையும் கேலியுமாக மூவரும் உரையாடுவதைப் பார்க்கவே ரஞ்சனுக்கு சுகமாக இருந்தது. அனிதாவை இந்த வீட்டுக்கு ஈர்ப்பதும், இதுவாகத்தான் இருக்க வேண்டும். எப்படி சலுகையாகப் பேசியபடி வந்தாள்!

அக்காவிடம் இதுபற்றிச் சொல்ல வேண்டும். முக்கியமாக இந்தக் குடும்பத்தின் துணை இருப்பதால், அனிதா பற்றி ரொம்பக் கவலைப்பட வேண்டாம் என்று சொல்ல வேண்டும்...

சுமாலினியின் நினைவு, இந்தக் குடும்பத்திடம் தெரிவியாத

விஷயங்களைப் பற்றி, அவனை யோசிக்க வைத்தது.

சுப்ரியா பற்றிச் சொல்லவில்லை. அனிதா சந்திக்கும் அந்த வில்லனைப் பற்றிச் சொல்லவில்லை.

முன்னது பிரச்சினை ஆகாது... ஆனால் பின்னதை வெளியிட்டு, அனிதாவைத் தப்பாக நினைத்து ஒதுக்கும்படி விட்டுவிடக் கூடாது.

பத்து ஆண்டுகளுக்கு முன் இங்கே வந்தார்கள் என்றால், இப்போது வேலைக்குச் செல்லும் மஞ்சுவுக்கும் அனிதாவுக்கும் ஆறேழு வயதேனும் வேறுபாடு இருக்கும், இப்போதே என்ன... என்று தோன்றக் கூடும். எனவே, அதுபற்றி இன்னும் விவரம் தெரிந்து கொண்டு, அப்புறமாகப் பார்க்கலாம்.

ஆனால், சுப்ரியா விஷயம் அப்படியல்ல. இவர்கள் இவ்வளவு வெளிப்படையாகப் பேசும்போது, அவனும் சற்று இலகுவாகத்தான் இருக்க வேண்டும்.

தோற்றம் பற்றிய பேச்சிலேயே தொடங்க எண்ணி, "எங்கள் அம்மாவைப் பார்த்தால், பத்து வயது கூடுதலாக, பின் அறுபதுகளின் தொடக்கம் போலத் தெரியும். அக்காவின் பிரச்சினையில் மனதையும் உடம்பையும் முதலில் ரொம்பவே விட்டு விட்டார்கள். ஆனால் என் பெற்றோர் ஒரேயடியாக உடைந்து போகாமல் காப்பாற்றுவதற்காகவே, நல்லவேளையாக கடவுள் ஒரு தேவதையை எங்கள் வீட்டுக்கு அனுப்பி வைத்தார்..." என்றவன், தன் மொபைலை எடுத்து சுப்ரியாவின் ஃபோட்டோவைக் காட்டினான்.

அவன் எதிர்பார்த்தபடியே, மற்ற மூவரும் பிரமித்துப் போனார்கள்!

"இது... இவள்..." என்று தடுமாறியபடி, அவனை ஆச்சரியமாக நோக்கவும், அவனும் விருப்பமாகவே விவரம் தெரிவித்தான்.

"அன்றைக்கு அனிதாவைப் பிடுங்கிக் கொண்டு அத்தான், அவர் அம்மா, அப்பா மூவரும் போகவும் 'ஐயோ என் குழந்தை' என்று அவர்கள் பின்னே ஓட ஓர் எட்டு எடுத்து வைத்த அக்கா அப்படியே மயக்கம் போட்டு விழுந்தாள். நாங்களும் அவளைப் பார்ப்பதற்காக நின்றுவிட்டோம். பார்த்தால் கருவுற்றிருந்தாள். ஆனால், இங்கே தெரிவிக்கவே கூடாது என்றுவிட்டாள். அனி மாதிரி, இந்தக் குழந்தையையும் பிடுங்கிக் கொண்டு போய்விடுவார்களோ என்ற

அச்சம்! கூட இருந்தபோதே, பெற்ற குழந்தையை தொட விட மாட்டார்களாம்.

"இதுவேனும் தனக்கே என்று இருக்கட்டும் என்றாள். அப்பாவுக்கும் அதே எண்ணமே. வேறு வாழ்க்கை அமைக்கும் விருப்பம் பொதுவாக யாருக்கும், முக்கியமாக அவளுக்குக் கொஞ்சமும் இல்லை. எனவே, அக்காவின் விருப்பம்போல அப்பா, அம்மா விட்டுவிட்டார்கள். இதோ, இந்தக் குழந்தைதான் அவளது வாழ்வின் ஆதாரம்,அவள் மட்டும்தான் என்று நாங்கள் எல்லோருமே, இதுவரை நினைந்திருந்தோம். ஆனால் பெற்ற மனம் வேறு நினைத்து, பெரியவளையும் வந்து பார்த்திருக்கிறது."

குறுக்கிடாமல் எல்லோரும் அவனையே பார்த்திருக்க, ஒரு பெருமூச்சின் பின் அவனே தொடரந்தான் "அப்போது நான் பள்ளிப் படிப்பில் இருந்தேன். எட்டாம் வகுப்பு, அப்பா செய்த முக்கியமான வேலை, அக்காவின் உடல் தேறியதும், அவளைத் தொழிலில் புகுத்தியது.

"அப்பாவின் உடல் நலிந்தபோது அக்கா பெரும் பொறுப்பேற்று நடத்தினாள். படித்து முடித்துவிட்டு, நான் உள்ளே வந்தபோது, அப்பா ரொம்பத் தயங்கிப் போனார்... அவருக்கு அப்புறம் நானும் அக்காவுமாக நடத்தினோம்... நடத்துகிறோம்...

"அம்மாவுக்கு... ஏன், எங்கள் வீட்டுக்கே சின்னவள்தான் ஜீவநாடி. பெயர் கூடப் பொருத்தமாக ஜீவஜோதிஎன்று வைக்கலாம் என்று அம்மா சொன்னார்கள். ஆனால் அக்காதான் வேண்டாம் என்று விட்டாள். மகளைக் கூப்பிடும்போதெல்லாம், என்ன காரணத்துக்காக இந்தப் பெயர் வைத்தோம் என்று அந்தத் துன்பங்களை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும். எதற்கு வீணாக என்றுவிட்டாள்..."

"உங்கள் அக்கா பெரிய அறிவாளியாகத் தோன்றுகிறது" என்றாள் மஞ்சு.

"அறிவாளியேதான். ஆனால், அதிருஷ்டத்தை அதிருஷ்டம் என்று அறிந்து கொள்ளத் தெரிந்தவன்தான் அதிருஷ்டசாலி என்று பாண்டிச்சேரி அன்னை சொன்னது போல, அவளது அருமைகளை

அறிந்து போற்றத் தெரியாத துரதிருஷ்டசாலிகள், அவளுடைய புகுந்த வீட்டார். எப்படியோ, அவளுக்கே என்று ஒரு செல்வம் கிடைத்தது: பெயர் சுப்ரியா. இந்தத் தகப்பன் குடும்பத்தின் வாடையே இல்லாமல் அவள் துறுதுறுவென்று வளர்கிறாள். எப்போதும் ஏதாவது குறும்பு பண்ணிச் சிரிக்க வைத்துக் கொண்டே இருப்பாள். ஆனால் இவள்? அனிதா முகத்தில் சந்தோஷத்தையே காணோமே..." என்றவன், தொடர்ந்து "சாரி, எப்போதும் அவர்களைக் குறை சொல்லுகிற மாதிரியே, என் பேச்சு முடிகிறது. ஆனால் பாராங்கல் மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு அனி பள்ளிக்குள் போவதைப் பார்த்ததில் இருந்து மனம் கொதிக்கிறது" என்று முடித்தான் ரஞ்சன்.

பெற்றோரை ஒரு தரம் பார்த்துவிட்டு, மஞ்சு சொன்னாள்.

"வேறே அவள் எப்படி இருப்பாள்? அந்த கடுமையான முகபாவம், அவளுக்கு ஒரு முகமூடி. அனி ஒரு மாதிரி ரோஷக்காரி. அம்மா மோசம், வீட்டில் சண்டை போட்டுவிட்டு, மகளை எடுத்துக் கொள்ளாமலே போனதாகச் சொல்லியே வளர்ப்பு! அவளுக்கு எப்படியிருக்கும்? வகுப்பில்யாரும் அம்மா பற்றிக் கேட்டுவிடுவார்களோ என்று ரொம்பக் குன்றலாக இருப்பதாக, அவ்வப்போது சொல்லுவாள். அதனாலேயே யாருடனும் பழகவே மாட்டாள்" என்று மஞ்சு காரணம் சொன்னாள்.

"அடுத்த மனைவிக்கு, மாமியார், மாமனார், இந்தப் பெண் யாரையும் பிடிக்கவில்லை. தொழிற்சாலைக்குப் பக்கத்தில் இருந்தால் நல்லது என்று வேறு வீடு வாங்கிக் கொண்டு போனார்கள். அப்படியே, அழகாக உறவை வெட்டிவிட்டாள். கடமையே உரு என்பது போல, மகளுக்குப் பள்ளி, டியூஷனுக்கு கார் வரும். பெரியவர்கள் கேட்டாலும் அனுப்புவாள். ஆனால், காரை நிறுத்த ஷெட் அங்கே, அவர்கள் வீட்டிலேதான். தான், புரிகிறது இல்லையா? எதற்கானாலும், உரிமை தனக்குத்தான் என்று காட்டுகிறாள்" என்றாள் அவளுடைய தாயார். "இது அனி பாட்டியே சொன்னது"

அடுத்து மகாதேவனும் தான் அறிந்ததைத் தெரிவித்தார் "பண விவகாரம் நாங்கள் கேட்பது இல்லை. அவர்களாகச் சொல்வதுதான். ஆனால், ஒரு தரம், எல்லாம் ஒரு பிள்ளை என்று பையன் பேரிலேயே

வாங்கியதாகப் பெரியவர் சொன்னதுண்டு. தொழிலை நடத்த வசதி என்று அதிகாரத்தை எழுதி வாங்கி விட்டார்களாம். ஆனாலும் பங்குகள் இருப்பதால், பணம் வருகிறதுபோல. ஆனால் நடுவில் கோடு பலமாகப் போட்டுவிட்டார்கள். அடுத்து வந்த அம்மாள். ஆனால், இவர்களும் சும்மா இருக்கவில்லை. அவள் விலக்கி விடுவதை உணர்ந்து கொண்டார்கள். இந்த வீடு பெரியவரே கட்டியது. அதனால் வீட்டை பேத்திக்கு முழுதாக எழுதி விட்டார்களாம், ஏதோ கசமுசா நடந்தது. அப்புறம் அடுத்தவள் இங்கே வரவே இல்லை. வெளிப்பார்வைக்கு ஒரு குறையும் தெரியாது. ஆனால் பேச்சே கிடையாது"

எல்லாமாகச் சேர்ந்து ஓர் இளம் தளிரைக் கருக்கி, கூடாத இடத்தை நாட வைத்துவிட்டதே என்று, ரஞ்சன் மனம் நொந்தான்.

இன்னமும் அதைப் பற்றி சொல்ல அவனுக்கு மனம் வரவில்லை. இந்த நல்ல குடும்பத்துக்கு அனியிடம் இருக்கும் அன்பைக் கெடுக்கும் விதமாக எதையும் சொல்லிவிடக் கூடாது!

விட்ட வார்த்தையை அள்ள முடியாது என்பதால், மிகவும் யோசித்துதான் முடிவு செய்ய வேண்டும்!

சுமாலினியின் அனுமதி இல்லாமல், கீழ் வீட்டுக்காரர்களிடம், அனிதாவிடம் கூடச் சொல்ல மாட்டோம் என்று உறுதி கூறிவிட்டு, சுப்ரியாவின் படத்தை மஞ்சு தன் செல்லிலும் ஏற்றிக் கொண்டாள்.

குறுகுறுவென்று அவளது கண்களைப் பார்த்தால், தானாக உற்சாகமாக இருக்கிறதாம்!

ரஞ்சனும் அதேபோலவே உணர்கிறவன் என்பதால், தயங்காமல் மஞ்சுவின் செல்லுக்கு சின்னவளின் படத்தை அனுப்பினான்.

கிளம்புமுன் "தேவா சார், உங்கள் பெயர் முழுதாகத் தெரியும். ஆனால், மற்றவர்களின் முழுப் பெயரையும் சொன்னீர்கள் என்றால், குறிப்பிட வசதியாக இருக்கும்" என்றான் பதவிசாக.

முக்கியமாக, மஞ்சு என்று கூப்பிட்டால், அவளுடைய பெற்றோருடன் அவளுமே சேர்ந்து அடிக்க வரமாட்டாள் என்று என்ன நிச்சயம்?

சிரித்தவாறே, மனைவி மகளின் பெயர்களை ரஞ்சனிடம்

மகாதேவன் தெரிவித்தார்.

மஞ்சுவின் முழுப்பெயர் மஞ்சரி. மஞ்சரி என்றால் மாலை, பிரம்மன் அருமையாகத் தொடுத்த மாலையே!

தாயார் பெயர் பத்மலோசனி!

"இப்படி புறா முட்டைக் கண்ணை வைத்துக்கொண்டு பத்மலோசனியா என்று நினைப்பது தெரிகிறது. ஆனால், அதிலே தப்பு செய்தது, என் பெற்றோர்!" என்று தாயார் அதையும் வேடிக்கையாகக் கூற, எல்லோரும் சிரித்தார்கள்.

"உங்கள் காதுக்கு மட்டுமாய் ஒரு பேச்சு ரஞ்சன்" என்று மேலும் ரகசியம் பேசினார் மகாதேவன் "ஏதாவது கோபம் வரும்போது, கடைசி இரண்டு எழுத்தை சரியாகத்தான் வைத்திருக்கிறார்கள் என்று மனதுக்குள் சொல்லிக் கொள்வேன். கவனியுங்கள். அதுவும் மனதிற்குள் மட்டும்தான்!"

மறுபடியும் வெடித்த அவுட்டுச் சிரிப்பில் கலந்து கொண்டுவிட்டு, அடக்க மாட்டாத புன்னகையுடனேயே ரஞ்சன் கிளம்பினான்.

தங்கியிருந்த ஹோட்டல் அறைக்குச் சென்றதும், வீட்டுக்குப் ஃபோன் செய்தான். தாயிடம் சுப்ரியாவிடம் அவரவருக்கு ஏற்றபடி பேசி முடித்துவிட்டு, தமக்கையைத் தனியே செல்லில் பிடித்தான்.

தாமதம் ஆகும் ஒவ்வொரு நாளுக்கும் ஒரு பெரீ...ய்ய சாக்கோ பார் என்று பேரம் பேசிய சின்ன மருமகளிடம் கடைசியாகப் பேசியிருந்ததால், சுமாலினியிடம் பேசும்போதும் அவனது குரலில் சிரிப்பு இருந்தது.

அதையே நல்ல சூசகமாகக் கொண்டு, "அனியின் படிப்புப் பிரச்சினை தீர்ந்து விட்டதா?" என்று அவள் கவலை மறைந்த இலகு குரலில் கேட்கவும் தம்பி சுதாரித்தான்.

"எப்போதுமே, அது பூதாகாரப் பிரச்சினை இல்லையேக்கா. ஆனால், இன்று அந்த வீட்டுக்கே போய்விட்டேன். அதாவது, அந்தப் பெண்ணின் மாடி வீட்டுக்கு. முந்திரிக் கொத்து, வடை காஃபி என்று என்னமாகத் தடபுடல் உபசாரம், தெரியுமா?"

"மாப்பிள்ளை உபசாரம் போலத் தெரிகிறதே, ரஞ்சி?" என்று கேலி பேசி நகைத்தாள் தமக்கை.

மஞ்சரி அலங்கரித்துக் கொண்டு பட்டுச் சேலையில் வந்து அவ்னுக்கு காஃபி கொடுப்பது போன்ற தோற்றம் வினாடிக்குள் மனதில் தோன்ற ஒரு கணம் ரஞ்சன் பிரமித்துப் போனான்.

அதிலும் கண்ணைப் பறிக்கும் எழிலுடன் வந்த மஞ்சரி, அவனை நோக்கிப் புன்னகை செய்யவும், உலகமே தட்டாமாலை ஆடுவது போல உணர்ந்ததில், அவனுக்கு மெய்யாகவே தலை சுற்றிப் போயிற்று!

கொடிக்கு காய் பாரமாகுமா? 7

மஞ்சரியின் எழில் தோற்றம் அளித்த மயக்கத்தில் சற்று நேரம், அவனுக்கு மற்றதெல்லாமே மறந்து போயிருக்க வேண்டும்!

திடுமென "ஹலோ, ஹலோ, ரஞ்சி? நான் பேசுவது கேட்கிறதா? தொடர்பு சரியாக இருக்கிறதா?" என்று சுமாலினியின் குரல் உரத்துக் கேட்கவும், ஒருவாறு ரஞ்சனின் புலன்கள் வசத்துக்கு வந்தன.

அக்கா இப்படிக் கத்திக் கேட்க வேண்டுமானால், அவள் பலமுறை அழைத்திருக்க வேண்டும். எதுவுமே காதில் விழவில்லை என்றால், அவன் எப்படிக் கிறங்கிப் போயிருக்க வேண்டும்?

இயல்பாகப் பழகும் குடும்பம்! இப்படி ஒரு வார்த்தை வந்தது என்று தெரிந்தாலே, கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிடுவார்கள். அவர்களால் இயலாது என்றாலும், அந்தக் காவல் அதிகாரியை உதவிக்கு அழைத்தேனும் அதைச் செய்து விடுவார்கள். சும்மா பின்னால் வருகிறானோ என்ற சந்தேகத்திற்கே, அவரிடம் புகார் கொடுத்தாளே!

எல்லாம் இந்த அக்கா பேசியு பேச்சு!

"ரஞ்சீ, ரஞ்சீ நான் பேசுவது கேட்கிறதாடா?"

"ம்ம். நன்றாகக் கேட்கிறது!" என்று அவன் சமாளிக்கவும்.

"ஓஹோ, கேட்கிறதா? அபபடியானால், கொஞ்சம் நான் சொனன மாதிரிதானா?" என்று மறுபடியும் புன்னகை குரலில் கேடடாள் தமக்கை.

"அச்சோ, என்னக்கா நீ கூட இப்படி? இதுபோல வேடிக்கையாக

ஒரு பேச்சு நடந்தது என்றால் கூட, அந்தத் தெருப்பக்கமே வராமல் என்னை விரட்டியடித்து விடுவார்கள். ஏற்கனவே, போலீஸ் வரை போனவள்தானே? அதெல்லாம் அனிக்காக. அக்கா! அவர்கள் தடுக்குமுன் அதிரடியாக முதலிலேயே அந்தப் படங்களைக் காட்டிவிட்டேனா? அதன் மூலம் நான் அனிக்குத் தாய்மாமா என்று நிரூபித்து விட்டதால்தான், இவ்வளவு உபச்சாரமும். அம்மா, அப்பா, பெண் மூவருமே எப்படிக் குழைந்தார்கள் தெரியுமா? முதலில் காரைக் கூட அங்கே அதிக நேரம் நிறுத்தக் கூடாது என்று போலீசில் சொல்லி விரட்டியவர்கள் இப்படி மாற வேண்டுமானால், அவளிடம் எவ்வளவு பாசம் என்று பார்த்துக் கொள்! இதை இப்படிப் பாராமல், என்னென்னவோ சொல்லி விட்டாயேக்கா! அவர்கள் உதவியோடு, அனி முன் போலப் படிப்பதற்கும் ஏற்பாடு செய்துவிட்டு, சீக்கிரமே திரும்பி வரப் போகிறேன். அல்லது உன் சின்ன மகளுக்கு சாக்கலேட் வாங்கியே நம் சம்பாத்தியம் எல்லாம் கரைந்துவிடும்!" என்று மேலும் அந்த ரீதியிலேயே பேசிவிட்டு பேச்சை முடித்தான்.

ஒவ்வொருவரிடம் ஒவ்வொன்றை மறைத்து, என்ன மாதிரிப் பயங்கரமான ராஜதந்திரம்! பெரிய அயல்நாட்டுத் தூதுவராகி வெற்றிகளைக் குவித்திருக்க வேண்டியவன்! அவனது சாணக்கியத் திறமையெல்லாம் சாதாரண வீட்டுப் பிரச்சினையில் வீணாகிறதே என்று வேடிக்கையாக எண்ணிக் கொண்டான் ரஞ்சன்!

ஆனால் இன்றைய பிரச்சினையை எப்படிக் கையாள்வது என்று இன்னமும் அவனுக்கு முழுத்தெளிவு வந்துவிட்டதாகச் சொல்ல முடியாதே! பிறகென்ன பெரிய ராஜதந்திரம்?

இதுவே கோவை, திருப்பூர், பொள்ளாச்சி... இன்னும் சேலம் என்றால் கூட, நன்கு பழகிய செல்வாக்குள்ள ஆட்கள் இருந்தார்கள். அவன் சொல்லுக்கு அங்கே பெருமதிப்பு இருந்தது. அவர்கள் மூலம் சத்தமின்றி நடவடிக்கை எடுக்க முடியும்.

இங்கே சென்னையில், அது மெல்ல மெல்லத்தான் நடக்கும். வட்டார வாகனப் பதிவு அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றவர்போல ஆட்களை மெதுவாகத்தான் அவனது வட்டத்துக்குள் சேர்க்க முடியும். அவர்களிலும் யார் யாரை எந்த அளவுக்கு நம்பலாம் என்று பழகிப்

பழகித்தான் இனம் காண முடியும்.

அவ்வளவு காலம் காத்திருப்பது, இப்போது முடியாது!

அந்தப் பைக் மன்மதனின் பெயரோடு முகவரியும் கிடைத்திருப்பதால், அந்தப் பகுதியில் சுற்றிப் பார்க்கலாமா என்று ரஞ்சன் ஆலோசித்தான்.

அதற்கு முன், அந்த ரோமியோ கலையரசனின் நடமாட்டங்களை கண்காணிப்பது மேல் என்று தோன்றியது. இன்னும் எத்தனை பெண்களை வளைத்துப் போட முயற்சி செய்கிறான் என்று அறிந்து கொள்ளலாமே! அவற்றுள் எதையாவது அக்கா மகள் பார்க்கும்படிச் செய்தால், அவள் தானாக அவனை வெறுத்து விலகிவிடக் கூடுமே! பிரச்சினையே இல்லாமல் முடிகிற வாய்ப்பு இது.

இப்படி யோசித்து, இரண்டு நாட்கள் அந்த இளைஞன் கலையரசனைப் பின் தொடர்ந்து சென்று, ரஞ்சன் உளவு பார்த்தான்.

பைக்கில் செல்லுகிறவனை, காரில் ரகசியமாகத் தொடர்வது கடினம் என்று புரிந்து, தங்கியிருந்த ஹோட்டல் தொழிலாளர் மூலமாக வாடகைக்கு ஒரு பைக்கையே ஏற்பாடு செய்து கொண்டு, அதிலேறி அவன் பின்னே சுற்றினான்.

இரு தினங்களிலுமே, கலையரசனின் நடவடிக்கை, கிட்டத்தட்ட ஒரே மாதிரிதான் இருந்தது.

அனிதாவை அனுப்பிவிட்டுத் திரும்பிப் பாராமல் கிளம்பிய ரோமியோ, நேராக ஒரு பூங்காவுக்குச் சென்றான்.

அடுத்த அசடு என்று, சற்றுத் தள்ளி தன் பைக்கை நிறுத்திவிட்டு மெல்ல உள்ளே போனால், அதற்குள் அவன் திரும்பியே வந்துவிட்டான்.

ரஞ்சன் அவசரமாகப் பைக்கை நிறுத்தியிருந்த இடத்துக்கு ஓடிப் போய், வண்டியை எடுக்குமுன் கலையரசன் காணாமலே போய்விட்டான்.

மறுநாளும் அதே பூங்காதான்.

யாரோ போல நுழைவாயில் அருகிலேயே பைக்கை நிறுத்திவிட்டு, அந்தக் கலையரசன் மீது ஒரு கண்ணை வைத்தபடியே, செடி கொடிகளுக்கிடையே சுற்றினான்.

இப்படி யாரும் தன்னை வேவு பார்க்கக் கூடும் என்ற எண்ணமே அவனுக்கு இல்லை போலும். ஒரு மரத்தைக் குறி வைத்து நேராகச் சென்றான்.

உட்கார்ந்து பொழுது போக்க வசதியாக, மரத்தைச் சுற்றிலும் திண்ணை போலக் கட்டியிருந்தது. அந்தத் திண்ணையோரமாகவே நடந்து, மரத்தின் மறுபுறத்துக்கு வேகமாக சென்றான் ரோமியோ.

யார் கவனத்தையும் ஈர்க்காமல், கவனத்துடனேயே அந்தப் பக்கம் சென்று பார்த்த ரஞ்சனுக்குச் சற்று ஏமாற்றமே.

அனிதா போலச் சின்னப் பெண்ணாக அங்கே யாரும் இல்லை.

அங்கே ஒரு நடு வயதுப் பெண்ணுடன், குறைந்தது நாற்பது வயதேனும் இருக்கும், ஆனால் இளமையாகக் காட்ட முயல்வது நன்றாகத் தெரிந்தது. கூடவே, சின்னதாக ஒற்றை வைரத்தில் தோடு, மெல்லிய கைக்கடியாரம், நல்ல தோலால் ஆன கைப்பை, கால் கொலுசு, எல்லாமே எளிமை போலத் தோற்றமளித்தாலும், உண்மையில் விலை உயர்ந்தவை, காதில் அணிந்திருந்தது சிறு தோடாகத் தோன்றினாலும், அதில் பதித்திருந்த ஒற்றை வைரம் பல லட்சங்கள் பெறும்!

சமீபத்தில்தான், சுமாலினி நிர்வாக இயக்குனர் ஆகிப் பத்தாண்டுகள் முடிந்ததைக் கொண்டாடுவதற்காக, அவளுக்கு இதேபோல ஒன்றை வாங்கிப் பரிசளித்திருந்தான். அலுவலக விஷயமாக வெளியே செல்லும் போது, கௌரவமாக, அதே சமயம் காடியாகத் தோன்றாமல் இருக்கும் என்று சுமாலினிக்கு சந்தோஷம்!

அணிந்திருக்கும் உடையோடு சேர்த்து பார்க்கும்போது, இந்த அம்மா எப்போதும் இப்படித்தான் அணிவது போல! இப்படிப்பட்ட பணம் படைத்த பெண்ணோடுதான், கலையரசன் பேசிக் கொண்டிருந்தான்.

பணம் இருந்தால் எந்த வயதுப் பெண்ணையும் விட மாட்டானா?

ஆனால் அதுவும் நல்லதுதான். இவளோடு இந்தக் கலையரசனை அனி ஒரு பத்து நிமிஷம் பார்த்தாலே போதும் என்று ரஞ்சன் எண்ணமிடும்போதே, பாக்கெட்டில் எதையோ திணித்தபடி அவன் கிளம்பிவிட்டான்!

என்னதிது? அனியோடு அரைமணி நேரம் பேசுகிறவன், ஐந்து நிமிஷம் கூட நில்லாமல் கிளம்பிவிட்டானே?

கைப்பையை மூடியபடி அவளும் எழுந்தாள்.

அப்படியானால் கைப்பையில் இருந்து அவள் எடுத்துக் கொடுத்ததையே பைக்குள் திணித்தபடி கலையரசன் கிளம்பியிருக்கிறான்.

அருகில் சென்றோ, நேர்க் கோணத்தில் நின்றோ பார்க்க முடியாததால், பலதை அனுமானிக்கத்தான் வேண்டியிருந்தது.

ஒருவேளை, இவள் வேறு யாருமோ? உறவாகக் கூட இருக்கலாம்... இல்லையில்லை. அது சாத்தியமில்லை.

கலையரசனின் இருப்பிடம், அவனது சாதாரணமான பழைய பைக் எல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, அவன் ஏதோ ஏவலை நிறைவேற்றக் கூட வந்திருக்கலாம்!

சிறு ஏமாற்றத்தோடு ரஞ்சன் மறுபடியும் அவனைப் பின் தொடர்ந்தால், அடுத்திருந்த பெட்ரோல் பங்கினுள் அவனது வண்டி நுழைந்தது.

பார்க்கில் பைக்குள் திணித்ததையே எடுத்தது. நன்கு புரிந்தது.

பாக்கெட்டில் இருந்து இரண்டு நோட்டுக்கள் வெளிவந்தன. ஒன்றை பங்க்கில் கொடுத்துச் சில்லறை கேட்டதை, எதிர்ப்புறத்தில் நின்றாலும் புரிந்து கொள்ள முடிந்தது.

அது ஆயிரம் ரூபாய் நோட்டு, இரண்டு நோட்டுக்கள் வாங்கி வந்திருக்கிறான் என்று புரிந்தது.

யார் அவள்? எதற்காக இவனுக்குப் பணம் கொடுத்தாள்?

கடன் கிடன் வாங்கியதைத் திருப்பிக் கொடுத்தாளோ என்று யோசித்தால் சற்றும் ஒத்துவரவில்லை. அவளது பணக்காரத் தோற்றத்துக்கு, இவனிடம் போய் இரண்டாயிரம் ரூபாய் வாங்குவாளா? வாய்ப்பே கிடையாது!

பின்னே, ஏன் கொடுத்தாள்? கொடுத்தது பெரிய தொகையும் அல்ல!

பதில் தெரியாத கேள்வி. இருக்கட்டும். இப்போதைக்கு இதைப் பெரிதாக யோசித்து மற்ற யோசனைகளை விட்டுவிடக் கூடாது!

பெட்ரோல் போட்டுக் கொண்டு அவன் கிளம்பவே, ரஞ்சனும் தன் பணியைத் தொடர்ந்தான்.

கிட்டத்தட்ட அந்தக் கலையரசனின் வீடு இருக்கும் பகுதிவரை, அவன் நில்லாமல் சென்றான்.

அதன்பிறகு, கொஞ்சம் கீழ்த்தட்டு ஆண்கள் சேர்ந்து 'தண்ணி' அடிக்கும் போல ஓர் இடத்திற்கு போய் வண்டியைப் பக்கத்திலேயே நிறுத்திவிட்டு கடையினுள் சென்றான்.

மட்டமான சாராயம் போலும்! வாடை அந்தத் தூரத்திலும் ரஞ்சனின் குடலைப் புரட்டியது.

அந்தக் கலையரசன் இதைக் குடிக்கப் போகிறானா என்று அருவருப்புடன் ரஞ்சன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, உள்ளிருந்து ஒரு பெண்ணுடன் அவன் வெளியே வந்தான். அவளை பைக்கின் பின்னே உட்கார வைத்துக் கொண்டு பறந்து விட்டான்.

மீண்டும் அவர்களை ரஞ்சன் பிடித்தபோது, மற்றவனின் முகவரிக்கே அவன் வந்து சேர்ந்திருந்தான்!

ஒற்றை அறைக் குடிசை! அதன் உள்ளே வருமாறு கலையரசன் அழைக்க, அவள் அரை மனதாக மறுத்துக் கொண்டிருந்தாள்.

"யோவ், சும்மா போய்யா... உள்ளாரப் போனாக்க நீ கண்ட கசுமாலம் பண்ணுவே. மொதல்ல ஒரு தாலியக் கட்டு. அப்புறம், நீ கூப்பிடாதியே வருவனில்லை?" என்றாள் அவள் கொஞ்சலாக.

"அதுக்குத்தான் புள்ளே எக்ஸ்ட்ரா வேலையெல்லாம் பார்க்கிறது. அந்தப் பணம் மட்டும் கைக்கு வந்தாக்க. அன்னிக்கே உன் அப்பன் கையிலே பணத்தைக் கொடுத்திட்டு உன்னைக் கூட்டிக் கிடுவேனே! அந்தாளு பட்ட சூதாடிக் கடனுக்காக, நீ அந்தச் சாராயக் கடைசியிலே வேலை செய்கிறது. எனக்குக் கொஞ்சமும் புடிக்கலை...!" என்றான் அவன் எரிச்சலாக.

"எனக்குந்தான் புடிக்கல. அதாலதான் ஒனுக்குச் சீக்கிரமாப் பணம் கிடைக்கணுமின்னு, ஆத்தாகிட்டே வேண்டிக்கினே இருக்கன். சரி வா. உள்ளாரப் போயிப் பேசுவோம்!"

இருவரும் சென்ற பிறகு, மனம் சமநிலை அடைவதற்கு, ரஞ்சனுக்குச் சற்று நேரம் பிடித்தது.

அறைக்குச் சென்று யோசித்துப் பார்த்தவனுக்கு கலையரசன் விஷயத்தில், தலை எது? கால் எத்தனை என்று கூடப் புரிவதாக இல்லை!

அனிதாவோடு சரசம் செய்கிறான். பூங்காவில் எவளிடமோ பணம் பெறுகிறான். அங்கிருந்து கிளம்பினால், இன்னொருத்தியோடு சல்லாபமே செய்கிறான்.

'அவனா இவன்' திரைப்படத்துக் கதாநாயகன் போல அல்லவா, நடந்து கொள்கிறான்?

அன்றிரவு அக்காவோடு பேசும்போது, வழக்கம் போல அந்த இளைஞனை அப்படியே ஒதுக்கிவிட்டு அனிதாவுடைய மற்ற சினேகிதிகள் பற்றி ஆராயப் போவதாகச் சொன்னான்.

"ஆனால், அவள்தான் யாருடனும் பழகுவதே இல்லை என்று அந்த மஞ்சரி கூறியதாகச் சொன்னாயே, ரஞ்சி?" என்றாள் தமக்கை.

"ஆனாலும் அக்கா, விரோதி போல எல்லோருடனும் முகத்தைத் திருப்ப முடியாதல்லவா? அதுவும் உன்னைப் போல அழகாக இருப்பதால், அதுவே மற்றவர்களைக் கவர்ந்து, அவளிடம் பழக முயற்சி செய்வார்கள்தானே?" என்று வாதம் செய்தான் தம்பி.

ஆனால் சுமாலினி "இப்போது பேச்சில் எதற்கு என் அழகை இழுத்தாய் என்று தெரியவில்லையே? ரஞ்சி நிஜத்தைச் சொல்லு,என்னிடமிருந்து நீ எதையும் மறைக்கவில்லையே?" என்று கேட்டு அவனை அதிர வைத்தாள்.

அவனது நோக்கம் ஓரளவு அதுதான். அவளை அழகி என்றதால் உச்சி குளிர்ந்து, மற்றதை மறந்து விடுவாள் என்று அல்ல. மகளின் அழகைப் பற்றி மகிழ்ச்சியோடு யோசிக்கத் தொடங்குவாள் என்றுதான். தாயைப் போல அழகு என்றதும், அனி அழகி என்பதை உறுதிப்படுத்தும் நோக்கமாகவே. ஆனால், சுமாலினி இப்படி ஒரு கேள்வி கேட்கவும், ஒரு கணம் ரஞ்சன் திணறிப் போனான்.

ஆனால் உடனே சமாளித்து "என்னக்கா நீ? உன் மகள். உன் சாயலில் இருக்கிறாள் என்று மனதில் சந்தோஷமாகத் தோன்றியதை இயல்பாகச் சொன்னால், என்னென்னவோ பேசுகிறாயே! அனிதா விஷயத்தில் சற்று அதிகமாகவே கலங்கிப் போயிருக்கிறாய் என்று

நினைக்கிறேன். மனதை அமைதிப்படுத்தும் பயிற்சி எதையாவது செய்." என்று யோசனையெல்லாம் சொல்லி சமாளிக்க, சுமாலினியும் ஒருவாறு அமைதியானாள்.

"ஒரு மாதிரி நீ சொல்வதும் சரிதானடா. அவளை அடிக்கடி நினைத்து, மனதைக் குழப்பிக் கொள்ளத்தான் செய்கிறேன். சரி, அதை விடு. ரஞ்சிம்மா, எதற்கும் நீ அந்த மஞ்சரி வீட்டுத் தொடர்பை அதிகப்படுத்திக் கொள்வது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. அனி பற்றிய விவரங்கள் கிடைப்பதோடு, அனிக்கும் நீ பார்க்கும் முகமாக, பழகக் கூடியவனாகத் தோன்றிவிடும். ரத்தத் தொடர்பும் இருப்பதால், அப்படியே உன்னோடு இயல்பாகப் பேசிப்பழகத் தொடங்கிவிடுவாள் என்று நினைக்கிறேன். நினைப்பது என்ன? ரொம்பவும் ஆசையே படுகிறேனடா. நீயும் நன்றாகப் பேசக் கூடியவன். அதனால் அங்கே அடிக்கடி போய்வா. ஆனால், அனி பாட்டி கண்ணில் மட்டும் பட்டுவிடாதே. நீ யார் என்று தெரிந்துவிட்டால், உன்னை விரட்டாமல் ஓய மாட்டார்கள்!" என்று எச்சரித்தாள் அவள்.

அனுபவம் பேசியது!

ஆனால், அந்தப் பெரியம்மாளிடம் பழைய வேகம் இப்போது இருக்கிறதா என்று ரஞ்சனுக்கு சந்தேகமாக இருந்தது. ஆளை வெளியே பாராதது மட்டுமில்லை. அந்தக் கணீர்க் குரல் யாரையேனும் அதட்டுவதையும் அவன் அன்று கேட்கவில்லை.

மஞ்சரி வீடு பற்றி சுமாலினி சொன்ன யோசனை, ரஞ்சனே நினைத்ததுதான்.

ஆனால் இளம் பெண்களைத் தவிர்ப்பது, இதுவரை அவன் கடைப்பிடித்த பொதுவான கொள்கை. அக்கா மகளுக்காக முதல் முதலாக அதைத் தகர்த்திருந்தான்.

மீண்டும் அதே போலப் போகலாமே என்று அவ்வப்போது தோன்றினாலும், பழைய வழக்கத்தால், அங்கே செல்லத் தயக்கமும் இருந்தது.

இப்போது தமக்கையின் பேச்சு அந்தத் தயக்கத்தை விலக்கியது. கூடவே, மஞ்சரியும் ஒன்றும் அவனிடம் வழிகிற விதம் இல்லை!

எதிர்த்துப் போலீசில் புகார் வரை கொடுத்தவள்!

காரை எடுத்துக் கொண்டு வந்தபோது, அங்கே உண்டது நினைவு வந்தது. வெறும் கையோடு போகக்கூடாது என்று, வழியில் இருந்த பழமுதிர் நிலையத்தில் கொஞ்சம் பழங்களை வாங்கிக் கொண்டு பணத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பினால், அதேபோல அடுத்த கவுன்டரில் இருந்து கிளம்பியது. மஞ்சரியுடைய தாயார் பத்மலோசனி.

கலகலவென்று பேசியபடி இருவருமாக அவன் காரிலேயே வீட்டுக்குச் சென்றார்கள்.

அடுத்தடுத்து மற்ற இருவரும் கூட வந்து சேர்ந்துவிட, கொஞ்ச நேரம் சந்தோஷமாக அரட்டை நடந்தது.

சற்று நேரத்தில் கண்ணில் சிரிப்புடன், "என்னம்மா, சார் வந்தது ஏன் என்று தெரியவில்லையா?" என்று கூறியபடி, மாடிப்படிப் பக்கம் போய், அனிக்கு குரல் கொடுத்தாள் மஞ்சரி.

ரஞ்சன் கொடுத்திருந்த பழ தினுசுகளைப் பார்த்துவிட்டுப் புன்னகையோடு "மாமன் வாங்கி வந்தது, மருமகள் வயிற்றுக்குப் போக வேண்டாமா?" என்று புன்னகையோடு கேட்டாள்.

"அச்சோ. பேச்சு சுவாரசியத்தில் மறந்தே போனேன், பார். அவளுக்கு,,," என்று ரஞ்சன் வாங்கி வந்து தந்த பழ தினுசுகளைப் பார்த்தாள் பத்மலோசனி.

"அனிக்குக் கொடுத்தாக வேண்டும் என்று கட்டாயமில்லை... சார், ஆன்ட்டியிடம் சொல்லுங்கள். நான் இங்கே, உங்கள் வீட்டுக்காகத்தான் வாங்கினேன்" என்றான் ரஞ்சன் அவசரமாக.

"அதனாலென்ன ரஞ்சன்? எப்படியும் அனிதாவுக்கு இவைகளை உரிமையோடு வாங்கிக் கொடுக்க, இப்போது உங்களால் முடியாது. தாய் மாமன் பரிசு இப்படித்தான் சேரட்டுமே!" என்று மகாதேவனும் சொல்ல, அதற்குமேல் சின்னவன் வாயை மூடிக் கொண்டான்.

அவனுக்கு மட்டும் ஆசையிராதா? ஆவலுடன் அக்கா மகளின் வருகைக்காக காத்திருந்தான்.

வந்தபோது, அனிதாவின் கையிலும் ஒரு பை இருந்தது. சற்றுக் கனமான, பெரிய பைதான்.

தன்னையறியாமல் ரஞ்சன்அறை வாயிலுக்கு விரைந்து சென்று பையை வாங்க, அவன் முகத்தைப் பார்த்த மருமகளும், பிகு பண்ணாமல் சிறு முறுவலுடன் பையைக் கொடுத்துத் "தேங்க்ஸ்" சொன்னாள்.

பிறகு பத்மலோசனியைப் பார்த்து "ஊரில் இருந்து தேங்காயும், கடலையும் வந்தது, ஆன்ட்டி. பாட்டி கொடுக்கச் சொன்னார்கள்" என்று உரைத்தாள்.

பையை உள்ளே கொணர்ந்து டீப்பாய் மேல் வைத்துவிட்டு, "தேங்காயால்தான் கனம் போல. கீழிருந்தே கூப்பிட்டிருக்கலாமே! இதைத் தூக்கிக்கொண்டு படியேறி வந்தாயே!" என்று குறைப்பட்டான், அவள் அறியாத மாமன்.

சுமாலினி சொன்னது போல ரத்தபாசமோ, அல்லது இந்தவீட்டில் இருமுறை பார்த்துவிட்டதாலோ, அனிதாவும் அதிகத் தயக்கம் காட்டாமல் பதில் கூறினாள்.

"பாட்டி கூட, வேலைக்காரம்மாவைத்தான் தூக்கிவரச் சொன்னார்கள். அங்கம்மாவும் வயதானவர்கள். அதனால்தான் அவர்களை நிறுத்திவிட்டு, நானே கொண்டு வந்தேன். ஆனால், எனக்கு ஒன்றும் ரொம்பக் கஷ்டமாக இல்லை" என்றாள் சமாதானமாக.

அக்கா மகள் தன்னுடன் வேறுபாடு இல்லாமல் பேசியதே, ரஞ்சனுக்குப் பெரிதாகத் தோன்றியது. அத்தோடு அக்கா சொன்ன இன்னொன்றும் நிஜமே. பாட்டிக்குப் பேத்தியிடம் அன்பு இருக்கிறது!

அவனது தேவை அறிந்து அனியை வரவழைத்தவளிடம் நன்றி பெருகியது.

ஆர்வமாக நோக்கியவனிடம் கண்ணால் சிரித்துவிட்டு, "அனிம்மா, அம்மாவும் வாங்கி வந்து, இந்த அங்கிளும் கொண்டு வந்தாரா? வீடே பழக்கடை மாதிரி ஆகிவிட்டது. நீ கொஞ்சம் எடுத்துப் போனாயானால்தான். இது பழக்கடை அல்ல, வீடுதான் என்கிற உணர்வே வரும்போலத் தெரிகிறது. ப்ளீஸ்மா, கொஞ்சம் நிறையவே எடுத்துப் போடாம்மா?" என்றாள் கெஞ்சலாக.

என்னவோ, அனிதா பழங்களை எடுத்துப் போவது, அந்த வீட்டாருக்குத்தான் உதவி போல அவள் கூறிய தினுசில்,

சின்னவளுக்குச் சிரிப்பு வந்தது!

பத்மலோசனியும் சேர்ந்து கொண்டு "ஆமாண்டாக் கண்ணு. மஞ்சுவே கொண்டு வந்து தந்திருப்பாள். ஆனால், நிறைய இருப்பதால், உனக்கு பிடித்ததை நீயே எடுத்துக் கொள்ளலாமே என்றுதான் உன்னையே கூப்பிட்டோம்" என்று, அனியை அழைத்ததை இயல்பாக்கிக் காட்ட, மனைவி மகளின் முயற்சியை மகாதேவன் பெருமையோடு பார்த்துக் கொண்டிருந்தார்.

குடும்பமே தனக்கு உதவி செய்வது குறித்து ஆறுதலும் பெருமையுமாக உணர்ந்தாலும், தான் வாங்கி வந்ததை அனி எடுக்க வேண்டுமே என்று ரஞ்சனுக்கு சற்று கவலையாகவும் இருந்தது.

பார்வையால் அவனுக்கு ஆறுதல் கூறியவண்ணம் "அனி எடுத்துக்கோம்மா" என்றபடி, பழங்களைக் கடை பரத்தினாள் மஞ்சரி.

"ஐ, லிச்சி ஃப்ரூட்!" என்றாள் அனிதா. "ம்ம், பாடம் பண்ணாத பேரீச்சம்பழம்! மாதுளை! பட்டர் ஃப்ரூட்! ஆன்ட்டீ. எனக்கு பிடித்ததாகவே நிறைய இருக்கிறதே!" என்று அனிதாவும் கூறவும், ரஞ்சனுக்கு உச்சி குளிர்ந்து போயிற்று.

"எடுத்துக் கொள் செல்லம். கீழ் வீட்டுக் குட்டிப்பெண்ணுக்கும் சேர்த்துதான் வாங்கியதாக அப்போதே இந்த அங்கிள் சொன்னார்" என்று ரஞ்சனை 'அங்கிளா'க உருவகப்படுத்தினாள் பத்மலோசனி.

"ம்ம், நான் ஒன்றும் குட்டிப் பெண் இல்லையே! மஞ்சு அக்கா உயரம் இருக்கிறேனே!" என்று அனிதா சிணுங்க, "நானும் சொன்னேன்மா. ஆனால், அவர் வீட்டில் ஒரு சின்னக் குட்டி இருக்கிறாளாம். உன்னைப் பார்த்தால், அவளைப் போலவே தோன்றுகிறதாம். அதுதான். அவள் நினைவில் உனக்கும் வாங்கினாராம்" என்று அவளுக்கு சமாதானம் சொன்னதோடு சுப்ரியாவையும் மறைமுகமாகப் பேச்சினுள் மஞ்சரி கொணர்ந்தாள்.

பாராட்டாகப் பார்க்கும்போதே இன்னொன்று தோன்ற, வாய்ப்பை விடாமல் "என்னிடம் அவளது படம் கூட இருக்கிறது பார்க்கிறாயா?" என்று செல்லில் இருந்த சின்ன மருமகளின் படத்தை, ரஞ்சன் அனிதாவுக்குக் காட்டினான்.

அவனும் கையை நீட்டிக் காட்ட, நின்ற இடத்தில் இருந்தே

எட்டிப் பார்த்த அனிதாவின் கண்கள் வட்டமாய் விரிந்தன.

"அங்கிள் இவள் என்னைப் போலவே இருக்கிற... ஊகூம் கொஞ்சம் வித்தியாசம், கன்னம் என்னதை விடக் குண்டு. கண் கொஞ்சம் சின்னது. ஆனால், ரொம்ப என்னைப் போலத்தான். உங்கள் வீட்டில் என்றால்... இவள் யார் அங்கிள்?" என்று கேட்டாள்.

'அங்கிள்' என்று அழைத்து நேரடியாக முகத்தைப் பார்த்து அனிதா பேசவும் வானத்தில் பறக்கிற உணர்வு ரஞ்சனுக்கு.

அடக்கிக்கொண்டு "அவள் என் அக்கா மகள்... மா" என்றான் ரஞ்சன்.

உன்னை போலத்தான் கண்ணு. செல்லம் என்று என்னென்னவோ சொல்லி அழைக்க மனம் துடித்தபோதும், அவளைக் குழப்பி விடக் கூடாது என்று, ரஞ்சன் சிரமப்பட்டுத் தன்னை அடக்கிக் கொண்டு, சாதாரண அறிமுகம் போலவே பேசினான்.

ஆனால் உள்ளூர அவனுக்கு ஒரே சந்தோஷம். அவனது சொந்த மகிழ்ச்சி ஒருபுறம் இருக்க, சுமாலினியின் மகள் தாகத்தைத் தணிப்பதற்கு நிறையக் கிடைத்திருக்கிறது! கேட்டதும் அக்கா சந்தோஷப்படுவாள். பிறகும் நினைத்து நினைத்து மகிழ்வாள்!

கொஞ்சம் பழங்களைத் தானும் தூக்கிக் கொண்டு அனிதாவோடு அவளது வீடு வரை சென்று, தேங்காய், கடலைக்கு நன்றி சொல்லிவிட்டு மஞ்சரி திரும்பி வந்தாள்.

பெரியவர்களுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருந்த ரஞ்சன் புன்னகையோடு அவளைப் பார்த்த விதத்தில் மஞ்சரிக்குச் சிரிப்பு வந்துவிட்டது "சாகாவரம் பெற்ற ராட்சசன் கூட, உங்கள் அளவு சந்தோஷப்பட மாட்டான், ரஞ்சன். உங்கள் பற்கள் முப்பத்தியிரண்டும் உருப்படியாக இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம் போல!" என்று கேலி செய்தாள்.

"ச்! என்ன உபமானமடி? சும்மா இரு" என்று பத்மலோசனி மகளை அதட்டினாள்.

ஆனால் ரஞ்சன் முறுவலித்தபடியே "ராட்சசனோ, தேவனோ, நீ என்ன சொன்னாலும் எனக்கு ஒன்றுதான். உன் பேச்சால் என் மகிழ்ச்சி கொஞ்சம் கூட குறையாது, குறைய முடியாது!" என்று மனதாரச்

சொன்னான்.

உளமார நம்பிச் சொன்னதுதான். ஆனால், வெகு விரைவிலேயே அவளது பேச்சால் அவனது கவலை அதிகரிக்கும்படி ஆயிற்று.

கொடிக்கு காய் பாரமாகுமா? 8

தொழில் விஷயமாக, ரஞ்சனின் வேலை வெகு வேகமாக முன்னேறிப் போயிற்று. ஆனால் அக்கா மகளின் விஷயமாக ஒரு சிறு முன்னேற்றத்தையும் அவனால் அடைய முடியவில்லை.

சரியாக சொல்வதானால், பின்னடைவையே சந்திக்க நேர்ந்தது எனலாம்.

படிப்பைப் பற்றிய அக்கறையே இல்லாமல், பாதி டியூஷனில் அனிதா வகுப்பை விட்டு வெளியே வந்து விடுவதும், அந்த பைக் ரோமியோவுடன் பேசிக்கொண்டு நிற்பதும் தவறாமல் நடந்தது.

மஞ்சரி வீட்டில்இயல்பாக ஒரு நல்ல பெண்ணாகப் பேசிப் பழகுகிறவளும், படிப்பு விஷயத்தில் இந்த மட்டித்தனம் செய்கிறவளும் எப்படி ஒருத்தியாக இருக்க முடியும்?

அதுவும், வீட்டில் ஒரு சில வாக்கியங்கள் மட்டுமே பேசுகிறவள், இவனிடம் வாய் ஓயாமல் அப்படி என்னதான் பேசுவாள்?

என்ன பேசினாலும், அவனோடு அவள் பேசுவதைப் பார்க்கையில் அவனது மனம் நொந்தது உண்மை.

அனிதாவிடம் மாற்றமே இல்லை என்று அந்த கலையரசனைத் தொடர்ந்தாலோ. அவனது வழக்கத்திலும் மாறுதல் இருக்கவில்லை. அனிதாவின் படிப்பைக் கெடுத்து அவளிடம் பேசிக் கொண்டிருக்கிறவன், அவளைப் பிரிந்து நேராகப் பூங்காவுக்குச் செல்வதும், அங்கே நடந்து கொண்டோ உட்கார்ந்து கொண்டோ இருக்கும் அந்தப் பெண்ணிடம் பணம் வாங்கிப் போவதும், அந்த இன்னொருத்தியோடு இழைவதுமே தொடர்ந்து நடந்தது.

பணம் கொடுக்கிறவளிடம் பேசிப் பார்க்கலாம் என்று தோன்றவும், கலையரசன் சென்ற பிறகு, அவள் அருகில் சென்று "உங்களைப் பார்த்த

மாதிரி இருக்கிறது... என்று பேச்சைத் தொடங்கிப் பார்த்தான்.

அவள், அவனை ஏறிட்டுக் கூடப் பார்க்கவில்லை "எனக்கு அப்படி இல்லை. அத்தோடு கண்ட அன்னியர்களோடு பேசி நிலை இறக்கிக் கொள்கிற முட்டாள் நானில்லை" என்று தூக்கி எறிந்து பேசிவிட்டுப் போய்விட்டாள்.

இந்த முயற்சி, இன்னொரு வகையிலும் கெடுதலாக முடிந்தது. என்னதான் அவனை அவள் அலட்சியப்படுத்தினாள் என்றாலும், இன்னொரு தரம் இந்தப் பூங்காவினுள் அவனைப் பார்த்தால், அவள் சந்தேகப்படக்கூடும்.

கலையரசன் விஷயமாகவும், ஒரு முன்னேற்றமும் இருக்கவில்லை. ரஞ்சன் பழகிய தொழில் வட்டாரத்தில், அந்த இடத்துப் பெயர் சொன்னாலே "ரொம்ப மோசமான இடம் சார், தெரியாமல் கூட, அந்தப் பக்கம் போய் விடாதீர்கள்" என்று எச்சரித்தார்கள்.

எல்லா வகையிலும் பாறையில் முட்டிக் கொள்வது போல ஒரு வழியும் காணாது ரஞ்சன் திகைத்தபோது, மஞ்சுவிடம் இருந்து ஃபோன் வந்தது.

இதற்குள், இருவரும் நன்கு பேசிப் பழகத் தொடங்கியிருந்தார்கள். வெளியில் கூட ஒருதரம் சந்தித்திருந்தனர்.

ஆனால் கூப்பிட்டாளே என்று மகிழக் கூட முடியாமல், மஞ்சுவின் குரல் அழுது வடிந்தது. மிகவும் சோர்ந்த குரலில், அருகில் இருந்த ஒரு காஃபி ஷாப்புக்கு அவனை வரச் சொன்னாள்!

என்ன சொல்லப் போகிறாள்? திருமணம் என்பாளா?

வேறு எதுவும் தோன்றாமல் வருத்தத்துடன் அவள் சொன்ன இடத்துக்குப் போனால், மஞ்சரி, அவனுடைய அக்கா மகள் பற்றிப் பேசினாள். ஆனால் சொன்ன விவரம் மோசமானதே!

"அனியின் மதிப்பெண் ஐம்பதுகளுக்கு இறங்கி போய் விட்டது, ரஞ்சன். இந்த ஆண்டு பாஸ் போடாமல் இதே வகுப்பிலேயே நிறுத்தி விட வேண்டும் என்று பள்ளியில் யோசனை நடக்கிறதாம். அங்கே எனக்குத் தெரிந்த ஆசிரியையிடம் அனிதா பற்றி பேசப் போனேன். அவர்களானால் இப்படிச் சொல்கிறார்கள். உடனே ஏதாவது செய்தே

ஆக வேண்டும், டியூஷனில் எடுப்பது புரியவில்லையோ என்று தோன்றுகிறது" என்றாள் அவள்.

சட்டென ஒன்று தோன்ற, "டியூஷன் சென்டரை மாற்றி விடலாமே!" என்றான் ரஞ்சன் ஆவலாக.

ஆனால், உடனேயே, இன்னொரு சென்டருக்குப் பைக்கில் போவதா கஷ்டம் என்று அவன் சலிப்புடன் எண்ணும்போதே, "அது லேசில் முடியாது ரஞ்சன்" என்றாள் மஞ்சரி.

தொடர்ந்து காரணமும் தெரிவித்தாள் "இந்த சென்டரை ஏற்பாடு செய்தது அனியுடைய சிற்றன்னை. இப்போதே நல்ல 'கோச்சிங்' இருந்தால்தான் ப்ளஸ் டூவில் நல்ல மதிப்பெண் கிடைக்கும் என்று அவர்களே இதில் சேர்த்து, கொண்டு விட்டுக் கூட்டி வரக் கார் வசதியும் செய்து கொடுத்திருக்கிறார்கள். மாற்ற வேண்டும் என்று சொன்னாலே அது பெரிய பிரச்சினை ஆகிவிடும். அத்தோடு அங்கே படித்த பலபேர் ராங்க் வாங்கி பாஸ் பண்ணியிருக்கிறார்களாம். சொன்னார்கள்!" என்றாள் மஞ்சரி எரிச்சல் குரலில்,

"டாப் ராங்க் வாங்கும் பலபேர். எல்லாக் கோச்சிங் சென்டரிலும் சேர்ந்து பாடம் வாங்கிப் படிக்கிறவர்களாகத்தான் இருப்பார்கள். ஆனால், அனி தந்தையிடம் இப்போது அந்தப் பேச்சு எடுபடாது என்று நினைக்கிறேன். அப்படித்தானா?" என்று கேட்டான் ரஞ்சன்.

"ஆமாம் அப்படியேதான்!" என்றாள் அவள். "ஆனால் இதை இப்படியே விடுவதும் ஆபத்து! சும்மாவே மற்ற மாணவிகளுடன் பேசக் கூசுகிறவள். ஃபெயில் ஆக நேர்ந்தால் தாங்க மாட்டாளே! ஏதாவது தப்பு முடிவு எடுத்துவிடுவாளோ என்று அது வேறு நினைக்கவே நடுங்குகிறது!" என்றாள் தவிப்புடன்.

உண்மையான கவலை, பயம்!

இதுவரை சொல்லத் தயங்கிய உண்மையைத் தெரிவிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டதாக, ரஞ்சன் உணர்ந்தான்.

"அனியின் பிரச்சினை டியூஷன் இடத்தில்" என்றான் சுருக்கமாக.

"இருக்கவே இருக்காது" என்று மறுத்தவள், ரஞ்சனுக்கு பேச இடம் கொடாமல் அவளே தொடர்ந்தாள்.

"சரியாக டிரைவர் ஒன்றரை மணி நேரத்தில் ஃபிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, கணக்கு ஆகிய மூன்று பாடங்களும் முடிகிறபோது, நிமிஷம் தவறாமல் சரியாக அங்கே இருப்பாரே! அங்கேனும், ஏதாவது புது சினேகிதி கிடைத்திருக்கிறாளா என்று டிரைவர் தாத்தாவிடம் சும்மாக் கேட்பது போல விசாரித்தேன், 'எங்கேம்மா சின்னப் பசங்களைக் கூட்டிப் போய் ஜூட்டிலே விட்டுவிட்டு வந்தால், பள்ளிக்கூடம் மாதிரியே அக்கம் பக்கம் பார்க்காத, அப்படியே வந்து காரில் ஏறுது' என்றார். இவளும் காரில் ஏறினால் வீட்டுக்குள் அடைகிறவள். வீட்டுக்கு வெளியே பார்ப்பதே அபூர்வம். முன்பேனும் எங்கள் வீட்டுக்கேனும் அடிக்கடி வருவாள். இப்போது கூப்பிட்டால்தான் வருகிறாள். ஆறு வயதுச் சிறுமியாக பார்த்தபோது, குட்டித் தங்கை மாதிரி ஒட்டிக் கொண்டவள். வளர வளர தான் ரொம்ப அனாதையாகி விட்டதாக உணர்கிறாளோ என்று தோன்றுகிறது. ஆனால், இதை இப்படியே விட முடியாது. இந்த டெஸ்டில் மதிப்பெண் ஐம்பதுகளுக்கு இறங்கிவிட்டது. ஃபெயில் என்றால் தாங்க மாட்டாள். உடனடியாக ஏதாவது செய்தே ஆக வேண்டும். ஆனால் என்ன செய்வது?"

இவளும் தவிக்கிறாள்! இந்த விவரம் முழுதாகச் சொல்ல நேரம் நிச்சயமாக இதுவேதான்.

"தப்பு நடப்பது டியூஷன் நேரத்தில்" என்றான் மறுபடியும் சுருக்கமாகவே.

"எஎன்னது? அங்கே ஆசிரியர் சக மாணவர்கள் எல்லோரும் இருப்பார்களே! அனி யாரோடு எப்படி பழக முடியும்?" என்றாள் மஞ்சரி மறுபடியும் மறுப்பாகவே.

"அங்கேயும் இடைவேளை ஏதாவது இருக்கும் அல்லவா? அந்த நேரத்தில்..." என்று தொடங்கி, ரஞ்சன் விவரம் சொன்னான்.

"அவனுடைய அந்தப் பைக் எண் குறித்துக் கொண்டேன், விசாரித்ததில், கலையரசன் என்று அவனது பெயர், முகவரி கிடைத்தது, மோசமாக குடிசைப் பகுதி. போய்ப் பார்த்தால், ரொம்ப சாதாரணமான ஓற்றை அறை வீடு, அது... அது மட்டுமல்ல

அவனுக்கு அங்கே ஒரு காதலி வேறு இருக்கிறாள்!" என்றான் கசந்த குரலில்.

முன்பே ஏன் சொல்லவில்லை என்று கோபிப்பாளோ என்று அவன் கவலையோடு பார்த்தால், வியப்பும் பரிதாபமுமாக அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

"ஐயோ! இத்தனையையும் மனதில் போட்டு அடைத்து... கொஞ்சம் அசந்து தெரிகிறீர்கள் என்று அம்மாவும் நானும் பேசிக் கொண்டோம். உங்கள் மனது இந்தப் பாடு பட்டிருக்கிறதே! அயராமல் எப்படி இருக்க முடியும்?" என்று அவனுக்காக வருந்தினாள்.

மஞ்சரி கோப்பட்டு விலகி விடவில்லை என்பதே, அந்த வினாடியில் ரஞ்சனுக்கு முக்கியமாகப் பட்டது.

தன்னை இன்னமும் தெளிவுபடுத்துகிறவனாகி "உனக்குப் புரிகிறதில்லையா மஞ்சு? இதை நான் துணிந்து யாரிடமும் சொல்ல முடியாது. தப்பான நடத்தை என்று ஒரு புள்ளி விழுந்து விட்டாலும், அவளது வாழ்வே நாசமாகிவிடக் கூடும்!" என்று விளக்கினான்.

அவளும் புரிந்துகொண்டு, "உண்மைதான், அம்மா அப்பாவிடம் கூட, நாம் நன்கு யோசித்து, அதன்பிறகுதான் சொல்ல வேண்டும்" என்று அவள் தன்னையும் அவனோடு சேர்த்துக் கொண்டதில், ரஞ்சனின் மனம் உருகிப் போயிற்று.

அவளது கையைப் பற்றிக் கண்ணில் ஒற்றி, "தாங்க்ஸ் மஞ்சு!" என்றான்.

"அச்சோ, தாங்க்ஸ் எல்லாம் எதற்குப்பா? அனி எனக்கு மிகவும் பிரியமானவள். ஆனால் அந்த ராஸ்கல்! இந்தச் சின்னப் பெண்ணைப் போய் மயக்கிக் கொண்டு! இரண்டு பெண்கள் போதாது என்று, வருமானத்துக்கு வயதில் பெரியவளான இன்னொருத்தியா? இப்படித்தான் சாப்பிட வேண்டும் என்றால், அதை விட அவன் செத்துத் தொலையலாமே!" என்று கோபத்துடன் பொரிந்து கொட்டினாள் மஞ்சரி.

"இல்லை மஞ்சு" என்று மறுத்தான் ரஞ்சன் "அவனது வயிற்றுப்பாட்டுக்கே இந்தப் பணம்தான் என்று இல்லை, அந்த

வாகனப் பதிவு அலுவலகத்தில் வேலை பார்க்கும் இடமும் குறித்திருந்தது. தில்லை மிஷின் ப்ராடக்ட்சில் வேலை செய்வதாக... என்ன? என்ன விஷயம்?" என்று மஞ்சரியின் முகத்தில் அதிர்ச்சியைப் பார்த்துவிட்டு காரணம் கேட்டான்.

"அதுதான் அனி அப்பாவின் தொழிற்சாலை! அங்கே வேலை செய்கிறவனா... இஇப்படி? நம்ப முடியாத ஆச்சரியமாக இருக்கிறதே!" என்றாள் அவள் பிரமிப்புடன்.

"எனக்கும் நீ சொல்வது அப்படித்தான் இருக்கிறது. அக்கா கணவருடைய தொழிற்சாலை என்றால்... முதலாளி மகளையேவா டாவடிக்கிறான்? அவ்வளவு துணிச்சலா? ஆளைப் பார்த்தால் வெறும் ராஜா வேஷக்காரனாகத் தோன்றுகிறதே தவிர, உண்மையான வீரம், திடம் கூட தெரியவில்லை! பலமாக இரண்டு உதை விட்டால் ஆள் ஓடிப் போய்விடுவான். இதுவே கோவை ஏரியா என்றால், அப்படியே அவனை விரட்டியும் இருப்பேன். ஆனால், இவன் எப்படி.. ஒருவேளை பலமான பின்புலம் ஏதேனும் இருக்கிறதா? ஆனால், அது போலத் திமிர்த்தனத்தையும் காணோமே..." என்று ரஞ்சனும் குழம்பினான்.

கடைசியாக "ஒன்று செய்கிறேன், ரஞ்சன். ஒருநாள் வேலையில் ஒரு மணி நேரம் அனுமதி வாங்கிக்கொண்டு நானும் அனி டியூஷன் படிக்கும் இடத்துக்குப் போய்ப் பார்க்கிறேன். அங்கே போய் நேரிலே பார்த்தால், எனக்கு ஏதாவது தோன்றினாலும் தோன்றலாம்" என்றாள் மஞ்சரி.

"அதுவும் சரிதான். ஆனால், மறைவாக இருந்தே கவனி. உருப்படியாக ஏதேனும் நடவடிக்கை எடுக்க முடிந்தால் தவிர, இது நமக்குத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளக் கூடாது என்று நினைத்தேன்." என்று ரஞ்சன் கூற, மஞ்சரியும் ஒப்புதலாகத் தலையாட்டினாள்.

"இன்னும் ஒன்று. தொழில் விஷயமாக கேரளாப் பக்கம் ஒரு தரம் போய்விட்டு வர வேண்டியிருக்கிறது. கிட்டத்தட்ட ஒருவாரம். என்னவோ பிறந்ததில் இருந்து அனியைப் பார்த்து பராமரிக்கிற

மாதிரி, அவளை விட்டுச் செல்ல, உள்ளூரத் தவிப்பாக இருந்தது. ஆனால் இப்போது, விஷயம் தெரிந்தவள், நீ அருகில் இருக்கிறாய் என்பது ஆறுதலாக இருக்கிறது" என்று தன் ஊர்ப்பயணம் பற்றி ரஞ்சன் தெரிவித்தான்.

ஒருவாரப் பயணம்பற்றிக் கூறியபோது, மஞ்சுவின் முகம் சற்று வாடியதோ என்ற சந்தேகம் ஏனோ இதமாக இருந்தது.

"எதற்கும் இயன்றவரை சீக்கிரமாக வந்துவிடுங்கள் ரஞ்சன். இங்கே ஏதாவது என்றால், நீங்கள் அருகில் இருந்தால் நன்றாக இருக்கும்" என்று சொன்னபோதும் அப்படியே!

சுமாலினிக்கு காட்டவென்று அனிதாவின் வண்ணப் படங்கள் சிலதை அவனிடம் கொடுத்தாள் "கேரளா வரை போகிறவர், இடையில் கோவையில் இறங்கத்தானே செய்வீர்கள். இவைகளைப் பார்த்தால் உங்கள் அக்காவுக்கு ஆறுதலாக இருக்கும்" என்று தரவும், அதுவும் அவனுக்கு இதமாகவே இருந்தது.

எதிர்பார்த்தது போலவே சுமாலினிக்கும் பெருமகிழ்ச்சியே.

அவளுக்கு ஏக்கமாக இருக்கக்கூடும் என்று தம்பி நினைத்தால், "ரஞ்சீ. அதுநானாக எடுத்த முடிவு. அவள் நல்லபடியாகப் படித்தால், அதுபோதும் எனக்கு" என்றவள் தொடர்ந்து கேட்டாள். "என்னடா இன்னமும் அந்த அனிதாவின் மதிப்பெண் பற்றி தெளிவாக ஒன்றும் சொல்ல மாட்டேன் என்கிறாயே!" என்று குறைப்பட்டாள்.

"நிறைய யோசனைகள் அக்கா. ஆனால், அந்தக் குடும்பம் அடுத்தவர்களின் யோசனையை ஏற்று நடக்கிற குடும்பமா? அல்லது நாம்தான் நேரடியாகப் பேச முடியுமா? மஞ்சுவின் மூலமாகத்தான் போக வேண்டும். அதுவும் மெதுவாகத்தான் போக முடியும் அக்கா. அவசரப்பட்டால், உனக்கென்ன திடீரென்று என்று, அடியோடு கெட்டுவிடக்கூடும். அதனால் கொஞ்சம் பொறுமையாக இரு அக்கா. மற்றபடி எங்களால் முடிந்ததை எல்லாம், மஞ்சுவும் நானுமாகச் செய்கிறோம். கட்டாயமாகச் செய்வோம். நம்பிக்கையோடு இரு" என்றான் தம்பி.

தம்பியின் கையைப் பற்றி அழுத்தி "உன்னைத் தவிர, நான் வேறு

யாரை நம்புவேன், ரஞ்சி?"என்றாள் சுமாலினி குரல் தளுதளுக்க.

தமக்கையின் கதியற்ற நிலை தாக்க, ரஞ்சனாலும்பேச முடியவில்லை.

சில கணங்களுக்குப் பிறகு இருவரும் சமாளித்துக் கொள்ள, பேச்சு சாதாரணமாக நடந்தது.

"இவ்வளவு உதவி செய்கிறாள் அந்த மஞ்சு. அவளது படம் ஒன்று கொண்டு வருவதற்கு என்னடா? எனக்கு அவளையும் பார்க்க வேண்டும்போல இருக்கிறது" என்றாள் கமாலினி.

எனக்கும்தான் என்று நினைத்தவனுக்கு உள்ளூர சிரிப்பு வந்தது. "என்னக்கா நீ? அந்தக் குடும்பம் உதவி செய்வதே பெரிது. பெண்ணின் ஃபோட்டோவைக் கொடுங்கள் என்று கேட்டால், ஃபோட்டோ கிடைக்கிறதோ என்னவோ?ஓங்கி ஓர் அறை நிச்சயம்!" என்று அவன் கூற, "அட ஆமாமில்லை!" என்றாள் சுமாலினி.

"ஆமாம். இல்லை இரண்டையும் குழப்பியடி... என்று பேச்சு லகுவாகச் செல்லுகையில் சுப்ரியாவிடமிருந்து அழைப்பு வந்தது.

அவளிடம் மாமா பேசுவதே இல்லையாம். அதனால் அவளுக்குக் கோபமாம். உடனே வீட்டுக்கு வரவில்லை என்றால், பாட்டி மகனுக்காக செய்து வைத்திருக்கும் பிரியாணி முழுவதையும் அவளே விழுங்கி விடுவாளாம். அப்புறம் வயிற்று வலி வந்து அழுவாளாம். டாக்டரிடம் கூட்டிப் போவது, மருந்து கொடுப்பது என்று அவர்களுக்குத்தான் பெரிய தொல்லையாம்!

சிரித்துக்கொண்டே ரஞ்சன் எழுந்தான் "வாக்கா வீட்டுக்குப் போகலாம். அல்லது உன் சின்ன மகள் வீட்டுக்குள்ளேயே ஆயிரம் பத்தாயிரம் வாலாக்களை எல்லாம் வெடிக்கத் தொடங்கி விடுவாள்" என்று அவன் அழைக்க, சுமாலினியும் புன்னகையுடனேயே கிளம்பினாள்.

வீட்டுக்குச் சென்ற பின்னும் சுப்ரியா விடவில்லை.

அக்காவையும் தம்பியையும் சந்தேகமாகப் பார்த்து "பாட்டீ, நான் சொல்வதைக் குறித்து வைத்துக்கொள். உன் பிள்ளைகள் இருவரும் சேர்ந்து உனக்கு எதிராகச் சதி செய்கிறார்கள்! ஒருநாள்

இல்லாவிட்டால் ஒருநாள். எல்லாச் சொத்தையும் அமுக்கி விட்டோம். வெளியே போ எனப் போகிறார்கள்" என்று எச்சரித்தாள்.

"சே மண்டு. என்ன உளறுகிறாய்?" என்று அதட்டினாள் பெற்றவள்.

"என்னடா செல்லம், ஏன் இப்படி பேத்துகிறாய்?" என்று அன்பாகக் கேட்டான் மாமன்.

"நான் ஒன்றும் உளறவும் இல்லை. பேத்தவும் இல்லை! சதி பண்ணவில்லை என்றால், நீங்கள் இரண்டுபேரும் யாருக்கும் தெரியாமல், ராத்திரி மொட்டை மாடியில் போய்ப் பேசுவானேன்? இதுவரை அலுவலகத்தில் இருந்தது, எனக்கும் பாட்டிக்கும் தெரியாமல் என்னமோ பேசுவதற்குத்தானே?" என்று அவள் கேட்ட தினுசில் இருவருமே திகைத்துப் போயினர்.

முதலில் சமாளித்துக் கொண்டது சுமாலினிதான், "பேத்தி பேத்தி என்று செல்லம் கொடுத்து வாயை எப்படி வளர்த்து வைத்திருக்கிறீர்கள், பாருங்கள்! சதியாம் மண்ணாங்கட்டியாம்!" என்று தாயிடம் ஒரு குறை கூறிவிட்டு, மகளிடம் திரும்பினாள்.

"பெரிதாக வாய் கிழிய அளக்கிறாயே! அந்த மூளையைக் கொஞ்சம் பயன்படுத்தி, நம் கார்சவாரி, ஒவ்வொருவர் அறைக்கும் ஏசி, துணிமணி, நகைகள் இன்னும் நீ கேட்கிற விலை உயர்ந்த லேப்டாப், மொபைல்... இதெல்லாம் எந்த மந்திரக் கோலில் இருந்து வருகிறது என்று யோசிப்பதுதானே? காடோ மேடோ என்று ஊர் ஊராய் அலைந்து, மாமா புதுப்புது ஆர்டர் பிடித்து வருகிறான். அந்த ஆர்டர் படி, குறித்த நேரத்தில் வேலை முடிவதற்காக, நான் தொழிற்சாலையில் சுற்றிச் சுற்றி வருகிறேன். மாமாவும் நானும் பேசித் திட்டமிட்டு, பக்காவாக ப்ளான் பண்ணாமல், இதெல்லாம் நடக்குமா? கெட்டிக்காரி, சின்னப் பெண் என்று கொண்டாடினால், வாய் நன்றாகத்தான் கிழிகிறது!" என்று பொரிந்து கொட்டவே ஓடி வந்து தாயின் இடுப்பைக் கட்டிக் கொண்டு "சாரிம்மா. சாரிமாமா!" என்று கொஞ்சலாக மன்னிப்புக் கேட்டாள் பெண்.

அதற்குமேல் அவளிடம் யார் கோபமாக இருப்பது?

நிதானமாகச் செய்தால் ஆறேழு நாட்கள் பிடிக்கக்கூடிய

வேலைதான், ஆனால் பறந்து பறந்து வேலையை முடித்துவிட்டு, ஐந்தாம்நாளே ரஞ்சன் கோவைக்கு கிளம்பிவிட்டான்.

அங்கிருந்து காரை எடுத்துக்கொண்டு, மாலைக்குள் சென்னையையும் அடைந்துவிட்டான்.

அனிதாவுக்கு டியூஷன் நேரம். அங்கே போய் அவளைப் பார்த்துவிட்டு, அப்படியே மஞ்சரி வீட்டுக்கும் சென்று, அக்கா அனுப்பிய பெரிய காலிஃப்ளவர், காரட், டர்னிப் போன்ற ஊட்டிக் காய்கறிகளை கொடுத்துவிட்டு கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு வரலாம் என்று திட்டமிட்டுச் சென்றவனுக்கு இடையிலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

ஆனந்த அதிர்ச்சி!

பெரிய பெரிய மரங்கள் அடர்ந்த அந்தக் குடியிருப்புப் பகுதியில், டியூஷன் சென்டரில் இருந்து வெளியே வந்ததும் சட்டென கண்ணில் படாத விதமாக அவளது ஸ்கூட்டரை நிறுத்தி, ஏதோ ஃபைலை கவனத்துடன் பார்க்கிற மாதிரி அமர்ந்திருந்தவள் மஞ்சரியேதான்.

பார்த்ததுமே ரஞ்சனின் நெஞ்சம் மகிழ்ச்சியால் மட்டுமின்றி, நன்றி உணர்ச்சியாலும் நிறைந்தது.

அவனிடம் சொன்னது போலவே, அவனுடைய அக்கா மகளைக் கண்காணிப்பதற்காக இங்கே வந்து காத்திருக்கிறாளே!

அவள் அருகே சென்று காரை நிறுத்த, அவளுக்கும் ஒரே சந்தோஷம் சொன்ன தேதிக்கு இரண்டு நாள் முன்னதாகவே வந்துவிட்டானே!

இருவரும் ஒருவருக்கொருவர் நிகழ்ந்தவற்றைப் பரிமாறிக் கொண்டனர்.

அனிதாவைத் தினமும் சந்தித்து ஓரிரு வார்த்தைகளேனும் பேசுவதை வழக்கத்துக்கு கொண்டு வந்திருப்பதை மஞ்சரி சொன்னாள்.

கூடவே, அவளுக்கும் முன்பு படித்த ப்ள்ளி என்பதால் அனிதாவுடைய ஆசிரியைகளைப் பார்த்து, அவளை அதே வகுப்பில் நிறுத்தி வைக்கும் முடிவைத் தள்ளிப்போடும்படி ஏற்பாடு

செய்ததையும் சொன்னாள்.

அவனும்,சுப்ரியாவின் துடுக்குப் பேச்சு, அக்கா மஞ்சரி படம் கேட்டது, காய்கறி அனுப்பியது எல்லாம் ஒப்பித்தான்.

காய்கறி கூடைகளைப் பார்த்துவிட்டு, "அடேயப்பா! எவ்வளவு! எங்கள் வீட்டில் மூன்றே பேர்தான் என்று அக்காவிடம் நீங்கள் சொல்லவில்லையா?" என்று கேட்டவள், சட்டெனக் கண்கள் விரிய "ஓஹோ!" என்றாள்.

ஒப்புதலாகத் தலையாட்டி "உங்கள் வீட்டில் நல்லதாக எதைச் செய்தாலும் அனிதாவுக்குக் கொடுக்கிறீர்கள் என்று அக்காவிடம் சொல்லியிருந்தேன்" என்றான் ரஞ்சன்.

"இதுதான் தாய் மனம் என்பது!" என்ற மஞ்சரி மனம் இளகி, "ஆனால் அவளும்தான் எவ்வளவு சாப்பிடுவாள்? ஒன்று செய்கிறேன். காய்கறிகளாகவே அனிதா வீட்டில் கொடுத்து விடுகிறேன். சமையல்காரம்மாவை மேலே இரண்டு தினுசு செய்ய வைத்து, இவளையும் பாட்டியம்மா சாப்பிட வைத்து விடுவார்கள்" என்றவாறு மணியைப் பார்த்தவள் திடுக்குற்று, சென்டர் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

அவளது செய்கைகளைத் தானும் தொடர்ந்தவன் "வகுப்புகள் முடிகிற நேரம் தாண்டி விட்டதே!" என்றான் கலக்கத்துடன்.

"ஆனால் யாரும் வரவில்லையே! அதைக் கூட கவனிக்காமலா பேசிக் கொண்டிருந்தோம்..." என்று முகம் கன்ற இழுத்தாள் அவள்.

"ஊகூம், இருபது பேர்களுக்கு மேல் வரும்போது, எப்படியும் அசைவு தெரியாமல் போகாது. ஆனால் ஒருவேளை... எதற்கும் அனிக்கு ஃபோன் செய்து பாரேன்" என்றான் ரஞ்சன்.

மொபைலில் தொடர்பு கொண்டால், அனிதா வீட்டில் இருந்தாள். "இன்றைக்கு டியூஷன் கிடையாதுக்கா. எல்லாம் முடித்து, ரெக்கார்டு நோட்புக் நாளைக் கொடுத்தாக வேண்டும். இங்கே கிட்டத்தட்ட எல்லோரும் எங்கள் பள்ளியில் படிப்பவர்கள்தானே? அதனால், எல்லோரும் கேட்டதால், இன்று ட்யூஷனுக்கு லீவு கொடுத்து விட்டார்கள். ஆனால், திடீரென்று நீங்கள் ஏன்க்கா கேட்டீர்கள்?"

என்று அவள் பதிலுக்குக் கேட்கவும்" மஞ்சரி நன்றாகத் திணறிப் போனாள்.

இப்போது இவளுக்கு என்ன பதில் சொல்வது?

"அஅதில்லைம்மா... இன்று அலுவல் சீக்கிரம் முடிந்துவிட்டதால், உன்னைக் கூட்டி வரலாமோ என்று நினைத்தேன். அதற்காகத்தான் கேட்டேன்" என்று எப்படியோ சமாளித்து வைத்தாள்.

"ஓஹோ, அப்படியாக்கா?" என்று பெரியவளின் சொல்லை அப்படியே ஏற்ற அனிதா வேறொன்று கேட்டாள். "அக்கா வரும்போது, உங்கள் அலுவலகம் பக்கத்தில் உள்ள 'டேஸ்டி'க்கு போய் எனக்கு பர்கர் வாங்கி வாங்களேன். இன்றைக்குப் பத்திரிகையில் அந்த விளம்பரத்தைப் பார்த்ததில் இருந்து, சாப்பிட வேண்டும் போல ஆ...சையாக இருக்கிறதுக்கா!" என்றாள் கெஞ்சுதலாக.

நல்லவேளையாக, அவளது முகத்தில் அசடு வழிவது மறுமுனையில் இருக்கும் அனிதாவுக்கு தெரியாது என்று எண்ணினாள் மஞ்சரி.

"சரிம்மா" என்று செல்லை அணைத்துவிட்டு, ரஞ்சனிடம் விவரத்தை அவள் கூறியபோது, இருவருக்குமே சிரிப்புதான் வந்தது.

அடுத்த தெருவில் இருந்த 'பார்க்கிங்' இடத்தில் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு, இருவருமாக அனிதா சொன்ன இடத்தில் பர்கர் வாங்கப் போனார்கள்.

"பொய் சொன்னதற்குத் தண்டனையாக இங்குமங்கும் அலைய நேர்ந்தால்லும், ஆறுதலுக்கு பர்கராவது சாப்பிடலாமே, எல்லோருக்குமே வாங்குகிறேன்" என்று முன்னே சென்ற மஞ்சரியை ரஞ்சன் நிறுத்தினான்.

"அனிக்கு நான் என்ன செய்திருக்கிறேன், மஞ்சு? இந்த பர்கர் நான் வாங்குகிறேனே" என்று கம்மிவிட்ட குரலில் கூறி அவன் பர்சை எடுக்க, அவளுக்கும் கண்கள் கலங்கின.

அவனது கையைப் பற்றி அழுத்தி, "எல்லாம் நன்றாகிவிடும், ரஞ்சன்" என்று ஆறுதலாகக் கூறி, அனுப்பும்போதே அவளது விழிகள் அகன்றன.

"ரஞ்சன் இப்போது திரும்பிப் பாராதீர்கள். கவுன்டரில் பார்சலை வாங்கிய பிறகும், நான் கூப்பிடாமல் வராதீர்கள். இந்தப் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்க வேண்டாம். சீக்கிரம் போங்கள்" என்று மஞ்சரி வேகமாகப் பேசியது வியப்பளித்தபோதும், ஏதாவது காரணம் இருக்கும் என்ற உணர்ந்த ரஞ்சன், இம்மி பிசகாமல் அவள் சொன்னது போலவே செய்தான்.

பார்சல் கவுன்டரில் உட்புறமாகத் திரும்பி நின்றவனுக்கு, பார்சலைத் தரும் வழி தவிரச் சுற்றிலும் அடைக்கப்பட்டிருந்த வழுவழுப்பான கண்ணாடியில் வெளியேஇருந்த மஞ்சரியின் முகம் தெரிந்தது.

ரசனையோடு பார்த்துக் கொண்டிருந்தபோது, மஞ்சரியின் அருகே வந்து நின்றவளைப் பார்த்ததும், அவனுக்குத் பயங்கரமாகத் தூக்கிவாரிப் போட்டது!

கொடிக்கு காய் பாரமாகுமா? 9

திகைப்பு தாளாமல் தானாகத் திரும்பிய தலையைக் கட்டுப்படுத்தி அப்படியே நின்றவனுக்கு இன்னொன்று உறைத்தது.

உள்ளிருந்து வெளியேயும், வெளியில் இருந்து உள்ளேயும் பார்க்கக்கூடிய ஒளி ஊடுருவும் கண்ணாடிதான். ஆனால் வழுவழுப்பாகத் துடைத்திருந்த காரணத்தால், உருவங்களை நன்கு பிரதிபலிக்கவும் செய்தது. மஞ்சரியை நோக்கி வந்த பெண்ணைப் பிரதிபலித்த இதே கண்ணாடி, அவனையும், அவளுக்குக் காட்டிக் கொடுக்கக் கூடுமே!

அவள் மஞ்சரிக்குப் பழக்கமானவள் என்பது நன்கு புரிந்தது.

ஆனால் அவள், ரஞ்சனுக்கும் தெரிந்தவளே! பூங்காவில் கலையரசனுக்குத் தினமும் பணம் கொடுக்கிறவள்! ஒருதரம் அவளிடம் பேச்சுக் கொடுக்க முயன்றதில், அவனை அவள் அடையாளம் கண்டுகொள்ளவும் கூடும்!

எப்படியோ இவள் யார் என்று மஞ்சரி அறிந்திருப்பதால், அதன்

மூலமாக அந்தக் கலையரசனை நெருங்கும் வழி கிடைக்கவும் நிச்சயமாக வாய்ப்பிருக்கிறது!

எங்கு திரும்பினாலும் பாறையில் முட்டிக் கொள்வது போல இருந்த நிலைமாறி, அனிதாவை காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை அவனுள் துளிர்விட்டது.

ஆனால் மஞ்சரியின் எச்சரிக்கை. அது ஒன்றும எளிதல்லஎன்றும் புரிய வைத்தது. அதாவது, இப்போது அவனை அந்தப் பெண் அறிவது நல்லதல்ல என்று அறிவுறுத்தியிருக்கிறாள். அதற்குச் சரியான காரணமும் இருக்கும்!

நெஞ்சு படபடக்க, அருகில் கிடந்த கடை விளம்பர அட்டை ஒன்றை எடுத்துப் படிப்பது போலக் கண்ணாடிக்கு முகம் மறைத்து நின்று கொண்டு, அவர்களது பேச்சை ரஞ்சன் உன்றிக் கவனித்தான்.

வந்தவள்தான் கேட்டுக் கொண்டிருந்தாள். "என்ன மஞ்சரி,..எப்படி இருக்கிறாய்? உன் அம்மா சுகமா? உன் அப்பாவுக்கு வயதால் பாதிப்பு இல்லையே? உனக்கு வேலை எப்படி இருக்கிறது? ஆனால், கஷ்டமாக இருந்தாலும் பார்த்துதானே ஆக வேண்டும். பாவம்!" என்று, என்னவோ பெரிய மகாராஜா குடும்பத்தவள் குடிபடைகளிடம் நலம் விசாரிக்கிற தோரணையில் கேட்டாள்.

ஆனால் மஞ்சரி அதைக் கவனியாதவள் போல "நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் ஆன்ட்டி? லாங் டைம் நோ ஸீ என்பார்களே, அதுபோல அங்கே வரவே காணோமே? உடம்பு எல்லாம் நன்றாகத்தானே இருக்கிறது? பிள்ளைகள் சுகம்தானே?" என்று பதிலுக்கு நலம் விசாரித்தாள்.

கேட்கும்போதே, ஆரோக்கியம் சரியாக இருந்தால், வந்திருக்க வேண்டாமா என்பது போல, ஒரு வாழைப்பழத்தில் குத்திய ஊசி!

இப்போது வந்தவள் விளக்கம் சொல்கிறவளாகிச் சட்டென அமர்ந்தாள் "என்ன செய்வது? எனக்குத்தான் இங்கேயே பொழுது சரியாகிப் போகிறதே! சாருக்கும், பிள்ளைகளுக்கும் அவரவருக்கு வேண்டியது பார்த்து செய்யுமுன், என் தாவு தீர்ந்து போகிறது! இதில் நான் இன்னோர் இடத்துக்கு எங்கே போவது? இப்போது கூட இந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டு, இங்கே பர்கர் வாங்கி வர வேண்டும்

என்று பையன்கள் ஒரே ஆட்டம். அதுதான் வாங்க வந்தேன். வந்த இடத்தில்... சரி, அங்கே அத்தை மாமா சுகமா? என் தலையெழுத்தைப் பாரேன்! என் சொந்த் மாமியார் மாமனார் பற்றி, உன்னிடம் விசாரிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் தினமும் பார்க்கிறவள் நீதானே? பெரியவர்களுக்கு நல்ல துணையாகவும் இருப்பீர்கள் என்றுதானே, இவ்வளவு குறைந்த வாடகையில் உங்களை அங்கே குடி வைத்ததே!" என்றாள் வந்தவள்.

ஆக, இவள்தான் அக்காவின் இடத்தைப் பறித்த பாவி! பாதகி.. என்று கொதிக்கும்போதே, இவள் எதற்காக அந்தப் பைக் ரோமியோ கலையரசனுக்கு பணம் கொடுக்கிறாள் என்று ரஞ்சனின் மனம் குழம்பியது.

பண விஷயம் தெரியாததால், மஞ்சரி அவளுக்கு பதில் கொடுப்பதில் முனைந்தாள். "ஆமாம் ஆன்ட்டி, நெய்க்குத் தொன்னை... தொன்னைக்கு நெய் என்று பழைய காலத்தில் சொல்வது போல, என் அம்மாவை தனியாக விட்டுப் வெளியே போக எனக்கும் பயம்தான். இப்போது பாட்டியும் அம்மாவும் ஒருவருக்கு ஒருவர் துணை என்று ஆகிவிட்டது. இரண்டு பேருக்கும் நிம்மதி!" என்று நீ ஒன்றும் எங்களுக்கு விட்டுக் கொடுத்துவிடவில்லை என்று சொல்லாமல் சொன்னாள்.

சின்னவளின் பதிலைக் கண்டுகொள்ளாமல் அலட்சியப்படுத்தி, பெரியவள் பேச்சைமாற்றினாள். "ஆமாம் என் பெண் எப்படி இருக்கிறாள்? ஒழுங்காகப் படிக்கிறாளா? என்னமோ மதிப்பெண் குறைந்து விட்டதாக, என் மாமனார், என் வீட்டுக்காரரிடம் குறைப்பட்டாராமே"

"என்ன ஆன்ட்டி,உங்கள் பெண் படிப்பை பற்றி என்னிடம் கேட்கிறீர்கள்?" என்று மஞ்சரியிடம் இருந்து, நக்கலுக்கும் கிண்டலுக்கும் நடுப்பட்ட குரலில் பதில் வந்தது.

பாதிப்பே இல்லாமல், "நீதானே பாடம் பார்ப்பாயாம்?" என்று திருப்பினாள் பெரியவள்.

"வேலைக்குப் போய், இது வேறு செய்ய எனக்கு ஏது நேரம்? நீங்களே அது புரிந்துதானே டியூஷன் சென்டரில் சேர்த்திருக்கிறீர்கள்?

ஆனால், அந்த சென்டர் அவளுக்கு ஒத்து வரக் காணோமே, மதிப்பெண்ணும் குறைந்துவிட்டது. ஏன் ஆன்ட்டி, உங்களுக்கு இருக்கும் பணத்துக்கு வீட்டுக்கே யாரையாவது வரவழைத்து தனிப்பட கற்றுக் கொடுக்க வைக்கலாமே! எதற்கு அந்த சென்டர்!"

சபாஷ்! என்று நினைத்தான் ரஞ்சன். வீட்டிலேயே படித்தால் அந்த பைக் ரோமியோவை அனிதா சந்திக்கவே முடியாதே! நல்ல ஐடியா.

ஆனால் மஞ்சரியின் இந்த யோசனையை புதியவள் ஒத்துக்கொள்ள மறுத்தாள்.

"அதெப்படி? நாலு பேரோடு படித்தால்தானே மண்டையில் ஏறும்? பணமும் முதலிலேயே வாங்கிவிட்டார்கள். இடையில் விட்டால் அந்தப் பணம் நஷ்டமாகும். அதனால், இனிமாற்ற முடியாது!"

"ஆனால் அங்கே படிப்பது சரியாக இல்லை என்றால்..." என்று மஞ்சரி சொன்னதை காதிலேயே வாங்காமல், சட்டென எழுந்தாள் பெரியவள்.

"சரி சரிநான் கிளம்புகிறேன், எனக்கு ஆயிரம் வேலைகள்! சும்மா உட்கார்ந்து உன்னோடு ஊர் வம்பு பேச, எனக்கு நேரமில்லை" என்று படபடப்பாக மொழிந்தவள் விசுக்கென்று திரும்பி, வேகமாகப் போய்விட்டாள்.

அந்தப் பெண்மணி திடுமெனக் கிளம்பிப் போய்விட, மஞ்சரி யோசனையோடு புருவத்தை சுருக்கினாள்.

அவள் சென்ற கார் கண்ணுக்கு மறைந்ததும், பர்கரோடு வந்த ரஞ்சன் அவள் முகத்தைப் பார்த்ததும் "இங்கே என்ன சுளிப்பு?" என்று அவளது புருவத்தைத் தொட்டுக் காட்டினான்.

"அது... பர்கர் வாங்க வந்தார்கள். ஆனால், அனிதாவின் படிப்பு பற்றி பேசினால், பர்கரை மறந்து விழுந்தடித்து ஓடுகிறார்கள்! நினைத்ததை நடத்துகிற பிடிவாதக்காரி! இந்த சரசா! பர்கர் வாங்குவதற்காகவே வந்துவிட்டு அதை மறந்து ஓடுவதானால், இதில் என்னமோ இருக்கிறதே!" என்றாள் அவள் இன்னமும் சுளித்த புருவங்களுடனேயே!

"அவள்தான். என் அக்கா கணவருடைய அடுத்த மனைவி என்று உங்கள் பேச்சில் புரிந்து கொண்டேன். ஆனால் இன்னொரு

குழப்பமான தகவல். அவள்தான், அந்த பைக்ரோமியோவுக்குப் பணம் கொடுக்கிறவள். மொத்தமாகத் தரவில்லை என்று, அவன் கூட, வேறு ஒருத்தியிடம் குறைப்பட்டான் என்றேனே...” என்று அவன் சொல்லும்போதே மஞ்சரியின் கண்கள் அகன்றன.

“மை காட்!” என்று அவள் நெற்றியில் அறைந்து கொள்ள, “என்ன? என்ன?” என்று பரபரத்தான் ரஞ்சன்.

“பாருங்கள், அந்தப் பைக் ஆள், தப்பானவன். உங்கள் அக்கா பெண். பதினாறு வயது சின்னப் பெண்ணிடம்... பெண்ணிடம்.. வந்து அவள் மனதைக் கலைத்து... அவளது படிப்பையே அலட்சியம் செய்கிற அளவுக்கு தப்பு எண்ணத்தை வளர்க்கிறவன். அந்தப் பொறுக்கிக்கு, இந்தம்மா சரசா பணம் கொடுக்கிறாள்! சரியோ தப்போ. ஒன்றுக்கு ஒன்று தொடர்பு இருக்கிறதோ இல்லையா. ஒரு வரிசையாக யோசித்துப் பார்த்தால், இதில் பெரியதாக என்னவோ இருக்கிறது என்று தோன்றவில்லை? ரஞ்சன் இதை நிதானமாக... தீவிரமாக யோசித்து பார்க்க வேண்டும். ஆனால், இப்போது இன்னமும் தாமதம் செய்ய முடியாது. இப்போதே லேட்தான். என்றாலும் போக்குவரத்து நெரிசல் என்று ஏதோ ஒரு காரணம் சொல்லலாம். பர்கரை என்னிடம் கொடுங்கள். நீங்கள் காய்கறியைக் கொண்டு போய் கொடுங்கள்... என்னைப் பார்க்கிங் இடத்தில் விட்டுவிட்டால், உங்கள் பின்னோடேயே நானும் வந்து விடுகிறேன். மற்றது நாளைக்குப் பேசுவோம்” என்றாள் மஞ்சரி.

“செய்வோம். அதற்குள்ளாக, நான் இன்னொரு தடவை கலையரசனைப் பின் தொடர்ந்து போய், அவன் இன்னமும் பணம் வாங்குவதை உறுதிபடுத்திக் கொண்டு வருகிறேன்” என்றான் ரஞ்சன்.

மஞ்சரியிடம் சொன்னது போலவே சென்று பார்க்கும்போது, அந்த கலையரசன் நிச்சயமாகவே பணம் வாங்கினான். கொஞ்சம் கூடுதலாக வாங்கியது போலவும் தோன்றிற்று.

கூடவே வாக்குவாதம் போலவும்.

அவர்களது கவனத்தை ஈர்க்காதவாறு சுற்றியலைந்து அவர்களது பேச்சு ஓரளவேனும் கேட்கிற அளவு நெருக்கமாக ரஞ்சன் சென்று நின்றபோது, அவர்களது வாய்ச்சண்டை முடிவுக்கு வந்திருந்தது.

வென்றவள், அக்காவின் வாழ்வை அழித்தவளாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில், ஆத்திரத்துடன் எழுந்து... "தினசரி கிடைக்கும் இந்த ஓசிப் பணத்திலேயே காலத்தை ஓட்டி விடலாம் என்று நினையாதே. அப்புறம், உன்னை உண்டு இல்லை என்று ஆக்கி விடுவேன். உனக்கு கொடுத்திருக்கும் கெடு நினைவில் இருக்கிறதல்லவா? அதற்குள் நான் சொன்னது நடக்காவிட்டால், தொலைத்துக் கட்டிவிடுவேன்!" என்று சினக் குரலில் சீறிவிட்டு, தப்தப்பென்று அழுத்தமான காலடிகளுடன் அவள் வேகமாகப் போய்விட்டாள்.

கூடவே ஓடிப்போய், "கட்டாயம் செய்கிறேம்மா!" என்று காலில் விழாத குறையாகக் கூறிவிட்டுக் கலையரசனும் தன் வழியே சென்று விட்டான்.

கோபம் சத்துரு என்பது நிஜம்தான். அன்று வரை ஒரு வார்த்தை கூடப் புரிபடாமல் அவனைத் தவிக்கச் செய்த தாழ்ந்த குரல் இன்று இல்லை.

யாரும் கேட்டுவிடக் கூடாது என்ற கவனம் மறந்து, அவள் கோபத்தில் கத்தியதாலேயே, அந்த சரசா பேசியது முழுதும் ரஞ்சனுக்குத் தெளிவாகக் கேட்டது எனலாம்.

ஆனால், இப்போதும் குழப்பம் எதுவும் தீர்ந்தபாடில்லை.

கலையரசனுக்கு, சரசா விதித்த கெடு எத்தனை நாள்? என்ன விஷயமாக? அனிதாவுக்கும் இதற்கும் ஏதேனும் தொடர்பு இருக்கிறதா? அல்லது அவள் மிரட்டியது வேறு விஷயமாகவா?

எந்தக் கேள்விக்கும் அவளது கோபப் பேச்சு பதில் தரவில்லை.

ஆனால் யாருக்கோ, எதுவோ நடக்கப் போவது மட்டும் தெளிவாகத் தெரிய, கும்மிருட்டில் வழியறியாது தடுமாறுவது போல, ரஞ்சனுக்கு ஒரே தவிப்பாக இருந்தது.

அறிந்திராத மற்றவர்கள் பற்றி, அவன் செய்வதற்கு எதுவுமில்லை. ஆனால், அடி அனிதாவுக்கு விழுந்துவிட்டால், அக்கா தாங்குவாளா? ஏன், அவனாலும்தான் முடியாது!

மஞ்சரியை அருகில் வைத்துக் காரை ஓட்டியபடி அவளிடம் முழுவதும் ஒப்பித்தபோது, அவளுக்கும் அதே நிலைதான்.

தனியாக வீட்டில் படிக்க வை என்றால், மாற்றாந்தாய் ஓட்டமாக ஓடியது மட்டுமே. அவர்களுக்குக் கிடைத்த ஒரு சிறு துருப்பு எனலாம். துரும்பு என்றால் இன்னமும் சரியாக இருக்கும்.

மற்றபடி, அனியின் மனதைக் கெடுக்கிறவனுக்கு இவள் பணம் கொடுக்கிறாள் என்றால், அவனுக்கு இன்னொருத்தி காதலியே இருக்கிறாளே!

அது மட்டுமல்ல, அனியின் மன்தைக் கெடுப்பதால், அவளது படிப்பு நாசமாகுமே தவிர, அதனால் சரசாவுக்கு என்ன லாபம்? எதுவும் இல்லையே!

அப்படியானால் இரண்டும் வேறு வேறா?

அப்படியானால், இந்த டியூஷன் சென்டர் வேண்டாம் என்றதும், நில்லாமல் ஓடுவானேன்? மெய்யாகவே வேறு வேலை இருந்திருக்குமா? அல்லது...

என்ன நடக்கிறது? ஏன் நடக்கிறது?

சற்று குழம்பித் தவித்துவிட்டு, மேலே என்ன செய்வது என்று புரியாத தவிப்புடன் மஞ்சரி யோசனையோடு ரஞ்சனைப் பார்த்தாள். ஏனெனில், ரஞ்சன் அவளது ஆலோசனையை ஏற்பானா என்பது, அவளுக்குச் சந்தேகமாக இருந்தது!

அவள் ஐயத்தோடு நோக்கும்போதே, அவன் பேசினான் "நம்மால் முடியவில்லை என்று தெரிந்து விட்டால், கையைக் கட்டிக் கொண்டு சும்மா இராமல், அடுத்த வழியைத் தேட வேண்டும், மஞ்சரி. உன் பெற்றோரின் உதவியை நாட வேண்டிய நேரம் இப்போது வந்து விட்டதாக எனக்குத் தோன்றுகிறது" என்றான் ஆழ்ந்த குரலில் தீர்மானமாக.

ஆச்சரியமும், ஆறுதலுமாக "நானும் அந்த முடிவுக்குத்தான் வந்தேன், ரஞ்சன். மிகவும் இக்கட்டான தருணங்களில், அம்மா ஒரு நல்ல தீர்வைச் சொல்வதை, நான் பலமுறை பார்த்திருக்கிறேன். அதனால், அம்மாவிடம் சொல்லி ஆலோசனை கேட்போம்" என்றாள் மஞ்சரி.

"நான் உன் தந்தையை நினைத்தேன், மஞ்சு. அவர் அலுவலகம் போவதும் வருவதுமாக இருந்தாலும், வம்பு தும்புக்குப் போகாதவர்.

இந்தப் பகுதியில் மிகுந்த மரியாதைக்கு உரியவர், உன்னைப் போலவே, உன் பெற்றோருக்கும் அனி மீது அன்பு நிறைய இருக்கிறது. அதனால் விஷயத்தை அவர்களிடம் சொல்லி, உன் தந்தை மூலமாக அந்த போலீஸ் அதிகாரியிடம் போனால்..." என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே "ரஞ்சன்!" என்று அதிர்ந்தாள் மஞ்சரி.

"போபோலீசிடமா, ரஞ்சன்?" என்று குழப்பத்துடன் வினவினாள்.

அவளிடம் சொல்லவே, அவ்வளவு தயங்கியவன்! அப்போதும் அவளுடைய பெற்றோரிடமும் விஷயத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்பாதவன்!

"ஆமாம் மஞ்சு. உரிய அதிகாரம் படைத்த ஒருவரின் உதவி இப்போது நமக்கு அத்தியாவசியத் தேவை என்கிற நிலைக்கு நாம் வந்துவிட்டோம். இந்த நம் கோரிக்கை, அந்த அதிகாரி பார்த்துப் பழகிய ஒரு நல்ல மனிதர்களிடம் இருந்து வந்தால், கட்டாயம் ஏதாவது செய்வார் என்பது என் ஊகம்" என்று ரஞ்சன் கணக்கிட்டான்.

மஞ்சரியுடைய பெற்றோரிடம் விஷயத்தைத் தெரிவித்தபோது, 'ஐயோ' என்று பதறி அவர்கள் வருந்தியவிதம், ரஞ்சனுக்கு ஆறுதலைத் தந்தது.

அத்தோடு, கணவன் மனைவி இருவருமே, ரஞ்சனின் திட்டத்திற்கே தங்கள் ஆதரவு என்றார்கள்.

இந்த விவகாரத்தில் ரஞ்சன் நடந்துகொண்ட முறையும் அவர்கள் இருவரின் பாராட்டையும் பெற்றது.

பின் விளைவு யோசிக்காமல் நேரடியாக அடிதடி என்று அந்த கீழ்த்தட்டு இளைஞனுடன் சினிமாத்தனமாக மோதாமல், அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டதே பெரிய விஷயம் என்றார் மகாதேவன்.

"முதலில், அவன் எந்தத் தைரியத்தில் இப்படிச் செய்கிறான் என்று அறிந்து கொள்ள எண்ணினேன், அங்கிள். வயதுக் கோளாறில் இளிக்கிற விடலைப் பையன் அல்ல என்று நிச்சயமாகத் தெரிந்தது. ஆனால், இவ்வளவு கீழ்த்தட்டு மனிதன் எப்படி... என்பது இரண்டாவது குழப்பம். இதற்குமேல், அவனுக்கு ஒரு காதலியே இருக்கிறாள். அவளை ஏமாற்றினால், அவள் சும்மா விட்டுவிட

மாட்டாள். நடுத்தெருவில் சட்டையைப் பிடித்துக் கேட்கிற வகை. அவன் தினமும் பணம் பெறுவது இன்னொன்று, எல்லாவற்றுக்கும் மேலாக் அவனுக்குப் பணம் கொடுக்கிறவள் அனியுடைய மாற்றாந்தாய் என்றானதும் எங்கள் இருவருக்குமே தலை சுற்றிவிட்டது. அதனால்தான் உங்களிடம் வந்தோம்" என்றான் ரஞ்சன்.

மஞ்சரியுடைய பெற்றோர் யோசனையோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

பத்மலோசனி மெதுவாக ஏதோ சொல்லவும், தலையாட்டிவிட்டு மகாதேவன் பேசினார். "அந்த கலையரசனுக்கு, சரளா பணம் கொடுப்பதற்கும், அவன் அனியைச் சந்திப்பதற்கும் சம்பந்தம் இருக்கும் என்று எங்களுக்குத் தோன்றவில்லை, ரஞ்சன். ஏனெனில், அவன், அவளை மிரட்டிப் பணம் வாங்கவில்லை. மாறாக, அந்தம்மாள்தான் அவனை மிரட்டுகிறாள். அதனால், குடும்பப் பெயர் உள்ளே வராமலே சும்மா அனியைப் படிக்க விடாமல் ஒருவன் சுற்றுகிறான், சத்தமில்லாமல் அவனை விரட்ட வேண்டும் என்று இன்ஸ்பெக்டரிடம் வாய்மொழியாகச் சொல்லி உதவி கேட்போம்.

"நல்லவேளையாக, இன்ஸ்பெக்டர் சகாயம் ரொம்ப நல்ல மனிதர். கடமையில் கருத்துள்ளவரும் கூட. தனியாக இருக்கிற பெரியவர்கள் என்று அவ்வப்போது கீழ் வீட்டுக்கு வந்து, அவர்களோடு சற்று நேரம் இருந்து சிரித்துப் பேசிவிட்டுப் போவார். எப்போதும் போலீஸ் பாதுகாப்பு இருக்கிறது என்று வெளியே காட்டுவதற்காகவே செய்வது.

"அனியிடமும் அவருக்குப் பிரியம் உண்டு. அவரிடம் நடப்பைச் சொல்லி, அந்தப் பையன் பற்றி உதவி கேட்போம்" என்று முடித்தார் மகாதேவன்.

"ஆனால் அனிக்கோ, அவளுடைய பாட்டி, தாத்தாவுக்கோ... முக்கியமாக அவள் பாட்டிக்கு ஒன்றுமே தெரியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும், அங்கிள். தெரிந்தால் அதற்கும் எங்கள் வம்சாவளிக்குப் பெரிய அர்ச்சனை நடக்கும்" என்றான் ரஞ்சன் சற்று வெறுத்த குரலில்.

சிறு அமைதியின் பின், "ஒரு காலத்தில், அனியுடைய பாட்டி, உங்கள் அக்காவை என்ன பாடு படுத்தியிருக்க வேண்டும் என்பது,

உங்கள் பேச்சில் புரிகிறது, ரஞ்சன் தம்பி. ஆனால், இந்தப் பத்து பதினைந்து ஆண்டுகளில் பெரியம்மா நிறைய மாறியிருக்கிறார்கள். சொல்லப் போனால், அடுத்த மருமகளின் போக்கு, அவர்களைப் பெரிதும் மாற்றியிருக்கிறது என்பது என் ஊகம்..." என்ற பத்மலோசனி, இறுக மூடிய உதடுகளுடன் ரஞ்சன் பேசாதிருக்கவும், அவளே தொடர்ந்து பேசினாள்.

"அனி பாட்டியிடம் எதையும் தெரிவிக்கலாம் என்று நான் சொல்லவில்லை, ரஞ்சன். அவர்களிடம் ஒருபோதும் இது பற்றி கூறவே கூடாது என்பதுதான் என் அபிப்பிராயமும். ஆனால், அவர்கள் மாறியிருக்கிறார்கள். மஞ்சுவிடம், எங்களிடம் இன்னும் எல்லோரிடமுமே பிரியமாக... முன்னைவிட அதிகப் பிரியமாக இருக்கிறார்கள். அவர்களை ஒரேடியாக வெறுக்க வேண்டாம் என்றேன். அவ்வளவுதான்" என்று அவள் தெளிவுபடுத்தவும், ரஞ்சன் இறுக்கம் தளர்ந்தான்.

திட்டமிட்டபடி, ரஞ்சனும் மகாதேவனுமாகக் காவல் அதிகாரி சகாயத்தை வெளி இடத்தில் தனியே சந்தித்து, பிரச்சினையை எடுத்துரைத்தார்கள்.

"பரவாயில்லை ரஞ்சன்! வீட்டுப் பெண் பெயர் வெளியில் வரக் கூடாது என்று என்னிடம் கண்ட கதை சொன்னீர்கள் போல? ஆனால், அதில் தப்பு ஒன்றுமில்லை. எனக்கும் அந்த வயதில் பெண் இருக்கிறாள். இப்படி ஏதாவது என்றால், நானும் உங்களைப் போலத்தான் நடந்திருப்பேன். போகட்டும். இப்போது உங்கள் விஷயத்துக்கு வருவோம். நீங்கள் சொன்ன அந்த டியூஷன் சென்டர் ஏரியா அதிகாரி என் நண்பர்தான். ஒரே செட். நல்ல மனிதர். அவரிடம் சொல்லி, அவனை இரண்டு தட்டு தட்டச் சொன்னால், விஷயம் வெளிவந்துவிடும். நல்லபடியாகவும் முடிந்து விடும்" என்றார்.

வேலை நேரம் முடிந்து நண்பர் வீட்டுக்குச் சென்ற பிறகு, அவருடன் கலந்து ஆலோசித்துவிட்டு, எப்போது, என்ன மாதிரி நடவடிக்கை எடுப்பது என்று தீர்மானிக்கலாம் என்று இவர்களிடம் சொல்லிவிட்டு, சகாயம் தன் வேலையைப் பார்க்கப் போனார்.

ரஞ்சனின் காரில்தான் சென்றிருந்தார்கள். மகாதேவனை வீட்டில்

கொணர்ந்து விட்டுவிட்டு, விவரங்களைச் சொல்லி சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, அவன் கிளம்பினான்.

எப்படியோ, அவனை மாடிப்படி இறங்கிக் கீழே வரை வந்து வழியனுப்புவது மஞ்சரிக்கு இப்போது பழக்கமாகியிருந்தது.

அவளுடைய நட்பு வட்டாரத்தை இப்படிக் கீழே வரை வந்து விடை கொடுப்பது வழக்கமே என்பதாலோ என்னவோ, மகாதேவன் தம்பதியும் அதைத் தடுத்தது கிடையாது.

அதேபோல இன்றும் இருவருமாக இறங்கி வந்தால், தோட்டத்தில் நின்று கொண்டிருந்த கீழ் வீட்டுப் பெரியம்மாள் அவர்களை நோக்கி வந்தாள்.

அப்படியே அந்த இடத்திலிருந்து விலகிச் சென்றுவிட வேண்டும் போல மனம் நினைத்தாலும், அவர்களை நோக்கி வருகிற பெரியவளை, அப்படி அவமதிக்க ரஞ்சனுக்கு விருப்பம் இல்லை. அருகில் நின்ற மஞ்சரி, மற்ற சூழ்நிலை அதற்கு இடம் கொடுக்கவும் இல்லை.

அவனை அந்த அம்மாள் நன்றாகப் பார்க்கவும், தன்னை அடையாளம் கண்டு கொண்டாளோ என்று ஒரு கணம் இறுக்கத்தோடு அவன் காத்திருந்தான்.

அவன் யாரென்று பெரியவள் கண்டுகொள்ளவில்லை. ஆனால், அவள் அப்படி ஆழ்ந்து நோக்கியதன் காரணமே வேறு என்பது அவளது கேள்வியில் புரிந்தது.

"தம்பி அடிக்கடி வராப்போல இருக்கிறதே! உன்னைக் கட்டிக்கொள்ளப் போகிறவனா, மஞ்சுப் பொண்ணே?" என்று கேட்டு இருவரையும் திகைக்க வைத்தாள்!

என்ன கேள்வி கேட்கத் தோன்றியிருக்கிறது என்று ரஞ்சன் உள்ளூர வியந்தான்.

மஞ்சு மீது பிரியம் என்றார்கள்! அந்தக் கல் மனதில் அன்பு கசிய முடியுமா என்பது வேறு விஷயம். ஆனால் மஞ்சரிக்குத் தோற்றத்தில் பொருத்தமாகவும், கூடவே இருவரும் பழகும் விதத்திலும் ஏதோ இருந்ததால்தானே இப்படிக் கேட்க முடிந்தது?

ஓரக் கண்ணால் மஞ்சுவின் முகத்தைப் பார்த்தால், சற்று நேரம்

அங்கிருந்து விழியை பிரித்து எடுக்கவே, அவனால் முடியவில்லை.

கன்னங்களில் லேசான சிவப்புடன், மகிழ்ச்சியை அடக்க முடியாமல் அவனை ஓரப்பார்வை பார்த்துவிட்டு, "என்ன கேள்வி இது, பாட்டூ? நான் சும்மா வழியனுப்ப வந்தேன்" என்ற செல்லச் சிணுங்கலுடன் திரும்பி, மஞ்சரி மாடிக்கு ஓடிப் போனாள்.

உள்ளுரக் கிளுகிளுப்புடன் அவன் பார்த்துக் கொண்டிருக்க, "மஞ்சு பதிலைச் சொல்லிவிட்டாள். நீ எப்படிப்பா? பிரியம்தானா?" என்று துருவினாள் பெரியவள்.

அவன் யார் என்று தெரிந்தால், இப்படி நின்று பேசுவாளா, இந்த அம்மாள்?

மனதைக் காட்டிக் கொள்ளாமல், "பெரியவர்கள் பார்த்து முடிவு பண்ண வேண்டும், ஆன்ட்டி" என்று நழுவ முயன்றான் ரஞ்சன்.

அனி பாட்டியின் முகம் மாறியது "உனக்குப் பிடித்துப் போனால், அப்புறம் பெரியவர்களிடம் உன் முடிவையே ஒத்துக் கொள்ளும் படியாகத்தான் சொல்ல வேண்டும். இதையும் மறக்க முடியாமல், அதையும் ஏற்க முடியாமல், ஒரே நேரத்தில் இரண்டு குதிரைகளில் சவாரி செய்ய முயற்சிக்காதேப்பா! ஒருத்தருக்கும் சந்தோஷம் இராது, அனுபவஸ்தி சொன்னால் கேட்டுக் கொள், வீட்டில் என்ன சொன்னாலும் இந்த நல்ல பெண்ணை விட்டுவிடாதே" என்றவள், வேதனையில் முகம் சுருங்க உள்ளே சென்றாள்.

இதை எப்படி எடுத்துக் கொள்வது?

மகனுடைய அந்த இன்னொருத்தியை முதலிலேயே ஏற்றிருக்க வேண்டும் என்றா? அல்லது சுமாலினிக்கு செய்த கொடுமைகளை எண்ணி வருந்துவதாகவா?

இரண்டுமே காலம் கடந்த ஞானோதயம்! ஒரு பயனும் இல்லாதது.

ஆனால், புகுந்த வீட்டினர் சுமாலினியின் அருமை தெரியாத முட்டாள்களாக எப்படி நடந்திருந்தாலும், அவளது பிறந்த வீட்டு அன்பு முழுதும் அவளுக்கேதான். அதிலும், அவளுடன் பிறந்தவன், அவளுக்காகவே வாழ்கிறவன். அவளுக்காகவும், அவளுடைய மகளுக்காகவும் மட்டுமே!

ஒரு மகள்தான் என்ற போதே எடுத்த முடிவு! இப்போது இரண்டு

மகள்கள் எனும்போது, இரு மடங்கு உறுதியோடு செயல்படுத்த வேண்டும்!

தன் போக்கில் மனது எண்ணமிட்டுக்கொண்டே போக, இந்த இடத்தில் ரஞ்சனுக்குத் தீப்பொறி பட்டது போலச் சுரீலென்றது.

திருமணம் பற்றி, அவன் என்ன முடிவு செய்திருந்தான்? அதுவும், ஒரு பெண் இரண்டு பேரான பிறகு, அந்த முடிவில் இன்னமும் தீவிரமாக அல்லவா இருக்க வேண்டும்!

அதைவிட்டு ஓர் அழகான பெண் சகஜமாகச் சிரித்துப் பேசினால், உடனே அவளது காலடியில் போய், அவன் மனம் விழுந்துவிட வேண்டுமா? அவனது உறுதியைக் காற்றிலும் தண்ணீரிலும் எழுதியிருந்தான் போல!

நல்லவேளையாக சமயத்தில் அந்த உறுதி நினைவு வந்தது. இனி, மனதைக் கட்டுப்படுத்தி, எச்சரிக்கையோடு நடந்துகொள்ள வேண்டும் என்று ரஞ்சன் முடிவு செய்தான்.

அந்த முடிவைச் செயல்படுத்துவதற்கு அவன் எவ்வளவு சிரமப்பட்டான் என்பது அவனுக்குத்தான் தெரியும்.

ஆனால் அது ஒருபுறம் இருக்க, அவனது இந்த மாறுபட்ட நடத்தையின் காரணம் புரியாமல், மஞ்சரியும் ரொம்பத் தவித்துப் போனாள்!

கொடிக்கு காய் பாரமாகுமா? 10

கலையரசனின் முகவரி, வேலை பார்க்கும் இடம் எல்லா விவரங்களும் இருந்ததால், அவனைப் பிடிப்பது எளிதாகவே இருந்தது.

யாரும் சுதாரிக்க விட்டுவிடக் கூடாது என்று கருதியதால், சரளாவிடம் பணம் வாங்கிக்கொண்டு திரும்பிச் செல்லுகையில் அவனை மடக்கினார்கள்.

அவனுக்கு விழுந்த அடி, மறைவில் இருந்து கவனித்த ரஞ்சனுக்கே கொஞ்சம் பாவமாகத்தான் இருந்தது. ஆனால், அவனுடைய அக்கா மகள் அல்லவா மீண்டாக வேண்டும்!

அடி தாங்காமல் கலையரசன், "என்னை எதற்கு சார் அடிக்கிறீர்கள்?

எதுவானாலும் கேட்டால் என்னான்னு சொல்லிவிட்டுப் போகிறேன். இப்ப உங்களுக்கு என்னா தெரியணும்? அதைக் கேளுங்க சார்" என்று படிந்தான்.

எதற்காக என்று அறிந்ததும், "சார், இதுக்கு போட்டு என்னை இந்த அடி அடிக்கணுமா? இதிலே என் தப்பு ஒண்ணுமே இல்லை சார்..." என்றவனை இடையிட்டு, "ஆமாண்டா, படிக்கிற மைனர் பெண்ணை நீ கணக்குப் பண்ணுவே, ஆனால், அது தப்பே கிடையாது அப்படித்தானே?" என்று ஏரியா அதிகாரி மீண்டும் கையை ஓங்க, "அய்யய்யோ, அடிக்காத சார். அடிக்காதே, நடந்தது முழுக்க அப்படியே பிட்டு பிட்டு வைச்சிடறேன். அப்புறம் என்கிட்ட என்ன தப்புன்னு நீயே சொல்லு" என்று தொடங்கி அவன் சொன்ன விவரங்களைக் கேட்டதும் ரஞ்சனின் தலை சுழன்றது.

"அடிப்பாவி" என்றார் மகாதேவன்!

கலையரசன் தெளிவாகச் சொன்னான் "முதலாளி சம்சாரம். அந்தம்மாவாக் கூப்பிட்டு இப்படி நடி, பணம் நிறைய தருவேன் என்றார்கள். தொகை என்ன தெரியுமா? லெட்சத்திலே அஞ்சு! அதுபோக, தினத்துக்கும், அலங்காரத்துக்கு பார்லர் செலவுக்கு ரெண்டாயிரம் ரூபா. சாரு, மாசம் படியோடு சேர்த்து, ஏளாயிரம் ரூபா சம்பளம். இதிலே ஒரு கடனுக்கு வேற பணம் கட்டணும். இந்த நேரத்திலே, இப்படி சுளுவா இவ்வளவு பணம் கிடைக்கும்னா, யார் சார் விடுவாங்க? அதுக்கும் மேலே முதலாளி பொண்டாட்டி, மாட்டேன்னா, உள்ள பொழைப்பும் போயிடுமே! அதான் சார், சரீன்னேன்"

"ஏண்டா, அப்படியானால் யாராவது பணம் கொடுத்தால், ஒரு சின்னப் பெண்ணை நாசம் பண்ணி விடுவாயா? உனக்கும் ஒரு காலத்திலே பெண்ணுங்க பிறக்கலாம்தானே? அதற்கு இப்படி நடந்தால்... நடக்கும்தானே?"

"அய்யோ சாமி, அப்படியெல்லாம் சாபம் விடாதீங்கய்யா! அந்தம்மா அப்படிச் சொன்னால்கூட, நான் டூஜென்டாத்தான் நடந்தேன் சாமி. நீங்க வேணுமானால் அந்தப் பெண்ணையே கேளுங்க. தப்பா ஒரு தரமேனும் அவளைத் தொட்டிருப்பேனா

என்று? எனக்குன்னு ஒருத்தி இருக்கிறா சார். அவள் மேலே எனக்கு கொள்ளை ஆசை. அவளை கட்டத்தான், அவள் அப்பன் பட்ட கடனைக் கொடுக்கத்தான் அந்தம்மாகிட்டே பணத்துக்குச் சரீன்னேன். அத்தோட, முதலாளியம்மா! மாட்டேன்னிட்டு பொழைக்க முடியுமா? நீயே ரோசி... வந்து, யோசித்துப் பாரு. சாரு!" என்று நியாயம் பேசினான் கலையரசன்.

ரஞ்சனுக்குத் தோன்றியதே அந்த ஆய்வளாருக்கும் தோன்றியது போல! "என்னடா இருக்கிற இடமானால் குப்பம் என்கிறாய் பேச்செல்லாம் வேறே மாதிரி இருக்கிறதே?" என்று வினவினார் அவர்.

அடிப்பதை நிறுத்தி, அவர் பேச்சுக் கொடுப்பதே கலையரசனுக்கு பெரும் ஆறுதலாக இருந்திருக்கும் போல. கேட்டதற்கெல்லாம் முழு விவரங்களோடு தாராளமாகப் பதில் சொன்னான்.

"அய்யோ... அந்தக் கொடுமையை ஏன் கேட்கிறே சாரு? எங்க மாதிரி நல்ல தமிளுல பேசினாக்க அந்தப் பொண்ணு மட்டமா நினைச்சி ஒதுங்கிருமாம். அதுனாலே, ரெண்டு மாசம் பாடம் சொல்லி கொடுக்க ஆள் வைச்சு ஒரே டார்ச்சரு, சார். பணமும் ஓவண்டாம் மண்ணும் வேண்டாமின்னிட்டு ஓடிராலாமான்னு கூடத் தோணிச்சுது. கடைசில, இந்தக் கஸ்மாலம், நாஷ்டா, குந்திக்கினு, நாஸ்தி... இது போல ஒரு பத்து நல்ல வார்த்தைங்க மட்டும் வாயிலே வரவே கூடாதுன்னு சொல்லி அந்த பாடக் கிளாசை விட்டாங்க!" என்று எதையும் மறைக்காமல் விலாவாரியாகச் சொன்னான்.

வாழைப்பழத்தில் ஊசி நுழைத்து, "ஆக, இதுபோலப் படித்தவர்கள் போலப் பேசி, அந்தப் பெண்ணை மயக்கினாய் போல?" என்று சிக்க வைக்க முயன்றார் அதிகாரி.

ஆனால் கலையரசனும் முட்டாள் அல்ல, சட்டென சுதாரித்து, "அட ஏன் சார் மயக்கி, கியக்கின்னு தப்பாப் பேசுறே? அது பச்சை மண்ணு சாரு. அதைப் பார்த்தாக்க, அந்தப் பேச்செல்லாம் வாய்மேலே வராது சார். அந்தப் பொண்ணும் கண்ணைச் சொக்கிக்கினு காதல் பேச்செல்லாம் பேசாது. சொம்மா, குருவி, பட்டாம்பூச்சி... இப்படித்தான் பேசும், ஒரு தபா கோயில் விசேசத்துக்காவ ஊருக்குப் போனாங்களாம். அங்க மரத்திலே

ஏரா..ளமா வவ்வாலுங்க தலைகீழாத் தொங்சிச்சிங்களாம். இது ரூமிலே போயி, தலையைத் தொங்கப் போட்டுப் பார்த்திச்சாம். இதுக்கே எனக்குத் தலை வலிக்குதே. இந்த வவ்வாலுங்க நேரே உட்காரத் தெரியாம இப்படித் தொங்குதுங்களே, என்னமா வலிக்கும், பாவம் அப்படீன்னு வருத்தப்படும். அப்புறம் அவங்க தோட்டத்திலே..." என்று அவன் அடுத்த கதையைத் தொடங்முன்னே "சரிசரி போதும்" என்று அவன் பேச்சை நிறுத்தினார் அந்தப் பகுதி ஆய்வாளர்.

என்னவோ, தன்னை மீறி ரஞ்சனின் கண்கள் கலங்கின. இது போலச் சின்ன சின்ன சந்தோஷங்களை, கலக்கங்களை பகிர்ந்து கொள்ளக்கூட யாரும் இல்லாமல்தான், அனி இந்த மனிதனோடெல்லாம பேச ஓடி வந்தாளா? பெற்ற தாயிடம் தங்கையோட வளர்ந்திருந்தால் இந்த நிலை நேர்த்திருக்குமா?

இரண்டு வயது கூட நிரம்பாத மகளைப் பெற்றவளிடம் இருந்து பிடுங்கித் தூக்கிக் கொண்டு வந்தானே, பாவி! தகப்பன் என்று என்ன பொறுப்பைச் செய்தான்?

அவர் மட்டும் எதிரில் இருந்திருந்தால், சட்டையைப் பிடித்து உலுக்கியே கேட்டிருப்பான்!

"என்னவோ நன்றாகத்தான் கதை சொல்லுகிறாய். ஆனால் வெறுமனே இப்படிப் பேசிக் கொண்டிருக்க மட்டுமாக இவ்வளவு பணம் யாராவது கொடுப்பார்களா? நீயே சொல்லு. நடக்கிற விஷயமா? அப்படியானால் நீ சொன்னது எல்லாம் பொய்தானே? உன்னைத் தூக்கித் தொங்கவிட்டு லாடம் கட்டினால்தான், நிஜம் பேசுவாய் போல?" என்று அதிகாரி மிரட்டவும், கலையரசன் நடுநடுங்கிப் போனான்.

"அய்யய்யோ, அய்யய்யோ! அப்படிப் பண்ணிராதே சாரு" என்று பதறிவிட்டு, "நான் சொன்னது அல்லாம் நிஜம்தான் சாரு. ஆனா..." என்று இழுத்தான்.

"ஆனால் என்ன? சொல்லுடா? கடைசியாக அந்தப் பெண்ணை என்ன செய்ய வேண்டும் என்று திட்டம் சொல்லு?" என்று கேட்டு அந்த ஏரியா இன்ஸ்பெக்டர், அவனுக்கு ஓங்கி ஓர் அறை

வைத்திருக்க வேண்டும்.

"அய்யோ!" என்ற கலையரசனின் அலறலைத் தொடர்ந்து, "சொல்லுடா! கடைசியாக என்ன? அவளைக் கடத்திப் போய் சிவப்பு விளக்குப் பகுதியில் விற்பதா? அல்லது அவளை... உன் பாஷையில் நாஸ்தி செய்வதா? அல்லது கொன்றே விடுவதா?" என்று வரிசையாக அவர் கேட்க, ரஞ்சன் விதிர்விதிர்த்து நிமிரும்போது "அய்யோ சாமி, சத்தியமா அப்படி எல்லாம் இல்லை சார். எங்க முனீசுவரன் சத்தியமா இதெல்லாம் கிடையாது சார்" என்று கலையரசன் அழவே தொடங்கிவிட்டான்.

ரஞ்சனும் மகாதேவனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள, ஆய்வாளர் விடாமல் கேட்டார்.

"சும்மா அழுது மாய்மாலம் பண்ணாதே. உண்மையைச் சொல்லாவிட்டால், உன்னை என்கவுண்டரில் போட்டுத் தள்ளிவிடுவேன். சொல்லு, வேறே என்ன செய்வதாக இருந்தாய்? ம், சொல்லு!" என்று கடுமையான குரலில் மிரட்டினார்.

"அய்யோ என்னைக் கொன்னுடாதே, சாமி. நான் முளுசையும் சொல்லிவிடுறேன். மெய்யாலும், நீ சொன்ன மாதிரி எதுவும் கெடையாது, சார். அந்தப் பொண்ணை நான் தொடக்கூடத் தேவையில்லைன்னாங்க. ஒரு கடுதாசி மட்டும் எழுத வைக்கணும், 'ப... பலான ஆள் மேலே எனக்கு ஆசை. அவனோட ஓஓடிப் போகப் போறேன். சொன்னாத் தடுப்பீங்கன்னு, சொல்லாம ஓடிப் போறேன்'ன்னு அவங்க வீட்டுக்குக் கடுதாசி எழுதி வைக்கணும். எழுதிட்டு... எழுதிட்டு... ஆத்தா! அடிக்காத சார். அப்படியே சொல்லிடுறேன், அப்படி எழுதிட்டு வீட்டை விட்டு ஏன்கூட வர வைக்கணும். ஆனால் தப்பு ஒண்ணும் பண்ணத்தாவலை! சும்மா அடைச்சி வச்சிட்டு, மறா நாள் ஏதானும் ஆட்டோவில் ஏத்தி, அவ வீட்டுக்கே அனுப்பிடணும். இவ்வளவுதான் சார். பொண்ணைக் கூட்டிப் போனதுமே, பணம் மொத்தமும் தந்து விடுகிறதாப் பேச்சு! சாமி சத்தியமா, வேறே ஒண்ணும் கிடையாது, சார்!" என்று அழுதுகொண்டே சொல்லி முடித்தான் கலையரசன்.

ஒரு போலீஸ்காரரை அழைத்து, அவனுக்கு தண்ணீர் கொடுக்கச்

சொல்லிவிட்டு, அந்த ஆய்வாளர் இவர்களிடம் வந்தார்.

"இப்போது அவன் சொல்வது நிஜம் சார்" என்று அவர் சொல்ல, "ஆமாம் மிஸ்டர் ரஞ்சன்" என்றார் சகாயமும்.

"ஆனால், இவ்வளவு பணம் செலவு பண்ணி... இது ஏன் என்று ஒன்றும் புரியவில்லையே!" என்றார் மகாதேவன் குழப்பத்துடன்.

"இல்லை அங்கிள், அடிப்படை ஐடியா எனக்குப் புரிகிறது, அனியுடைய தாத்தா பாட்டி, மற்றும் குடும்பத்தில் அவளைப் படு மட்டமாக நினைக்கச் செய்யவேண்டும் என்று இந்த திட்டம் போட்டிருக்கிறார்கள். ஆனால், இதனால் அந்தம்மாவுக்கு என்ன லாபம்? கணவருக்கு இன்னொருத்தி மூலம் பிறந்தவள் மீது அவ்வளவு வெறுப்பாக இருக்குமோ என்றால், இந்தப் பதினாறு ஆண்டுகளாகவே அதே நிலைதானே? இப்போது என்ன திடீரென்று புதுமாதிரி ஞானோதயம்? அதுதான் ஒன்றும் புரியவில்லை" என்றான் ரஞ்சன்.

"ஞானோதயமா? ஞானசூன்யம் என்று சொல்லுங்கள்" என்றார் மகாதேவன் ஆத்திரத்துடன்.

"ரஞ்சனின் கணிப்பு ஓரளவு சரியாக வருகிறது" என்றார் சகாயம். "ஆனாலும், அவரது குழப்பமும் சரியாகவே இருக்கிறது. எதற்கும் வீட்டுக்குப் போய் மற்றவர்களுடன் கலந்து ஆலோசியுங்கள். இப்போதைக்கு அந்த சரளா அம்மாளிடம் மூச்சு விடக் கூடாது. அனிதா பக்கம் திரும்பக் கூடாது என்று கடுமையாக எச்சரித்து, இவனை விட்டு விடலாம், சுந்தரம். ஆனால் இத்தோடு உன் உதவிமுடியவில்லை. நாளைக்கு அந்தப் பெண்ணிடம் சும்மா இந்த ராஸ்கலைப் பற்றி விசாரிப்பது போல நன்றாகப் போட்டு கொடுத்துவிடு. அனிதாவின் மனம் அவனிடம் இன்னமும் பெரிதாக ஈடுபட்டிராததால், இப்போதைக்கு அதுவே போதும்" என்ற சகாயம் மகாதேவனின் பக்கம் திரும்பி "எதற்கும் உங்கள் பெண்ணை அனிதாவிடம் அடிக்கடி பேச்சுக் கொடுக்கச் சொல்லுங்கள்" என்றார்.

முதலில் நினைத்தது போல அல்லாமல், கலையரசன் கொஞ்சம் மனச்சாட்சி உள்ளவனாகவே தோன்றவும், அவனுக்கு வேண்டுமானால் ஏதாவது பணம் கொடுக்கலாமா என்று ரஞ்சன் கேட்டான்.

ஆனால் காவல் அதிகாரிகள் இருவருமே, அது கூடவே கூடாது என்று ஒரே குரலாகத் தடுத்தார்கள்.

"அதில்லை சார். அவனும் ஒரு தேவைக்காகத்தானே வாங்கியிருக்கிறான் அதைக் கொடுத்துவிட்டால்..." என்று அவன் கூறியதையும் அவர்கள் ஒப்பவில்லை.

சகாயத்துடைய நண்பர் சுந்தரம் அவர்களது மறுப்பின் காரணத்தைச் சொன்னார்.

"மனித மனம் விசித்திரமானது, மிஸ்டர் ரஞ்சன். கொஞ்ச காலம் நன்றி உணர்ச்சி இருக்கத்தான் செய்யும். அப்புறம், சும்மாவா தந்தார்கள்? அவர்கள் பெண்ணுக்காகத்தானே என்று நினைப்பான். அதன்பிறகு, ஒரு சினிமாவுக்குப் போவது என்றாலும், அதற்கு பணம் கொடுப்பது உங்கள் கடமை என்று தோன்றத் தொடங்கிவிடும். சினிமாவில் தொடங்கி எந்த அளவுக்குப் போகும் என்று சொல்ல முடியாது. உங்கள் அனிதாவுடைய மாற்றாந்தாய், அந்த அம்மாள் தனக்கு ஒரு மோசமான விரோதியை உருவாக்கி விட்டிருக்கிறாள் என்பதுதான் என் ஊகம். ஆனால், இவ்வளவு செய்தவள், யாரையும் சமாளிப்பாள். அது அவர்கள் பாடு. ஆனால்... வேண்டுமானால் ஒன்று செய்யலாம். வேலை போய்விட்டால், என்னிடம் வா, வேறு ஏற்பாடு செய்ய முயற்சிக்கிறேன் என்று மட்டும் கலையரசனிடம் சொல்லி அனுப்புகிறேன். ஆனால், எந்த வகையிலும் உங்கள் பெயர் உள்ளே வரக்கூடாது. உங்களை இப்படி மறைவாக உட்கார வைத்த காரணமே அதுதான்" என்றார்.

இரு அதிகாரிகளும் போட்ட திட்டத்தின்படி, மறுநாள் கலையரசனைச் சந்திக்க மரத்தடிக்கு வந்த அனிதாவை சுந்தரம் நிறுத்திப் பேசினார்.

"கலையரசனைச் சந்திக்க வந்தாய் போல, அவனைப் பற்றிய சில தகவல்கள் வேண்டுமே" என்று ஒரு போலீஸ் அதிகாரி கேட்கவும், அனிதா சற்று அரண்டுவிட்டாள்.

அச்சத்துடன் "ஆ... ஆமாம் சார், ஆ... ஆன்ால் அவரைக் காகாணோமே" என்று அவள் தடுமாறவும், "பயப்படாதே" என்று அவளை அமைதிப்படுத்தினார் அதிகாரி.

தங்கள் பக்கத்துக் காவல் அதிகாரி சகாயத்தை அடிக்கடி வீட்டில் பார்த்து பழக்கம் என்பதால், காக்கிச் சட்டையைப் பார்த்து அனிதா பயந்து விடவில்லை.

ஆனால் கலையரசனைப் பற்றிய விவரம் என்றதும் அவளுள் அச்சம் பிறந்தது. சமாளித்துக் கொண்டு "கககலை... கலையரசன்! அவரைப் பற்றி என்ன சார்?" என்று வினவினாள்.

"பெரிதாக ஒன்றும் இல்லையம்மா பணக்கார பொண்ணுங்களை டாவடிக்கிறதே அவன் பிழைப்பு. அவனிடம் வகையாக மாட்டிக்கொண்ட இரண்டு இடத்தில் புகார் கொடுத்திருக்கிறார்கள். அவனது பழக்க வழக்கங்களைப் பற்றி விசாரித்து வருகிறோம். இந்த மாதிரி நேரத்தில் உன்னைப் பார்க்க வருகிறான் என்று தகவல் கிடைத்தது. அதுதான் உன்னை நேரிலே பார்த்து விசாரிக்க வந்தேன்.சொல்லு, உனக்கு அவனை பற்றி என்னென்ன தெரியும்?" என்று கேட்டார்.

கலையரசன் இப்படிப்பட்டவனா என்கிற அதிர்ச்சியும், கலக்கமுமாக அனிதா திணறிப் போனாள். கூடவே, அவனைப் பற்றி அவளுக்கு என்ன தெரியும்?

மரத்துப் போனது போலத் தோன்றிய மூளையால் முயன்று யோசித்து "ரெரெண்டு தரம் சிசின்னம்மா கடைக்குக் கூகூட்டிப் போனபோது பாபார்த்தது. சாசாமான் எடுத்து வைக்க உத... உதவி செய்தார். அஅப்புறம் அவ..அவராகவே வந்து செல்லில் கூப்பிட்டுப் பே..சினார். அப்புறம்... திதினமும் இங்கே வவந்து பேசுவார், வேறே தெதெரியாது" என்றாள் நடுக்கத்துடன்.

அவள் எதையும் மறைக்கவில்லை என்பது அனுபவசாலியான அதிகாரிக்குப் புரிந்தது.

ஒரு நல்ல குடும்பத்துப் பெண்ணைத் தக்க தருணத்தில் காப்பாற்றிய நிருப்தியுடன் "நல்லவேளை! உன் விஷயமாக அவன் அடுத்த அடி டுத்து வைக்குமுன், அவனால் மோசமாகப் பாதிக்கப்பட்ட இரண்டு பேர் என்னிடம் புகார் கொடுத்து விட்டார்கள். அதன் அடிப்படையில் நாங்களும் விசாரிக்க வந்து, உனக்கு அவனது சுயரூபம் தெரியும்படியும் கடவுளே பண்ணிவிட்டார்! பாரம்மா, அவன்

எப்படிப்பட்டவன் என்று தெரிந்து விட்டதல்லவா? இனிமேல், சின்னம்மா, பெரியம்மா, என்று யார், யாரை அறிமுகப்படுத்தினாலும், எச்சரிக்கையோடு இரு. எப்போதேனும் அந்த ராஸ்கல் உன்னைப் பார்க்க வந்தாலும்... வரமாட்டான், அப்படியே வந்தாலும், நின்று பேசாதே. போம்மா, வகுப்புக்குப் போய் படி. அங்கிருந்துதானே வந்தாய்?" என்றார் அதிகாரி.

"ஆஆமாம் சார்!" என்று நடுக்கத்துடன் உரைத்த அனிதா அவசரமாகத் திரும்பி வகுப்புக்குஓடி போனாள்.

இந்தப் பாட வகுப்புக்கு, மாதக்கணக்கில் போகவே இல்லையே! வேகமாக ஓடிச் சென்றவள் சத்தமின்றிக் கடைசி பெஞ்சில் ஓரமாக அமர்ந்து, நன்றாக மூச்சு வாங்கிக் கொண்டு, பாடத்தை கவனிக்க முயன்றாள்.

அவள் வகுப்புக்குள் ஓடிப் போவதைப் பார்த்துவிட்டு, நண்பருக்கு தகவல் தெரிவித்தார், அந்த நல்ல அதிகாரி சுந்தரம்.

அதற்குமுன், அனிதா பள்ளிக்குச் சென்றிருந்த நேரத்தில், மகாதேவன் வீட்டில் ஒரு நால்வர் மகாநாடு நடந்தது.

மஞ்சரி விடுப்பு எடுத்துக்கொண்டு வீட்டில் இருக்க, நாலு பேருமாக முந்தைய நாள் நிகழ்ச்சிகளை அலசி ஆராய்ந்தனர்.

பேச்சுத் துணையின்றி, இரு வயதான பெரியவர்களோடு தனியாக வசிக்கும் அனிதா, அவள் பேசுவதை ரசித்துக் கேட்கிறவன் போல நடித்த கலையரசனிடம் பழகத் தொடங்கியதைப் புரிந்துகொள்ள எல்லோராலும் முடிந்தது.

பணத்துக்காக அந்தக் கலையரசன் அனிதாவிடம் நடித்ததையும், தப்பே என்றாலும் ஒத்துக் கொள்ள முடிந்தது.

ஆனால், திடீரென்று அந்த சரளா இப்படி ஒருவனை ஏவி விடக் காரணம்தான் எல்லோருக்குமே புரியாத புதிராக இருந்தது.

"இப்படி ஒரு வெறுப்பு அனி சின்னம்மா மனதில் இருந்தது என்றால், இந்தத் திட்டத்தைச் சென்ற ஆண்டோ, அதற்கு முன்னதிலோ செயல்படுத்தி இருக்கலாமே! சரியாகச் சொல்வதானால், சின்னப் பெண்களின் மனம் அதிகம் தடுமாறுவது, அப்போதுதான். ப்ளஸ் ஒன் வந்துவிட்டால் என்ன படிப்பு நல்லது, அதை என்ன

மாதிரிப் படிப்பது என்று பெருமளவு அதில்தான் மனம் போகும். அப்படித்தானே ரஞ்சன்?" என்று அவனை பார்த்துக் கேட்டாள் மஞ்சரி.

ஆனால், "இம். ரொம்பப் பேர் ஆண் பெண் மாணவர்கள் பெரும்பகுதி எதிர்காலம் பற்றிய யோசனையில் அப்படித்தான் இருக்கிறார்கள், சார்" என்று மகாதேவனை நோக்கிப் பதில் கூறினான் ரஞ்சன்.

மஞ்சரியின் புருவ மத்தியில் முடிச்சு விழுந்தது.

ஏனெனில், இது மூன்றாவது தடவை!

இன்று வந்ததில் இருந்தே ரஞ்சனின் கண்களில், அவர்கள் இருவருக்குமான அந்தச் சிரிப்பு இருக்கவில்லை. அவன், அவளை நேராக பார்க்கவே இல்லையே! பெரியவர்களிடமே அவனது கேள்வி, பதில் எல்லாம் இருந்தது.

அப்படித்தானா அல்லது தான்தான் அசட்டுத்தனமாக எண்ணுகிறோமோ என்ற ஐயத்தில் மஞ்சரி அவனிடம் நேராகப் பேசியதற்கும், அவளுடைய தாய் தந்தையிடம்தான், அவன் பதில் உரைத்தான்!

அப்படிக் கூறியது, இது மூன்றாவது முறை!

என்ன விஷயம்? அவளிடம் என்ன கோபம் என்று ரஞ்சனை நேரே கேட்க, மஞ்சரியின் மனம் துடித்தது.

ஆனால், இப்போது அவனுடைய அக்கா மகளின் விவகாரம் பெரிய குழப்பமாக இருக்கையில், இதுபோலச் சொந்த விஷயம் கேட்பதே தப்பு!

அவனுக்கு உறவு என்பதால் மட்டுமல்ல. அவளுடைய குடும்பத்துக்கும் அனிதா பிரியமானவளே. எனவே, தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு, உடனடிப் பிரச்சினையில் பிடிவாதமாக மஞ்சரி தன் மனதைச் செலுத்தினாள்.

ஆளுக்கு ஒன்றாக யோசித்து, ஒரு முடிவுக்கும் வர முடியாமல் மனம் குழம்பிக் கொண்டிருந்தபோது, திடுமென எழுந்து "எனக்கு ஒரு சந்தேகம்!" என்ற பத்மலோசனி "இதோ வந்து சொல்கிறேன்" என்று கதவைத் திறந்து மடமடவென்று படியிறங்கிப் போனாள்.

"நான் சொல்லவில்லை. அம்மா சரியாகக் கண்டுபிடிப்பார்கள்

என்று?" என்று மஞ்சரி பெருமைப்படும்போதே "கண்டுபிடிப்பாள்தான். ஆனால், கீழ் வீட்டுக்கு அல்லவா போயிருக்கிறாள்? அங்கே யார் காரணத்தை ஒளித்து வைத்து, நம்மோடு புதையல் தேடுகிற ஆட்டம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள்?" என்று மகாதேவன் கேட்கவும், அவள் முகம் போன போக்கைப் பார்த்து ரஞ்சனுக்கு சிரிப்பு வந்தது.

அந்த மனநிலையிலும்!

அப்பாடி சிரித்தானே என்று மகிழ முடியாமல், மறுபடியும் அங்கே இறுக்கம் சூழ்ந்தது.

கீழே சென்ற பத்மலோசனி சீக்கிரமே திரும்பி வந்து, "கண்டுபிடித்து விட்டேன்" என்று அறிவிக்க மற்ற மூவரும் ஆவலாக அவள் முகத்தைப் பார்த்தனர்.

வெற்றிப் பெருமிதத்தோடு அவள் எல்லோரையும் பார்க்க, "சரி, புலியைக் கொன்று ஃபோட்டோவுக்கு நிற்கிற மாதிரி போஸ் கொடுப்பதை நிறுத்தி, விஷயம் என்ன என்று சொல்லலாம் இல்லையா?" என்று பொறுமையிழந்து மனைவியை அவசரப்படுத்தினார் மகாதேவன்.

மற்றவர்களின் பரபரப்பு அவரவர் முகத்திலேயே தெரிந்தது.

"உங்களுக்கு நினைவிருக்கிறதோ இல்லையோ, கடைசியாகப் பெரியவரோடு சண்டை போட்டுக்கொண்டு போகுமுன், அந்த சரளா இங்கே அவ்வப்போது வருவாள், வரும்போதெல்லாம் தோட்டம் வரை வீட்டை ஒருதரம் சுற்றிப் பாராமல் போக மாட்டாள். இதைஇப்படிச் செய்ய வேண்டும், அதை மாற்ற வேண்டும் என்று ஏதாவது சொல்லுவாள். நீ வாடகைக்கு இருப்பவள், நான் உரிமைக்காரி என்று பெருமை காட்டுகிறாளாக்கும் என்று நினைப்பேன்..."

"ஏய்... பொறுமையைச் சோதிக்காதேப்பா. அதற்கும் இப்போது அவள் இந்த நாச வேலை செய்ததற்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டார் மகாதேவன்.

"இருக்கிறது மஞ்சுப்பா... என்று பத்மலோசனி கூற, "பின்னே அதைச் சொல்லு. இப்படித் தலையைச் சுற்றி மூக்கை தொடாதே!

தாங்க முடியவில்லை!" என்றார் கணவர் அலுத்த குரலில்.

அவர் சொன்ன விதத்தில் தன்னையறியாமல் முறுவலித்தபடி, மஞ்சரியைப் பார்த்தான் ரஞ்சன்.

அவளும் அதே போலப் பார்க்கவும் தீச்சுட்டவன் போல அவசரமாகப் பார்வையைத் திருப்பிக்கொண்டான்.

நல்லவேளையாக பத்மலோசனி பேசத் தொடங்கியிருக்கவும், இயல்பு போல அவளை நோக்குவது, அவனுக்கு எளிதாயிற்று.

"நீங்கள் மட்டும் என்றால், இப்போது சொல்லவே மாட்டேன். நீங்களே கண்டுபிடியுங்கள், போங்கள் என்றிருப்பேன். ஆனால், ரஞ்சன் தம்பிக்காக பார்க்கிறேன்" என்று அவள் கூற, "ஆமாம் ஆன்ட்டி, ப்ளீஸ்!" என்றான் அவனும்.

பத்மலோசனி தொடர்ந்தாள் "வீடு தோட்டத்தை அவள் சுற்றிச்சுற்றி வந்த காரணம், இந்த இடத்தின் இன்றைய மதிப்பு. மூன்று மனை சேர்ந்தாற்போல ஒரே இடமாக எனும்போது இருபது கோடிக்கு மேல் பெறுமாம்..."

"வாவ்!" என்றாள் மஞ்சரி "ஆனால் அதற்கும்...

"பொறு, சொல்கிறேன். இந்த வீட்டைப் பேத்தி மேல் எழுதி விட்டதாகப் பெரியம்மா சொன்னார்கள் என்றேனே, நினைவிருக்கிறதா?"

"ஓ!" என்றான் ரஞ்சன் "அது சமீபத்திலா?"

ஒப்புதலாகத் தலையாட்டி, "சரியாக ஆறு மாதங்களுக்கு முன்பாகவாம். சாட்சிகளோடு உயிலைப் பக்காவாக எழுதிவிட்டார்கள். ரிஜிஸ்டர் பண்ணா விட்டாலும் உயிலாக அது செல்லும் என்றாலும், பதிவு பண்ணும் வரை அவர்களால் மாற்றவும் முடியும் போல! பத்திரத்தை பதிவு பண்ணுவதற்காக, அப்போதிருந்து மகன் தில்லை சாரை கூப்பிட்டுக் கொண்டிருக்கிறார்களாம். அவரும் கையெழுத்துப் போட்டுவிட்டால், அப்புறம் பிரச்சினையே இல்லாமல் வீடு அனிதாவுக்குப் போய்விடுமாம். அவருடைய மகனோ, இந்த வேலை அந்த வேலை என்று வரமுடியாமல் இருக்கிறாராம்.

"இந்த நேரத்தில், அனிதாவின் குணம் கேவலம், அவளை நம்ப முடியாது என்று காட்டிவிட்டால், அவளுக்குச் சொத்து கொடுக்கும்

ஆசை... ஏன் தைரியமே, பெரியவருக்கு வராதுதானே? பேத்தியிடம் பாசம் அழிந்துவிடும். உயிலையும் மாற்றி மகனுக்கே கொடுத்து விடுவார்! அதற்காகத்தான், கொஞ்சம் பார்க்க நன்றாக இருக்கும் ஓர் இளைஞனை பணம் கொடுத்து செட்டப் செய்து, அனிக்கு அறிமுகப்படுத்தி, அவளோடு பழகவும், அந்த சரளா ஏற்பாடு செய்திருக்கிறாள். தாத்தா பாட்டிக்கு கடிதம் எழுதி வைத்துவிட்டு, அவனோடு அனி ஓடிப் போவதுதான், ஐந்து லட்சம் பெறுமானமுள்ள அந்த ஒப்பந்தத்தின் முக்கிய கட்டம். அனி குணம் கெட்டவள் என்று, வீட்டுப் பெரியவர்களுக்குக் காட்டுவதில் அவளுக்கு என்ன லாபம் என்று யோசித்தோமே; இதுதான் காரணமாக இருக்கக்கூடும் என்றுதான் சந்தேகம் வந்தது. அதைத்தான் பெரியவரிடம் போய்க் கேட்டு வந்தேன்" என்று அவள் சொல்லி கொண்டிருக்கும்போதே, ஒப்புக்காக கதவைத் தட்டிவிட்டு, அனிதாவுடைய தாத்தா உள்ளே வந்தார்.

அவரது கண், முகம் எல்லாம், தகதகவென்று சிவந்திருந்தன.

கொடிக்கு காய் பாரமாகுமா? 11

பெரியவரின் முகத்தைப் பார்த்ததுமே, உள்ளே நடந்த பேச்சைப் பெரியவர் நிறையக் கேட்டிருக்கிறார் என்பது, எல்லோருக்கும் தெரிந்து போயிற்று.

சரியாகச் சொல்வதானால், அவருக்குத் தெரிய வேண்டிய விவரம்தான்.

சும்மா நேரிலே போய், உன் மருமகள் இப்படி... என்று சொன்னால், நம்பத் தோன்றாது. ஓரளவு நம்பினாலும், குடும்ப விசுவாசம், கௌரவம் அதை ஒத்துக்கொள்ள விடாது. எனவே, இப்படித் தெரிந்ததே நல்லது என்றே, எல்லோரும் நினைத்தனர்!

ஆத்திரத்தில் வந்த பெருமூச்சுக்களுடன் "ஒருநாளும் இல்லாத பழக்கமாக சொத்து கித்து என்று, பத்மா வீட்டுக்கு வந்து விசாரிக்கிறாளே என்று தோன்றவும், காரணம் கேட்க அவள்

பின்னோடு வந்தேன். வந்தது நல்லதாயிற்று. சும்மாவே சரளாவுக்கு சின்னத்தனம் அதிகம் என்று நினைப்பேன். இப்படி சதி வேறு பண்ணுகிறாளா?

"வீட்டை இப்படிப் பராமரிக்காமல் விட்டுவிட்டேன் என்பதால் குடும்ப வீடு வீணாகிறது, நன்றாகப் பார்த்துக் கொள்வதற்காக, அவளிடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டு என்னிடம் சண்டை போட்டாள். நான் வீட்டைத் தருவதாக இல்லை என்று உறுதியாகச் சொல்லிவிட்டேன். நினைத்த காரியம் நடக்கவில்லை என்று, இந்த மாதிரிச் சதி செய்கிறாளா? பச்சைமண். சின்னக் குழந்தை. என் பேத்தி! அவளைப் போய் நாசம் பண்ணப் பார்த்தாளே! சதிகாரி! சண்டாளி! இவளுக்கு இவ்வளவு இடம் கொடுத்து வைத்திருக்கிறானே என் மகன், அந்த மடையனைச் சொல்ல வேண்டும்!" என்று கொதித்தார் அவர்.

மகாதேவன் குடும்பம் அவரை ஆசுவாசப்படுத்தி கீழ் வீட்டில் கொண்டு விட்டு வரும்வரை, ரஞ்சன் ஒதுங்கியே இருந்தான். அவன் மனதில் உருவாகிக் கொண்டிருந்த திட்டத்துக்கு பெரியவரிடம் என்ன பேசவும் அவனுக்கு விருப்பம் இல்லை.

அவரை வீட்டில் விட்டுவிட்டு மகாதேவன் வரும்வரை வாயில்படி பக்கமாகவே உலவிக் கொண்டிருந்தான்.

அவர் வந்ததும், "அங்கிள், உங்களிடம் ஒரு விஷயம் சொல்லிப் போகலாம் என்ற காத்திருந்தேன். ரொம்பவும் கலங்கி விடுவாளே என்று, கலையரசன் பற்றி, இதுவரை நான் அக்காவிடம் எதுவும் சொன்னதில்லை. அந்த சரளா அம்மாள், இந்த அளவுக்குப் போய்விட்டாளே எனும்போது, இனி அக்காவுக்குச் சொல்லாதிருப்பது தப்பு. அத்தோடு, இனிமேல் அனி இங்கிருப்பது கூட அக்காதான் முடிவு செய்ய வேண்டும் என்பது என் கருத்து" என்று அவன் தீர்மானமான குரலில் கூறியபோது "அது சரிதான்" என்றார் மகாதேவனும்.

"ஆமாம் ரஞ்சன் தம்பி. ஒரு தாயின் உரிமை இனியேனும், உங்கள் அக்காவுக்குக் கிடைக்கட்டும்" என்றாள் பத்மலோசனி.

"எல்லாம் உங்கள் குடும்பத்தினர் அத்தனை பேரின்

உதவியால்தான், ஆன்ட்டி. எல்லோருக்குமே, ரொம்ப ரொம்பத் தாங்க்ஸ்!" என்ற ரஞ்சன் சட்டென எழுந்தான்.

"நான் கிளம்புகிறேன் அங்கிள். இன்றைய நிலைமையில், யாரும் கூட வர வேண்டாம், ப்ளீஸ்!" என்றவன், அதற்குமேல் நில்லாமல், மடமடவென்று கதவைத் திறந்து கொண்டு வேகமாக வெளியேறிப் போய்விட்டான்.

ரஞ்சன் அவளைத்தான் தவிர்த்தான்!

ஏனிப்படி? ஏன் இப்படி என்று மஞ்சரியின் மனம் தவியாய்த் தவித்தபோதும், அவளுடைய பெற்றோருக்கு வேறுபாடாக ஒன்றும் தோன்றவில்லை போலும்?

ஏனெனில், "பாவம்! இன்றைய நிகழ்ச்சிகளில் ரஞ்சன் ரொம்பவும் களைத்துப் போனார். இன்னும், அக்காவிடம் சொல்வது வேறு இருக்கிறது. அப்புறம், அவருடைய அம்மா வேறு எப்படி எடுத்துக் கொள்ளப் போகிறார்களோ!" என்று மற்றவர்களுக்காக இரங்கியவர்களுக்குப் பெற்ற மகளைப் பற்றி எண்ணிப் பார்க்கவே தோன்றவில்லை!

அல்லது, அவ்வளவு வெளிப்படையாக, ரஞ்சன் அவளைத் தட்டிக் கழிக்கவில்லையோ? அவள்தான், அவன் விஷயத்தில் அதிகப்படியாக உணர்கிறாளோ?

என்னென்னவோ எண்ணி அவள் மனம் அலைபாய்ந்தபோதும், அடுத்துச் செய்ய நினைத்ததை அவள் மறக்கவில்லை.

காவல் அதிகாரி சகாயத்தின் அறிவுரைப்படி, அனிதாவோடு, பேசப் போனவள், மற்றவளின் சோர்வைக் கண்டு திகைத்துப் போனாள்.

ஏனிப்படி? அனியின் மனம் பாதிக்கப்படவில்லை என்று எண்ணினார்களே!

சற்று யோசித்துவிட்டு, "கலையரசனைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறாயா?" என்று நேரடியாகச் சின்னவளிடம் கேட்டுவிட்டாள்.

அவளும் "ஆஆமாம்..." என்று குரல் நடுங்கக் கூறவும், மஞ்சரிக்குத்

தூக்கிவாரிப் போட்டது!

இதை வளர விடக்கூடாதே!

அனிதாவின் கையைப் பற்றி, "அனிம்மா, உனக்குச் சரியாகச் சொன்னார்களோ, என்னவோ? அந்தக் கலையரசன் ரொம்ப மோசமானவன், தங்கம்..." என்று மஞ்சரி சொல்லத் தொடங்கவும், சின்னவள் குறுக்கிட்டு, "அதனால்தான் அவனை நினைத்து நினைத்து ரொம்பப் பயமாக இருக்கிறது!" என்றாள் குரலும், உடலும் நடுங்க மற்றவள்! "எஎன்னது?" என்று மஞ்சரி மறுபடியும் திகைத்தாள்.

அவள் என்ன, திடீரென்று மக்காகி விட்டாளா? ரஞ்சன் பற்றிய, புரியாத குழப்பம் ஒருபுறம்! இப்போது இவள்!

"அனிம்மா, நீ என்னடா சொல்கிறாய்?" என்று சின்னவளிடமே விவரம் கேட்டாள் அவள்.

"ஆமாம்க்கா. ரொம்பப் பயம்தான். போலீஸ் அதிகாரி விசாரித்த பிறகு, அவனை நினைத்தாலே நடுக்க...கமாக இருக்கிறது! அக்கா எனக்கு வீட்டிலும், பள்ளியிலும் மனம் விட்டுப் பேச ஆளே இல்லை. அதிலும் நீங்கள் வேலைக்குப் போன பிறகு, சுத்தமாக யாருமே கிடையாது. அவன் என்னமோ, நான் பெரிய ராஜகுமாரி போல நடத்தினான். அவனிடம் எல்லாம் பேச முடிந்தது. வகுப்பில் பாடம் நடத்தும்போது, ஒருத்தி குறட்டை விட்டது, மகிழம்பூ வாசம் இதெல்லாம் சொன்னால் சந்தோஷமாகக் கேட்பான். ஆனால், அதையெல்லாம் வைத்து மிரட்டுவானோ என்று இப்போது பயம்மாக..." என்று அழுதாள் பெண்.

ஒரு கவலை அகன்றவளாக "அதெல்லாம் மாட்டான் போலீசை வைத்து அடித்து மிரட்டியதில், அவன் இனி உன் பக்கம் திரும்பி கூடப் பார்க்க மாட்டான். போலீசார் மூலமாய் எல்லாம் உன் ரஞ்சன் அங்கிளின் ஏற்பாடுதான்!" என்றவளுக்கு ஒன்று தோன்ற, "வேண்டுமானால் அவரிடமே கேட்டுப் பாரேன்" என்று சொல்லி, மொபைலில் ரஞ்சனின் எண்ணை அழுத்தினாள்.

எடுக்க மாட்டானோ என்று அவள் அஞ்சியதற்கு மாறாக பேசினாலும், "வைத்துவிடு வேலையாக இருக்கிறேன்" என்று மட்டும்

கூறினான் அவன்.

குரலும் சரியில்லைதான், என்றாலும் அதுபற்றிக் கேளாமல், "வைத்து விட்டாதீர்கள். இங்கே அனிதா இருக்கிறாள். அவளுக்கு ஒரு பயம். அந்தக் கலையரசன் வந்து மிரட்டுவானோ என்று அஞ்சுகிறாள். நான் என்ன சொன்னாலும் போதவில்லை. நீங்களே தைரியப்படுத்துங்கள்" என்று வேகமாகப் பேசிவிட்டு, "இந்தாம்மா அங்கிளிடமே கேட்டுத் தெரிந்து கொள்" என்று செல்லை அனிதாவிடம் கொடுத்தாள்.

அவனும் சேர்ந்து "எதற்கு பயம்? அந்த ராஸ்கலின் வாலைத்தான் ஒட்ட வெட்டியாயிற்றே! இன்ஸ்பெக்டர் மிரட்டிய விதத்தில் ஓட்டப் பந்தய வீரன் வேகத்தில் ஓடிவிடுவான். அவனைப் பற்றிய கவலையே இல்லாமல் அனிதாவைப் படிக்கச் சொல்லுங்கள் என்று அந்தப் போலீஸ் அதிகாரி சொன்னார். அதெல்லாம் கவலையே பட வேண்டாம், சார். எங்கள் அனிதா அடுத்த டெஸ்டில் முதல் ராங்க் வருவாள் என்று சவால் விட்டிருக்கிறேன். வருவாய்தானேம்மா? என்னம்மா, சொல்லு. முதலாவதாக வந்து, என் மானத்தைக் காப்பாற்றுவாய்தானே?" என்று அவன் கேட்ட தினுசில் "கட்டாயம் அங்கிள்! நான் இப்போதே படிக்கப் போகிறேன்!" என்று உற்சாகத்துடன் உரக்கக்கூறி, மொபைலை மஞ்சரியிடம் கொடுத்தாள், ரஞ்சனுடைய அக்காள் மகள்.

அனியின் முகத்திலும் தெளிவு, மகிழ்ச்சி!

எல்லோருக்கும் உற்சாகத்தைத் தருகிறவன், அவளை ஏன் ஒதுக்குகிறான்?

தன்னையறியாமல் "ரஞ்சன்.. என்று அவள் குரல் தழுதழுக்க, அவன் குறுக்கிட்டான்.

"என் அக்கா மகளுக்காக இவ்வளவு முயற்சி எடுப்பதற்கு மிக்க நன்றி, மஞ்சரி. வைத்துவிடுகிறேன்" என்றவன், அந்த வினாடியே செல்லை அணைத்தும் விட்டான்.

என்னவோ இருக்கிறது. அது என்னவாக இருக்கும்? அவளுடன் பேசக்கூட ஏன் மறுக்கிறான்?

தம்பி விவரம் முழுவதும் சொல்லவும், சுமாலினி உடனே கிளம்பி விட்டாள்.

வீட்டுக்குச் சென்று, துணிமணி எடுத்து வைத்தபடி, நிர்வாகிக்கு அவள் உத்திரவுகள் பிறப்பிப்பதைக் கேட்ட அன்னை, விவரம் அறிந்ததும் தானும் கிளம்பினாள்.

"என் பேத்திடீ! பார்த்தே பதினாலு பதினைந்து வருஷமாச்சுதே! என் கண்ணு முழுசாக வளர்ந்திருப்பாளே! ஐயோ பாவி, நீ கூடச் சொல்லாமலே இருந்துவிட்டாயே!" என்று புலம்பிய கனகத்தின் கண்ணீர் திடுமென நின்றது.

"அப்படியே அந்தப் பெண்ணையும் பார்த்து வரலாமே!" என்றாள் ஆர்வத்துடன்.

"அம்மா ப்ளிஸ்! கொஞ்சம் அடக்கி வாசியுங்கள். போனதும் தட்டுப் புட்டுன்னு ரஞ்சியிடம் ஏதாவது கேட்டு வைக்காதீர்கள். அவன் முகம் திருப்பிக் கொண்டான் என்றால் மாற மாட்டான். இப்போது அனிதா விஷயமாக கூப்பிட்டிருக்கிறான். அது நல்ல விதமாக முடியட்டும். அப்புறமாகப் பார்ப்போம்" என்றாள் மகள்.

அமைதியாகக் காட்டிக்கொண்டபோதும், மகளின் தவிப்பு, அந்தத் தாய்க்குப் புரியாமல் இல்லை. பேசத் தெரியாத சின்னக் குழந்தையைப் பிடுங்கிக் கொண்டு போனார்கள். இப்போது பதினாறு வயதுப் பெண்ணாய் பார்த்துப் பேசுகிறபோது, என்ன நடக்கும் என்று யாருக்கு தெரியும்?

தாயையும், சின்ன மகளையும் ஹோட்டலில் விட்டுவிட்டு, சுமாலினி தம்பியோடு கிளம்பிப் போனாள். முதலில் மஞ்சரியின் வீட்டுக்குத்தான் போனார்கள்.

தன் மகளுக்காக அந்தக் குடும்பம் செய்த அனைத்துக்கும் முதலில் மனதார நன்றி சொல்லிவிட்டு, சுமாலினி எழுந்தாள்.

கூட எழுந்த தம்பியை தலையசைத்துத் தடுத்தாள் "இல்லை ரஞ்சி. நான் மட்டுமாகத்தான் போக வேண்டும். இதில் நான் யாரையும் சார்ந்திருக்கக் கூடாது. உன்னையும்தான்"

"அக்கா..."

"ஒன்றும் பயமில்லையடா. நான் பழைய சுமாலினியில்லை, தேவைப்பட்டால் உரக்க ஒரு சத்தம் கொடுக்க மாட்டேனா?" என்று அவனை நிறுத்திவிட்டு, மெல்லப் படியிறங்கிச் சென்றாள்.

ஆனால் அங்கே நடந்ததே வேறு.

சற்றும் எதிர்பாராமல். மூத்த மருமகளைக் காணவும், சுமாலினியுடைய மாமியார் அவளை அப்படியே கட்டிப் பிடித்துக் கொண்டு கதறி அழுதுவிட்டாள்.

"ஐயோ, என் தங்கமே! உன்னை என்ன பாடு படுத்திவிட்டேன்? என்ன கொடுமை பண்ணினேன்? இந்தப் பாவியை மன்னிப்பாயா என் செல்லமே!" என்று உரக்கவே அழுது புலம்பினாள்.

என்ன சத்தம் என்று பின்புறத் தோட்டத்திலிருந்து வந்த மாமனார் திகைத்து நிற்க, அதே காரணத்தால், சத்தம் வந்த திசையை நோக்கி, அனிதாவும் வந்து சேர்ந்தாள்.

விழி அகல நின்ற பேத்தியைப் பார்த்ததும், "வா கண்ணு. உன் அம்மாடா, பத்து மாசம் உன்னைச் சுமந்து பெற்றுத் தந்தவள், நீ வளர்ந்தபோது இவளைப் பற்றி முன்னே நாங்கள் பேசியது எல்லாமே தப்பும்மா. உன் சித்திதான் மோசம். சின்னம்மா மட்டுமில்லை. அவளுக்காக, அவளோடு சேர்ந்து என்னென்னமோ தப்புகளைச் செய்த நானும் மோசம்தான் கண்ணு!" என்று செய்த தப்புகளுக்கெல்லாம் பரிகாரம் செய்துவிடும் வேகத்தில், பாட்டியின் வார்த்தைகள் ஒன்றோடொன்று முட்டி மோதி ஓடிவர, ஒன்றிரண்டு புரியக்கூட இல்லை!

மாடிப்படி தொடங்கும் இடத்தில் நின்று கவலையோடு கவனித்துக் கொண்டிருந்தவர்கள் முகத்தில் நிம்மதி பரவியது.

"அனி பாட்டி மாறியிருக்கிறார்கள் என்று, நான்தான் சொன்னேனே!" என்றாள் பத்மலோசனி.

"ஆமாம், லோ...சனி. உன்னைப் போலக் கெட்டிக்காரி உலகத்திலே உண்டா?" என்று மகாதேவன் கிண்டலடிக்க, ரஞ்சனின் இறுகிய முகத்தில் கூட சின்னதாய் ஒரு முறுவல் படர்ந்தது.

அப்போதும் அவன் முகம் சரிவரத் தெளியாததைக் கண்டு "என்ன

ரஞ்சன் தம்பி?" என்று பத்மலோசனி வினவினாள்.

"இன்னும் அனியின் சத்தம் கேட்கவே இல்லையே! அவள் அக்காவை எப்படி ஏற்பாளோ?" என்று கவலைப்பட்டான் சுமாலினியுடைய தம்பி.

"கவலையே படாதீர்கள். பாட்டி மாறியிருப்பது மட்டுமில்லை. உங்கள் அக்கா திறமைசாலி, நல்லகுணம், எந்த நிலையையும் சமாளிப்பாள்!" என்றாள் பத்மா.

ஆமாம். எல்லோரையும் கண்டுகொள்ளத் தெரிகிறது! என்னைத்தான் நினைப்பதே இல்லை போல என்று உள்ளூர எரிச்சல்பட்டாள் மஞ்சரி.

பாட்டியின் பேச்சைப் புரிந்து கொள்ள முடிந்ததோ இல்லையோ, தட்டி விழிக்க மறந்தவள் போலத் தாயின் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்ற மகளைக் கவனித்துவிட்டு, "அத்தை..." என்று தயக்கத்துடன் மாமியாரின் பேச்சில் சுமாலினி குறுக்கிட்டாள்.

"என்னம்மா தங்கம்?" என்று பெரியவள் வினவவும், "சற்று நேரம் என் மகளுடன், நான் தனியாகப் பேசலாமா?" என்று கேட்டாள்.

"ஐயோ, உன் மகள், தாயி! அவளோடு பேச நீ என்னிடம் கேட்க வேணுமா? பச்சைப் பிள்ளையை உன்கிட்டே இருந்து பிடுங்கிக் கொண்டு வந்தது, இப்போது என் மனதை ரம்பமாக அறுக்குதே! மகள்கிட்டே தனியாகப் பேசலாமா என்று கேட்கிற நிலையிலே தாயை வைத்து விட்டேனே, பாவி! போம்மா. போய்த் தாராளமாகப் பேசும்மா!" என்றாள் மாமியார் கம்மிய குரலில்.

"போங்கள், அனி அறையிலேயே போய்ப் பேசுங்கள். அம்மாவைக் கூட்டிப் போ அனிம்மா. அனிக்கண்ணு, இவள் உன் நல்ல அம்மாடா!" என்றார் தாத்தா பேத்தியிடம்.

நன்றியுடன் நோக்கிவிட்டு, சுமாலினி மகளுடன் சென்றாள்.

"நல்ல குடும்பம் என்றால், நல்ல குடும்பம்தான். நடந்த விஷயங்களுக்கு நாக்கை பிடுங்கிக் கொள்கிற மாதிரி ஒரு வார்த்தை கேட்டாளா, பார்!" என்றார் பெரியவர்.

வழிகிற கண்ணீரைத் துடைத்தபடியே, மருமகளும் பேத்தியும்

சென்ற திசையை பார்த்தாள் அவருடைய மனைவி.

தாயும் மகளும் சற்று நேரத்தில் வெளியே வந்துவிட்டனர். வரும்போது இருவர் கண்களிலும் சிவப்பு தெரியத் தாயின் தோளில் சாய்ந்தவாறே அனிதா வந்தாள்.

கண் கலங்க "அனிக்கண்ணு ரொம்ப அழுதாளோம்மா?" என்று கவலையோடு கேட்டாள் பாட்டி.

மகளின் கன்னத்தை வருடி "முதலில் மட்டும்" என்றாள் மருமகள். "அப்புறம் அவளை நான் சின்ன வயதில் இருந்து எடுத்த படங்களைக் காட்டியதும், அம்மா அடியோடு விட்டுவிடவில்லை என்று தெரிந்து, சரியாகிவிட்டாள்" என்றாள் மருமகள்.

மாமனார் தொண்டையைச் செறுமிய அதேவேளையில் "வந்து... என்று தொடங்கிய சுமாலினி சொல்ல வந்ததை நிறுத்திக்கொண்டு, "நீங்கள் சொல்லுங்கள்" என்றாள்.

"இல்லையம்மா, நீயே சொல்லு" என்று அவர் கூறவும், "இந்த வயதில் பெண் குழந்தைகள் தாயோடு இருப்பது நல்லது. அதனால், அனியை நான் கூட்டிப் போகிறேன்" என்று மெல்லிய, ஆனால் உறுதியான குரலில் சுமாலினி கூறினாள்.

மனைவியைப் பார்த்துவிடடு, "நானும் அதைத்தான் சொல்ல வந்தேன், சுமாலினி. உன் கூட இருந்திருந்தால் என்னென்னவோ நடந்திராது" என்றார் அவர் வருத்தமான குரலில்.

தொடர்ந்து "ஆனால் அப்பப்போ அனியை வந்து பார்க்க... என்று அவர் நிறுத்தவும், அனி ஓடிப்போய் அவர் தோளில் சாய்ந்து கொண்டாள்.

"நீங்களும் பாட்டியும் கட்டாயம் வர வேண்டும் தாத்தா!" என்ற பேத்தியின் கூந்தலை ஆறுதலோடு வருடிக் கொடுத்தார் பெரியவர்.

"ஆமாம் கட்டாயம் வந்து உங்கள் பேத்தியை..." என்ற சுமாலினி, உதட்டைக் கடித்துக் கொண்டு ஒரு கணம் பேச்சை நிறுத்தினாள்.

பிறகு "வந்து... உங்கள் இருவரிடமும் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும்" என்று கைப்பையில் இருந்த அடுத்த மகளின் படத்தை எடுத்து மாமியாரிடம் கொடுத்தாள்.

"உங்கள் அடுத்த பேத்தி" என்றாள் மென்மையாக.

ஆவலோடு வாங்கிப் பார்த்தபடி, "அப்போது எனக்கு சந்தேகம் இருந்தது. ஆனால் ஒரு தகவலும் இல்லாததால், இல்லை போல என்று நினைத்தேன். இவளும் அனி போல நல்ல அழகு, குறுகுறு என்று கண்களைப் பாரேன்..." என்றவள் திடுக்கிட்டுக் கேள்வியாக மருமகளை பார்த்தாள் "அ..அப்படியானால், ர... ரஞ்சன் உன் தம்பியா? அதே கண்கள்! அனிக்கு உன்னைப் போல அமைதியான கண்கள்... ஐயோ, அதனால்தான் அனிக்காக அந்தப் பிள்ளை இத்தனை பாடு பட்டிருக்கிறான்" என்றாள் பெரியவள்.

"கொண்டா பார்ப்போம்" என்று வாங்கிப் பார்த்துவிட்டு, "உன் தங்கைடாக் கண்ணு" என்று பேத்தியிடம் கொடுத்துவிட்டு, "இனி உயிலை மாற்றி, இரண்டு பேருக்குமாக எழுதி வைக்க வேண்டும்" என்றார்.

"அது.. அவர்கள் ரொம்ப ஆசைப்பட்டால் அவர்களுக்கே கொடுத்து விடுங்களேன் மாமா. கோவையில் தொழில் நன்றாகத்தான் நடக்கிறது. இருவருக்கும் போதும்" என்றாள் சுமாலினி.

"எப்படியும் எங்கள் பேத்திகளுக்கு நாங்கள் செய்ய வேண்டாமா? இவ்வளவு சூழ்ச்சி செய்தவளிடம் இந்த இடம் போவதை என்னால் தாங்க முடியாதும்மா" என்றார் அவர் பிடிவாதமாக.

"உங்கள் இஷ்டம். ஆனால் எப்போது வேண்டுமானாலும் பேத்திகளைப் பார்க்க தாராளமாக வாருங்கள்." என்று சுமாலினி சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அவளது செல் ஒலித்தது.

சுமாலினி தாயார் கனகம்தான்.

"பிரச்சினை ஏதுவும் இல்லையே?" என்று விவரம் தெரிந்து கொண்டு "ரஞ்சன் திருமணம் பற்றிப் பேசினாயா?" என்று வினவினாள்.

"இன்றைய இரவை நீங்களும் வாருங்கள். எல்லோருமாகப் போய் பானி பூரி செய்து விடலாம். ஹோட்டல் டாக்சியில் வாருங்கள் பில்லில் சேர்த்துவிடச் சொல்லுங்கள்" என்று தாயிடம் கூறிவிட்டு, மற்றவர்களிடம் திரும்பினாள். "உங்கள் சின்னப் பேத்தி வரப் போகிறாள். அனிம்மா உன் தங்கையை நேரிலே பார்க்கப் போகிறாய்"

என்று புன்னகை செய்தாள்.

பெரிய விழிகளை அகல விரித்து "அம்மா, அவளுக்கு என்னைப் பிடிக்குமா?" என்று கவலையோடு கேட்டாள் பெண்.

மகளின் கன்னத்தை வருடி "கட்டாயம்! ஆனால், யார் சாக்கலேட் கொடுத்தாலும், அவர்களைக் கட்டாயம் பிடிக்கும்" என்று நகைத்தாள் தாய்.

"எங்... நம்ம அனிக் குட்டியை யாருக்காவது பிடிக்காமல் போகுமா?" என்று பெருமிதமாகச் சொன்னபோதும், சுமாலினியிடம் என்ன சாக்கலேட் என்று கேட்டு, வேலையாளைக் கூப்பிட்டு அதை வாங்கி வரச் சொன்னாள் பாட்டியம்மா.

பழைய நினைவில் சற்றுக் கவலையுடனேயே வந்த கனகத்துக்குப் பயங்கர வரவேற்பு!

அந்த வரவேற்பு தந்த சந்தோஷத்தில் மாடிக்குச் செல்ல, சம்பந்திகளையும் கூப்பிட்டுக் கொண்டாள் அவள்.

"என்னடா கண்களா, அக்காவும் தங்கையும் தனியாகப் பேசிக் கொண்டிருங்கள். கொஞ்ச நேரத்தில் கூப்பிடுகிறேன்" என்று சென்ற தாயை பார்த்து "ஹூம்! பெரீய இது!" என்று தோளைக் குலுக்கினாள் சின்னவள்.

பெரியவர்கள் எல்லோரும் படியேறிச் சென்றபின் "ஏன்? எதற்கு அப்படித் தோளைக் குலுக்கினாய்?" என்று விசாரித்தாள் அனி.

"அதை அப்புறம் சொல்லுகிறேன், முதலில் இதைச் சொல்லு. நீ நன்றாகப் படிப்பாயா? என்று கேட்டாள் தங்கை.

"ம் படிப்பேனே! நடுவில் கொஞ்சம் விட்டுவிட்டேன் ஆனால், மறுபடியும் முதல் ரேங்க் வந்துவிடுவேன்"என்றாள் தமக்கை பெருமையோடு.

ஆனால் "போச்சுடா!" என்று சுப்ரியா தலையில் கையை வைத்துக் கொள்ளவும், திகைத்துப் போய் "ஏன் என்ன விஷயம் நன்றாகப் படிப்பது நல்லதுதானே?" என்று வினவினாள் அனிதா.

"நல்லதுதான் நல்லதுதான், ஆனால் அக்காவைப் போலப் படி என்று எல்லோரும் என் உயிரை வாங்கப் போகிறார்களே, அதுதான்

கவலையாக இருக்கிறது!" என்று காரணம் சொன்ன தங்கையை வியப்புடன் பார்த்தாள் மற்றவள்.

"சரி அதைவிடு. யுவராஜ் என்ன விளையாட்டுப் பிடிக்கும்...?" என்று சுப்ரியா கேட்க அப்படியே இருவரும் சளசளக்க தொடங்கினார்.

அக்காவும் தங்கையும் இங்கே கலகலப்பாகப் பேசிக் கொண்டிருக்க, மாடியில் பேச்சு வேறு விதமாகப் போயிற்று.

சுமாலினி திருமணப் பேச்சை எடுக்க, மற்ற எல்லோரும் சம்மந்தமாகப் பேசும்போது, முக்கியமான இருவரும் முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்றனர்.

"அக்கா சும்மா இரு" என்று ரஞ்சன் தமக்கையிடம் அடிக் குரலில் தடுக்க "முதலில் அவரிடம் கேட்டுவிடுங்கள். அவருக்குப் பிடிக்கவில்லை என்று தெரிகிறது" என்றாள் மஞ்சரி.

"என்னது?" என்று அதிர்ந்தாள் சுமாலினி.

"முதல் தடவை இங்கே வந்தபோதே, அவனுக்கு முந்திரிக்கொத்து முறுக்கு வைத்துக் கொடுத்தது பற்றி, என்னிடம் சொன்னான். 'மாப்பிள்ளை உபச்சாரமா' என்று நான் கேலியாகக் கேட்டேனா? அவ்வளவுதான் ஐயா அப்படியே கனவுலகத்துக்குள் போய், எதிரே இருந்த என்னை அடியோடு மறந்தே போனான். தட்டி எழுப்ப வேண்டியதாக இருந்தது! அம்மாடியோவ்! அப்போது ரஞ்சி முகத்தைப் பார்க்க வேண்டுமே! அப்போதிருந்தே தம்பி மனதில் நீதான். என்னடா, உண்மைதானா இல்லையா?" என்று ரஞ்சனிடம் அதட்டிக் கேட்டாள்.

"ஷ். என்னக்கா நீ? இதையெல்லாம் அப்புறம் பேசுவோமே!" என்று பேச்சைத் தவிர்க்க முயன்றான் ரஞ்சன்.

அதெல்லாம் அப்புறம்? உண்மையை மறைத்துப் பேச வேண்டிய அவசியம் யாருக்கும் இங்கே இல்லை. அதனால், எதுவானாலும் சும்மா சொல்லுடா" என்றாள் அவள் விடாமல்.

அடியேய். யாருக்கும் தெரியாமலே, நான் கூட ஒருநாள் கழித்து அவளிடம் பேசினேன் என்று கேள்.. அப்போது சந்தோஷமாகத்தானே பேச மாதிரி இருந்தது?" என்ற சம்பந்தி

அம்மாளை வியப்பும் நன்றியுமாக நோக்கினாள் கனகம். "இம்! அப்புறம் என்னடா?" என்று சுமாலினி கிடுக்கிப்பிடி போட, வேறு வழியின்றி, தன் காரணத்தை ரஞ்சன் தெரிவித்தான்.

"அக்கா, சொன்னால் உனக்குக் கஷ்டமாக இருக்கும் என்று பார்த்தால், நீ விட மாட்டேன் என்கிறாயே. சரி, கேட்டுக்கொள். எப்போதும் என் வாழ்வில் முதல் இடம் உனக்குத்தான் அடுத்து உன் மகள்கள். நான் திருமணம் செய்து கொண்டால், இதைச் சரியாக செயல்படுத்த முடியாது. அதனால் எனக்குத் திருமணமே வேண்டாம்" என்று போட்டு உடைத்தான் அவன்.

எல்லோரும் திகைத்து நோக்க, "என்ன மட்டித்தனம்!" என்றாள் சுமாலினி. "உன்னை புத்திசாலி என்று நினைத்தேனே, தம்பி! இதைவிட, ஒரு நாத்தனாரைத் தம்பி மனைவிக்கு விரோதியாக்க யாராலும் முடியாது, தெரியுமா?" என்றாள் கோபமாக.

"அக்கா?"

"போடா முட்டாள்! என்னை அறிந்தது இவ்வளவுதானா? நீ மனைவி குழந்தை என்று இல்லாமல் தனியாக நின்றால் எனக்கு சந்தோஷமாக இருக்குமா? நான் என்ன அவ்வளவு சுயநலவாதியா? நம்மால்தானே தம்பி இப்படி இருக்கிறான் என்று குற்ற உணர்விலேயே, செத்துவிட மாட்டேன்?"

துடித்துப்போய் "அக்கா, ப்ளீஸ் இப்படிப் பேசாதே!" என்றான் தம்பி.

"யோசி, இதே ரத்தம்தானே என் உடலிலும் ஓடுகிறது? நீ நன்றாக இருக்க வேண்டும் என்று எனக்கு இராதா? இன்னும் யோசி, அனிக்கு இவ்வளவு தூரம் உதவியிருக்கிறாள். இவளா எங்களிடம் பிரியமற்று நடப்பாள்?

"அத்தோடு தம்பி, நான், என் பிள்ளைகள் ஒரு தனிக் குடும்பம். நீயும் மனைவி பிள்ளைகள் என்று தனிக் கூடு அமைத்தால்தான் நம் எல்லோருக்குமே சிறப்பு. எனக்கும் நிம்மதி. அசட்டுத்தனமாக அதைக் கெடுக்காதே" என்று முடித்தாள் தமக்கை.

"ஆனால் அக்கா, அப்பா அப்படிச் சொன்னாரே?"

"அப்பா எனக்கு ஆண் உதவி தேவை என்றால் செய்யச் சொல்லியிருப்பார். அனியும் சுபியும் வளர்ந்ததும் மாப்பிள்ளை பார்ப்பது போன்றதில் உன் உதவியை நான் கேட்கத்தான் செய்வேன். அதற்காக அன்றாட வாழ்க்கையிலும் உன்னைக் கேட்டா செய்வேன்? அதிலெல்லாம் நீ தலையிட்டால் எனக்கே பிடிக்காதே! அப்புறம் நாம் இருவருமே சிண்டை பிடித்துக்கொண்டு நிற்க வேண்டியதுதான். போடா போ! மனதில் அவ்வளவு ஆசையை வைத்துக்கொண்டு சார், அக்காவுக்காகத் தியாகம் பண்ணுகிறீர்களாக்கும். நல்லபடியாகத் திருமணம் செய்துகொள். அதுதான் எனக்கு சந்தோஷம்.சுபிம்மா வேறு அதே ஆசையாக வந்தாள்... அவளிடமே கேட்டுத்தான் பாரேன்!" என்று சுமாலினி கூற, ஒரு வழியாக ரஞ்சனின் முகத்தில் தெளிவு வந்தது.

இவ்வளவுக்கு மேல், மஞ்சரி என்ன நினைப்பாளோ என்று கவலையோடு ரஞ்சன் அவளைப் பார்க்க, அவள் செல்லக் கோபமாய் உதட்டைச் சுழிக்க, அவன் நெஞ்சில் கை வைத்துப் பார்வையாலே மன்னிப்பு வேண்ட, போனால் போகிறது என்பது போல அவள் கண்ணிமைக்க, பார்த்துக் கொண்டிருந்த எல்லோரும் ஆனந்தமாக நகைத்தனர்.

"நிஜமாகவே மாப்பிள்ளை உபசாரமாகக் காஃபி பலகாரம் பரிமாறலாமா?" என்று பத்மலோசனி எழ, இன்னுமொரு சிரிப்பு அலை எழுந்தது.

சிரிப்பினூடே "பிள்ளைகளைத் தனியாக விட்டுவிட்டு வந்தோமே..." என்று எழுந்தார் பெரியவர்.

ஆனால், அதற்குள்ளாகவே மாடிப்படிப் பக்கம் சின்னப் பெண்ணின் சத்தம் கேட்டது.

அதற்குமுன்னதாக "தோளைக் குலுக்கியது பற்றி அப்புறம் சொல்கிறேன் என்றாயே, என்னது?" என்று அனிதா தங்கையிடம் [illegible].

"அ...ம்மா, பெரியவர்கள் பேச்சாம் நமக்குத் தெரியக் கூடாது என்று நிறுத்திவிட்டுப் போகிறார்கள் அவர்கள் பேசுகிற விஷயம் நமக்குத் தெரியாதா, என்ன? சொல்லு, அந்தை விஷயம் எந்த அளவில்

இருக்கிறது?" என்று கேட்டாள் சின்னவள்.

"எந்த அத்தை? யார் அத்தை?" என்று குழப்பத்துடன் கேட்டாள் பெரியவள்.

"போச்சுடா! சரியான தத்தியாக இருப்பாய் போல! இங்கே என்னமோ நடக்கிறது என்று, நாங்கள் கோயமுத்தூரில் இருந்து வந்திருக்கிறோம். பக்கத்திலேயே இருக்கிற உனக்கு ஒன்றும் தெரியாதா வா, அங்கே போய்ப் பார்ப்போம்" என்று அனியைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு கிளம்பினாள். சுப்ரியா.

இருவருமாக பாதிப்படி ஏறும்போது "ஓ... அக்கா... மஞ்சு அக்காவா அத்தை?" என்று அனிதா ஆச்சரியத்தோடு வினவினாள்.

"அப்பாடி, ஒருவழியாகக் கண்டுபிடித்து விட்டாயே! பரவாயில்லை, ரொம்ப மோசமில்லைப்பா!" என்று சுப்ரியா கண் சிமிட்ட, இருவரும் நகைத்தபடியே மாடி வீட்டுக்குள் சென்றனர்.

இனிய சிரிப்பொலி எல்லோரையும் கவர்ந்து, அவர்களை நோக்கி திரும்ப வைத்தது.

மலர்ந்த முகத்துடன் நின்ற மஞ்சரியைப் பார்த்து, "இதுதான் அத்தையா?" என்று தமக்கையிடம் கேட்டாள் சுப்ரியா.

"ஆமாம்,எங்கள் மஞ்சு அக்கா! இனிமேல் அத்தை!" என்று அனிதா பெருமையாக அறிவிக்க, அங்கிருந்த எல்லோரும் சேர்ந்து சிரித்தனர்.!

சுபம்